# சாயி மார்க்கம்

ஜனவரி - ஜூன் 2016




## தேசிய இளைஞர் மாநாட்டு சிறப்பு மலர்

இலங்கை ஸ்ரீ சத்திய சாயி சேவா நிறுவனத்தின்

தமிழ் சஞ்சிகை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











தேசிய இளைஞர் மாநாட்டு நிகழ்வுகள்- கிழக்குப்பிராந்தியம்







உலக இளைஞர் திருவிழா அங்குரார்ப்பண வைபவம் - பிரசாந்தி நிலையம்
புட்டபர்த்தி - ஜூலை 2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ சாயிராம்

# சாயி மார்க்கம்
# Sai Markam

மலர்: 23
இதழ்: 56

ஜனவரி
ஜூலை
2016

## தேசிய இளைஞர் மாநாட்டு சிறப்பு மலர்

**ஆசிரியர்:**
Dr.R.கணேசமூர்த்தி
659, நாவலர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்
தொ.பே. 021 222 2832 / 5580
Email:moothy1941@yahoo.com

**துணை ஆசிரியர்:**
திரு.S.R. சரவணபவன்
பிள்ளையார் கோவிலடி
தாவடி, கொக்குவில்
தொ.பே - 021 222 5442

இலங்கையில் தனிப்பிரதி ரூபா 60.00
வருடச் சந்தா ரூபா 240.00 (4 பிரதிகள்)

வெளிநாடு:
வருடச் சந்தா 15 அமெரிக்க டொலர்

**சந்தா அனுப்ப வேண்டிய முகவரி**
ஆசிரியர்,
சாயி மார்க்கம்,
659, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

**காசோலை:**
Sai Markam
Sathya Sai Seva Organisation (NZ)
A/C No: 016010004771
**SWIFT CODE: HBLILKLXXXX**
Hatton National Bank
Jaffna, Sri Lanka.

## உள்ளே......

| | |
|---|---|
| ஆசிரியர் தலையங்கம் | 02 |
| தேசிய இளைஞர் மாநாட்டிலிருந்து (1ஆம் நாள்) | 03 |
| தேசிய இளைஞர் மாநாட்டிலிருந்து (2ஆம் நாள்) | 13 |
| யாழ்ப்பாணத்தில் தீபக் ஆனந் ஆற்றிய உரை | 18 |
| யாழ்ப்பாணத்தில் தீபக் ஆனந் - கேள்வி பதில் | 25 |
| சத்திய சாயி பாடசாலையில் தீபக் ஆனந் | 29 |
| ஊர்மில் ஆனந் ஆற்றிய உரை | 33 |
| குற்றம் - மன்னிப்பு -சோதனை - ஆட்கொள்ளல் | 34 |
| சோதனை மேல் சோதனை | 36 |
| நாமும் சாயி வழி வாழ்வோம் | 38 |
| வானிலிருந்து குண்டு மழை பொழிந்தது | 40 |
| கேள்வி பதில் | 42 |
| மலரடி மலர்கள் | 43 |
| ஸ்ரீ சத்திய சாயி ஆராதனா மஹோற்சவத்தை முன்னிட்டு நரேந்திரநாத் வெளியிட்ட செய்தி | 45 |
| நிறுவனச் செய்திகள் | 47 |

NATIONAL SAI YOUTH CONFERENCE
DIVINE LOVE
April 2016 Sri Lanka

**ஒரே ஒரு மதம் அது
அன்பென்னும் மதம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரிய தலையங்கம்

# வேகமும் விரிவும் பிரிவும் ஒன்று இணைந்ததா?

அவதாரங்கள், மத ஸ்தாபகர்கள் தங்களது போதனைகள் திரிவுபடாமல் இருப்பதற்காக ஒரு நிறுவனத்தை ஸ்தாபித்து சென்றுள்ளார்கள். அவர்கள் தங்களுக்குப் பின்பு ஒரு தலைவனை நியமித்ததில்லை. மனிதருமோ போதனைகளைத் தம் தம் மூளைக்கெட்டியவாறு விளங்கி விமர்சிக்கத் தொடங்கினார்கள். தலைமைத்துவ முரண்பாடு, போதனைகளில் சில பந்திகளையோ அல்லது வசனங்களையோ விமர்சிப்பதில் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டு ஒரு நிறுவனம் பிரிவடைவது சரித்திரம் தந்த உண்மை.

உதாரணமாக கிறிஸ்தவ மதம் கருத்து முரண்பாடுகளாலும், நிர்வாக முரண்பாடுகளாலும் பலவாகப் பிரிந்து ஆனால் பரவலாகப் பரந்து செயற்படுவதை நாம் பார்க்கிறோம். மேலும் புத்தமதத்தில் புத்தபிரான் தனக்குப் பிறகு ஒரு தலைவரையும் நியமிக்காத படியாலும் கருத்து வேறுபாட்டாலும் இரண்டு பெரிய பிரிவுகளாகப் பிரிந்து செயற்படுகின்றது. புத்த சமயமும் எங்கும் பரந்துள்ளது. இஸ்லாமிய சமயத்தில் முகம்மது பெருமானார் தனக்குப் பிறகு ஒரு தலைவரையும் குறிப்பிடவில்லை. அவரின் சுற்றத்தவர்களிடையே தலைமைத்துவ முரண்பாடு ஏற்பட்டு இரண்டு பிரிவுகளாகப் பிரிந்து உலகெங்கும் பரவியுள்ளது.

தற்போது சுவாமியின் போதனையும் அவரின் பணியும் வேகமாகவும், பரவலாகவும் செயற்படுத்தப்படுவதனால் கருத்து வேறுபாடு, பிரிவுகள் உண்டாவதைத் தவிர்க்க முடியாதா என்று நாம் யோசிக்கலாம். சுவாமி ஒற்றுமையே ஆன்மீகப் பாதையின் அடித்தளம் என்று கூறியுள்ளார். சுவாமியின் பக்தர்கள் பிரிவு பட்டாலும் காலப் போக்கில் ஒன்று சேர்வார்களென்பது எமது நம்பிக்கை.

மகாபாரதத்தில் நடந்த ஒரு நிகழ்வின் மூலம் மேலும் கூட விளங்கிக் கொள்ளலாம். கிருஷ்ணபகவான் பிருந்தாவனத்தில் கோபி கோபாலர்களுடன் மந்தைகளுடன் விளையாடி, அவர்களிடையே இருந்த அன்பு ஆழமாகியது அப்போது கோபியருக்கு பகவான் பிருந்தாவனத்தை விட்டுச் சென்று பாரிய அற்புதங்களைச் செய்வாரென எதிர்பார்க்கவில்லை. அவர் மதுரைக்குப் போகத் தீர்மானித்ததும் கோபியர்கள் முழுமையான சரணாகதி மனப்பாங்கில் வாழ்ந்தார்கள். அவர்கள் பகவான் போவதைத் தடுக்கவில்லை. பகவானுக்கே எல்லாம் தெரியும் என்று சரணாகதி நிலையில் இருந்தார்கள். அவர்கள் கண் கலங்கினாலும், எல்லோரும் கிருஷ்ணரை தங்களுக்குள்ளே உணரத் தொடங்கி விட்டார்கள். இதன் பிறகு துன்பமோ பிரிவோ இருக்கவில்லை. பகவான் தங்களுக்குத்தான் உரியவர் என்றில்லாமல் பகவான் எல்லோருக்கும் உரியவர் , நாங்கள் அவருக்கு உரியவர் என்று விளங்கிக் கொண்டால் முரண்பாடு எழமாட்டாது. பகவான் விரும்பிய இடங்களுக்குப் போவதை நாம் தடுக்க முடியாது. சுவாமியின் பணி மேன்மேலும் விரிவாகவும் பரவலாகவும் நடைபெறும். விதை மறைந்து மரமாக மிளிர்வதைப்போல், சுவாமியும் உலகமெங்கும் தனது பணியைத் தீவிரமாக ஆரம்பித்து விட்டார். மரத்தை அதனிருந்து எழும் மலர் கனிகளைக் கொண்டே மதிப்பிடலாம். புட்டபர்த்தி தலைமை அலுவலகமாக எப்போது மிருக்கும்.




ஆண்டவனின் வெளிப்பாடுகளைக் கண்டு நாம் ஆனந்தம் அடைந்து மேன்மேலும் ஆன்மீகப் பாதையில் முன்னேறுவோமாக

ஜெய் சாயிராம்

ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சத்திய சாயி நிறுவனம் ஸ்ரீலங்கா
# தேசிய சாயி இளைஞர் மாநாடு - 2016

இம் மாநாடு மட்டக்களப்பில் ஏப்ரல் மாதம் 29 - 30 ஆம், மே மாதம் 1 ஆம் திகதியும் மைலாம்பாவெளி கருணாலயம் வளாகத்தில் நடைபெற்றது.

புட்டபர்த்தியில் நடைபெறவுள்ள சர்வதேச நாடுகள் பங்கு பற்றும் உலக இளைஞர் திருவிழாவிற்கு முன்னோடியாக ஒழுங்கு செய்யப்பட்டது.

பலநாடுகளில் நடாத்தப்படும் மாநாட்டிற்கு தெரிந்தெடுக்கப்பட்ட மையக் கருத்து
"அன்பு தான் மூலாதாரம்
அன்புதான் பாதை
அன்பு தான் நோக்கு"

இதையொட்டி மட்டக்களப்பில் நடந்த மாநாட்டின் மையக் கருத்து "தெய்வீக அன்பு" என்பதேயாகும். இம்மாநாட்டிற்கு சத்திய சாயி உயர் கல்வி நிறுவனத்தின் உதவிப் பேராசிரியரான கலாநிதி தீபக் ஆனந் என்பவரை வரவேற்றிருந்தார்கள். அவருடன் அவரது தாயாரும் வருகை தந்திருந்தார். அவரைப்பற்றிய அறிமுகம்.

கலாநிதி தீபக் ஆனந், உதவிப் பேராசிரியர் முகாமைத்துவ வணிகபீடம் Dr. Deepak Anand, B.com (Delhi), M.Bcom(Delhi), MBA (SSHL) PhD in International Finance Administration MBL (Final Year) 16 ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதியுள்ளார். சுவாமியின் முன்னிலையில் பல தடவைகள் உரையாற்றியுள்ளார். நாடகத்தில் நடித்தும் இயக்குனராகவும் செயற்பட்டுள்ளார்.

**29.05.2016 அன்றைய உரைகளின் சாராம்சம்.**

ஓம்காரம், சுப்ரபாதம், காயத்ரீ ஜெபம், வேதம் ஓதுதல், பஜன், ஆராத்தியுடன் மங்கள விளக்கேற்றி நிகழ்வு ஆரம்பமாகியது.

தேசிய இளைஞர் இணைப்பாளர் டாக்டர்.ஜெ. தனேஸ்குமார் அவர்கள் ஆற்றிய அறிமுக உரை

எனது இதய பூர்வமான நமஸ்காரங்களை, எங்கும் நிறைந்திருக்கின்ற, எல்லாம் வல்லமைகளும் நிறைந்த இவ் இளைஞர் மாநாட்டுக்கு பிரதம அதிதியாக உள்ள பகவானின் பொற்கமலப் பாதங்களில் சமர்ப்பிக்கின்றேன். எங்களின் இதயங்களை தனது இருப்பிடமாக்கியுள்ள பகவானை இம் மாநாட்டுக்கு தலமை தாங்குமாறு உள்ளன்புடன் வரவேற்கி ன்றேன். எமது எண்ணங்கள், நாம் பேசுகின்ற சொற்கள், செய்கின்ற செயல்கள் யாவும் உம்முடையவாக இருக்கட்டும் சுவாமி.

அடுத்ததாக இம்மாநாட்டுக்கு சிறப்பு பேச்சாளராக இந்தியாவின் புட்டபர்த்தியில் இருந்து தனது தாயாருடன் வருகை தந்திருக்கும் டாக்டர்.தீபக் ஆனந் அவர்களை



உவகையுடன் வரவேற்கின் றேன். ஆம் சுவாமி எப்பொழுதும் சொல்வது போல் "மாணவர்கள் தான் என்னுடைய ஒரேயொரு முழுமையான சொத்து" அத்தகைய பெறுமதிக்குரிய சொத்தில் ஒரு தலை சிறந்தவரை நாம் இன்று பெற்றிருக்கின்றோம். எங்களுடைய காதுகள் தெய்வீக அன்பின் பெறுமையை உங்களுடைய இனிமையான குரலில் கேட்பதற்கு பேராவலுடன் காத்திருக் கின்றன. நிச்சயமாக அவை எமது இதயத்தை தெய்வீக அன்பு என்னும் இனிய சமுத்திரத்தில் மூழ்கடிக்க செய்யும் என்று திடமாக நாம் நம்புகின்றோம். என்றும் எமது பெருமதிப்பிற்குரிய, துடிதுடிப்பான சாந்தம் தவழும் புன் முறுவலின் சொந்தக்காரரான இலங்கை சத்திய சாயி சேவா நிறுவனங்களின் தலைவர் டாக்டர்.ஜெகநாதன் ஐயா அவர்களது தன்னலமற்ற வைத்திய சேவையை மிகவும் பேரிடரான காலத்தில் இக்கிழக்கு பிராந்தியம் பெற்றிருந்தது என்பதை இங்குள்ள மக்கள் யாவரும் எப்பொழுதும்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவு கூருவார்கள். அத்துடன் சுவாமியின் இன்னொரு அடியவரான கிழக்கு பிராந்திய கட்டளைத் தளபதி "தர்சன ஹெட்டியாராச்சி" அவர்களையும் இலங்கையில் பாலவிகாஸ் கல்வி அறிமுகமான காலத்தில் அதில் முதல் அணியினரும் சுவாமியின் பேரன்பை பெற்றவரும் இம்மாநாட்டை திறம்பட நடாத்துவதற்கு எல்லாவகை வசதிகளை யும் தமது நிறுவனத்தில் செய்து தந்த நிறுவன முகாமையாளர் முகுந்தன் அவர்களையும் பெருவகையுடன் வரவேற்கின்றோம்.

தினமும் ராமநாம பஜனை செய்வ தினால் இங்குள்ள காற்றின் ஒவ்வொரு அணுவிலும், பூத்திருக்கின்ற ரோஜாவின் இதழிலும், புற்களின் நுனியிலும் அதன் திரவ அதிர்வை நாம் ஸ்பரிசிக்க கூடியதாக உள்ளது. இங்குள்ள இல்ல சிறார்களின் மாபெரும் தினசரி சாதனை இந்த அவசரமான இயந்திர உலகத்தில் மாபெரும் அடிக்கல்லாகும். மேலும் இலங்கை சத்திய சாயி நிறுவன துணைத் தலைவர் மனோகரன் அவர்களையும், காரியதரிசி சண்முகரட்ணம் ஐயா அவர்க ளையும் வரவேற்பதில் புழகாங்கிதம் அடைகின்றோம். எமது மத்திய குழு உறுப்பினர்கள், பிராந்திய தலைவர்கள், மத்தியகுழு முன்னாள் உறுப்பினர்கள், மத்திய நம்பிக்கை குழு உறுப்பினர்கள், கிழக்கு பிராந்திய சாயி நிறுவன தலைவராக மிகவும் முக்கியமாக இம்மாநாட்டின் கதாநாயகர்களை என தருமை இளைஞர் யுவதிகளை பேரானந்தத் துடன் வருக வருக என வரவேற்கின்றோம். தெய்வீக அன்பு என்னும் தலைப்பில் நடைபெற இருக்கும் எல்லா விடயங்களும் எம்மை அன்பு என்னும் பாதையில், அன்பு ஒன்றே மூலாதாரமான அன்பு என்னும் உயர்ந்த இலட்சியத்திற்கு எம்மை அழைத்து செல்லட்டும்.

வைத்திய கலாநிதி வி.ஜெகநாதன் அவர்களின் உரையின் சாராம்சம்

சுவாமியிடம் சரணடைந்து, எல்லோரையும் வரவேற்று, இளைஞர் அணியின் திறமையான செயற்பாடுகளை மெச்சி தொடக்க உரையைத் தொடர்ந்தார். இம் மாநாடு பிரசாந்தி நிலையத்தில் ஜூலை மாதம் நடக்கவிருக்கும் சர்வதேச இளைஞர் திருவிழாவிற்கு முன்னோடியாகவே நிகழ்கின்றது. இம் மாநாட்டிற்கு மையப்பொருளாக தேர்ந்தெடுத்த தலைப்பு "தெய்வீக அன்பு" இக் காலகட்டத்தில் மிகவும் பொருத்தமானதாகும். மனதில் அன்பு வற்றி விட்டது. ஏன் வற்றியது. அத்வைத ஞானி ஆதி சங்கராச்சாரியார் ஒரு நாள் இரவு தெரு வெளிச்சத்தில் ஒன்றைத் தேடினார். அவரின் சீடர் எதனைத் தேடுகிறீர்கள் என்று கேட்க ஊசியைப் போட்டு விட்டேன். அதைத் தேடுகிறேன் என்று சொல்ல சீடனும் சேர்ந்து தேடினான். சிறிது நேரத்திற்குப் பிறகு சீடன் குருவே "எங்கே போட்டிருப்பீர்களென சிந்தித்து சொல்லுங்கள்." என்று கேட்டான். குரு "நான் அதை வீட்டிற்குள் கட்டிலருகில் தொலைத்தேன்" என்று சொன்னார். அங்கே தொலைத்ததை ஏன் தெருவில் தேடுகிறீர்கள் எனக் கேட்க, குரு உள்ளே இருட்டாக இருப்பதால் வெளியே வெளிச்சத்தில் தேடுகிறேன் என்று சொன்னார். இதைக் கேட்ட சீடன் வியப்படைந்து விளித்துப் பார்த்தான். குருவும் மௌனமாகப் புன்னகை பூர்த்தார். சீடனுக்கு அப்போது தான் உள்ளர்த்தம் விளங்கியது. நாங்களும் உள்ளிருக்கும் தெய்வீகத்தை, பொக்கிசத்தை வெளியில் தேடி அலைகிறோம். உள்ளே பார்வையைச் செலுத்தாமல் உள்ளே தீபம் ஏற்றாமல் வெளியே தேடுகிறோம். சுவாமி "நான் உங்கள் ஒவ்வொருவரிலும் உள்ளிருக்கும் அன்புத் தீபத்தை ஏற்றவே வந்துள்ளேன்." என்று கூறியுள்ளார். நாம் எமது இதயங்களைத் திறந்தால் சுவாமி உள்ளே வந்து சஞ்சரிப்பார். "உங்களின் இதயம் என்னுடையதே. எனக்கு அங்கிருக்க உரிமையுண்டு" எனக் கூறியுள்ளார். ஆனால் ஆறு உள் எதிரிகள் மறைத்து விடுகின்றன. சுவாமி எங்களின் இதயத்தில் வீற்றிருக்கக் காத்திருக்கிறார். எமது இதயத்தைத் தூய்மையாக வைத்திருக்க வேண்டும். தூய்மையாக்கா விட்டால் திரும்பத் திரும்ப பிறவிகள் எடுக்க நேரிடும். அஞ்ஞான இருளுக்கு மனமே காரணம். மனம் புலன்களுக்கு அடிமையாகி விட்டது. சுவாமியின் கூற்றை "நானும் கடவுள் நீயும் கடவுள். இது எனக்குத் தெரியும். உனக்குத் தெரியாது" எங்களால் அனுபவிக்க முடியவில்லை. கடவுளும் நாமும் வேறு வேறு என்று எமது மனம் பல பிறவிகளில் வேறுபட்டுள்ளது. நாம் ஆத்மாக்கள் என்பதை அனுபவ பூர்வமாக அறிய வேண்டும்.

ஸ்ரீரமண மகரிஷியின் சீடன் ஒருவரின் கேள்விகளும் பதில்களும் வருமாறு:-

கே :- கடவுளை அடைவதற்கான பாதை/மார்க்கம் என்ன?

ப:- அப்படி ஒரு பாதையுமில்லை.

கே:- கடவுளை அடைவதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?

ப:- நீ ஒன்றும் செய்யத் தேவையில்லை. நீயே கடவுள்.

கே:- நான் கடவுள் என்று உணர எவ்வளவு காலம் செல்லும்?

ப:- இதற்கும் காலத்திற்கும் தொடர்பில்லை. நீ தொடக்கத்தில் இருந்தே கடவுள் தான்.

கே:- பாபங்களில் மிகவும் மோசமானது எது?

ப:- கடவுளிலிருந்து வேறுபட்டவனென்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைப்பதே மிகவும் மோசமான பாபச் செயல்.

கே:- மேன்மையான செயல் (தர்மம்) எது?

ப:- உன்னை நீயே அறிவது தான்.

நாம் கடவுளிலிருந்து வேறுபட்டவர் என்று நினைத்தால் தான் மார்க்கம் வேண்டும். கடவுள் ஒரு நோக்குமல்ல. ஒரு மார்க்கமுமல்ல. மனம் தான் இரண்டையும் பிரிக்கிறது. மனதிலுள்ள மாசுதான் இதற்கு காரணம். மனம் மாசடைந்தால் இதயமும் மாசடைந்துவிடும். மனதை எப்படி தூய்மைப்படுத்தலாம்? பிரேமை என்ற மார்க்கத்தின் மூலமே தூய்மைப்படுத்தலாம். அதாவது நாம் எல்லோரிலும் அன்பாயிருக்க வேண்டும். இதைப்பற்றி இம் மாநாட்டில் ஆராயப்படும். சுவாமியின் வழிகாட்டலை வேண்டிப் பிரார்த்திக்கிறேன்.

**கலாநிதி தீபக் ஆனந்த் அவர்களின் உரையின் சாராம்சம்: (29.05.2016).**



ஓம் சாயிராம்!

பூரணமான பணிவுடன் சாயிமாதாவின் பொற்கமலப் பாதங்களில் சரண். நான் இந்த மகாநாட்டை ஒழுங்கு செய்த இளைஞர்களிலுள்ள சுவாமியை நான் வணங்குகின்றேன்.

இம் மகாநாட்டுக்கு எடுக்கப்பட்ட மையப்பொருள் "தெய்வீக அன்பு" சுவாமியின் சகல போதனைகளையும் உள்ளடக்கியுள்ளது. நம் பகவான் யார்? அவதரித்ததன் காரணம் என்ன? எமக்கு என்னத்தைப் போதித்துள்ளார் என்பதை நாம் அறிய முயல வேண்டும்.

எனக்கு கிடைத்த அனுபவங்களை உங்களுடன் பகிர்ந்து விளக்கத்தைத் தர முயலுவேன். 2003 ஆம் ஆண்டு சுவாமியின் பாடசாலை மாணவர்கள் நாடகம் தயாரித்து, வேடங்கள் போட்டு பகவானின் ஆசீர்வாதத்திற்காக பஜனை மண்டபத்தில் கூடினார்கள். சுவாமி அவர்களுடன் சம்பாஷித்த பின்பு ஏதாவது கேள்விகள் உண்டா எனக் கேட்டார். ஒரு மாணவன், "சுவாமிக்கு அப்பால் என்ன உள்ளது?" என்று கேட்டான். சுவாமி திகைப்புடன் பார்த்து விட்டு. புன்னகையுடன் "Love, Love, Love" (அன்பு) என்று சொன்னார். பேரன்பிலிருந்து தான் சுவாமியும் வந்துள்ளார். அதே அன்பிலிருந்து தான் நாமும் வந்துள்ளோம். நாம் அதே நிலைக்குத் திரும்ப வேண்டும். எமது இயல்பை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

ஒரு முறை MBA முடித்த மாணவர்களாகிய நாம் என்ன செய்ய வேண்டும் என்று சுவாமியிடம் கேட்டோம். வெளியே போய் சாயி நிறுவனத்தில் சேர்ந்து சேவை செய்யுங்கள் என்றார். நாம் சுவாமிக்கு அருகில் இருந்து சேவை செய்ய விரும்புகிறோம் என்று சொன்னோம். ஒருவரும் எனக்குச் சேவை செய்யத் தேவையில்லை. நான் எல்லோருடைய சேவகன். எனக்குச் சேவை செய்ய வேண்டுமென்றால் சாயி நிறுவனத்தில் சேர்ந்து சேவை செய்யவும் என்று ஆணித்தரமாகச் சொன்னார்.

சுவாமியின் பெண்கள் கல்லூரி மாணவிகள் நன்றி கூறும் வைபவத்தை நடாத்தினார்கள். அவர்களின் பக்தியை மெச்சினார். நிகழ்வு முடிந்து எங்கள் பக்கம் வந்ததும் சுவாமி எங்களின் பக்தி அப்பெண்களின் பக்திக்கு ஈடுகொடுக்க முடியாதெனக் கூறினார். நீங்கள் என்னுடன் மிக அருகாமையில் இருந்தாலும் தாமரைக் குளத்திலுள்ள தவளைபோல எனது மகிமை உங்களுக்குப் புரியவில்லை எனக் கூறினார். வெளிநாட்டவர்கள் தூரத்திலிருந் தாலும் அவர்களின் பக்தி ஆழமானது. அவர்கள் எனக்கு நெருக்கமானவர்களாக இருக்கிறார்கள். எனது பக்தியை மேம் படுத்த சுவாமியிடம் எனக்கு பக்தியைத் தருமாறு வேண்டினேன். கடவுளாகிய உங்களுக்குச் செய்ய முடியாததென்று ஒன்றுமில்லை என்று கூறி மண்டாடினேன். இதற்கு சுவாமி "இயற்கை நியதிக்கு மாறாக ஒருவருக்கு பக்தி அளிக்க முடியாது. நான் சாதகமான சந்தர்ப்பங் களையே தருவேன்." எனக் கூறினார். இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைஞர்கள் எல்லோரும்கூடி தம்மில் உள்ள அன்பை தங்களுள் பகிர்ந்து கொள்ள முன் வந்துள்ளார்கள். திரும்பவும் பக்தியை ஊட்டுமாறு மண்டாடினேன். சுவாமி எனது பிடரியில் இறுக்கமாகத் தட்டினார். எனது பார்வை மாறியது. பெரிய ஜோதியாக மாறினேன். சகலதும் இந்த ஜோதியினுள் அடக்கப்பட்டுள்ளதாக உணர்ந்தேன். இதுதான் உண்மையான நிலை அன்புதான் சத்யம்.

கலாநிதிப் பட்டம் பெற்ற பின்பு நாங்கள் 7 பேர் ஒரு சின்ன அறையில் தங்கியிருந்தோம். எங்களைச் சுவாமிக்கு அருகே வைத்திருக்கும்படி வேண்டினோம். இரவு தூங்கினதும் எனக்கு ஓர் அனுபவம், எனது ஆத்மா உடலை விட்டு வெளி யேறியது. வெளியேறி பிரபஞ்சத்தில் சஞ்சரித்தது. நாங்கள் எத்தனை ஆசை களைப் பூர்த்தி செய்தாலும், மாயா சக்தி யின் விளைவால் நிறைவு நிலை ஏற்படுவதில்லை. ஆழ்ந்த மௌனத்தில் தான் ஆன்மாக்கள் நிறைவு நிலையை அடைகின்றன. ஆழ்ந்த மௌனத்தில் சுவாமியின் குரலைக் கேட்கலாம். அங்கே சுவாமி எங்கே என்று தேடி அழுவதை உணர்ந்தேன். நான் சுவாமியுடன் கலக்க வேண்டுமென்பதே எனது ஆசையாகும். எம்மில் எழுகின்ற ஆசைகளெல்லாம் ஏனையோரிடமிருந்து இரவல் வாங்கியவை யேயாகும். மற்றவர்களின் செல்வம் அந்தஸ்து அதிகாரம் ஆகியவற்றினால் ஆசைகள் எழுகின்றன. இவற்றைக் கட்டுப்படுத்தத்தான் ஆசைக்கு வரம்பு வையுங்கள், மௌனத்தில் இருங்கள், என்று சுவாமி கூறியுள்ளார். ஆன்மாக்கள் பரமாத்மாவோடு இணையும் ஆசையையே வைத்திருக்கவேண்டியதாகும். பிரேம மார்க்கம் இதற்கான பாதையாகும்.

ஒரு முறை விளையாட்டுக்களின் கப்டன்கள் (15 பேர்) போட்டிகளுக்கு முன்பு ஆசீர்வாதம் பெறச் சுவாமியிடம் சென்றோம். அவர் எனக்கு கிட்ட வந்ததும் பாத நமஸ்காரம் தரும்படி கேட்டேன். பாதநமஸ்காரத்தை எடுத்து விட்டு மிகவும் விரைவாகப் போய் ஓரமாக நின்றேன். இதய உணர்வின்றிப் பாத நமஸ்காரம் செய்வதில் அர்த்த மில்லையென கடுமையாகப் பார்த்துச் சொன்னார்.

ஒரு முறை பாத சேவை செய்யும் போது சுவாமியின் இரு பாதங்களும் பரந்த காலம் என்ற மண்ணிலே பதித்தவாறு உள்ளன. ஒன்றை அன்பென்றும், மற்றையதை சேவையென்றும் விளங்கிக் கொள்ள வேண்டும். எத்தனையோ பேர் முறையாகச் சேவை செய்கிறார்கள். இவர்கள்தான் கடவுள் காட்சியைப் பற்றி விம்மி விம்மி அழுவார்கள்.

சுவாமிநாதன் என்ற ஒருவர் ஊரில் பஞ்சம் ஏற்பட்ட போது மக்களுக்கு உணவளித்தார். அவர்தான் உண்மையான பக்தர். வினோபாவே அவர்கள் இந்தியாவில் பல இடங்களுக்கு கால்நடையாகச் சென்று ஏழை மக்களுக்கு நிலம் கிடைக்க உதவினார். அன்னை தெரேசா அம்மையார் கல்க்கத்தா நகரில் கான்களிலும், தெருவிலும் விடப்பட்ட மனிதர்களை பராமரித்தார். இவர்கள் தன்னலமற்ற சேவை செய்த மகா மனிதர்கள். தெரேசா அம்மையார் நோபல் பரிசு பெற்ற சமயம் அவரின் மிகவும் பவித்திரமான கணப்பொழுது என்ன என்று கேட்டார்கள். அதற்கு அவர் மரணவாயிலில் கழிவுக்கான்களில் இருந்த ஒருவரைத் துப்பரவு செய்து படுக்கையில் போட்டதும், புன்னகையுடன் உயிர் பிரிந்தது. அப்புன்னகையில் இயேசு பிரானைக் கண்டேன் என்றார். இதுதான் தூய்மையான தெய்வீக அன்பு. "சுவாமி அன்பின் நிமித்தம் தன்மீது அன்பு செலுத்துவதற்காகவே தன்னைப் பலவாகப் பிரித்தார்." என்று கூறியுள்ளார். அவரில் இருந்து பிரிந்த நாம் அவருடன் சேருவதையே இலக்காகக் கொண்டிருப்போம். எமது சிந்தனை, சொல், செயல்களைத் தூய்மையாகவும், ஒருமையாகவும் வைத்திருந்தால் நாமும் பரப்பிரம்மமாகிய சமுத்திரத்தில் ஒன்றாகுவோம்.

சுவாமியிடம் வர முன்பு அன்பு என்றால் என்னவென்று முழுமையாகத் தெரியாது. நான் டெல்கியில் வேலை செய்யும் பொழுது வேலை முடிந்து வீட்டிற்குப் போகும் போது பழங்கள் வாங்கி தெருவிலுள்ள பிச்சைக்காரர்களுக்கு கொடுப்பது வழக்கம். ஒரு நாள் பழங்களைக் கொடுப்பதற்கு ஒரு பிச்சைக்காரனையும் காணவில்லை. சிறிது நேரத்தில் இரு ஞானிகள் முன் வந்தார்கள். நான் பழங்களை ஏற்றுக் கொள்ளும்படி வணங்கிக் கொடுத்தேன். மூத்தவர் கொடுத்த பழங்களிலிருந்து வாழைப்பழத்தை எனக்குத் தந்தார். நான் அவர்களைப் பின் தொடர நினைத்த போது அவர்கள் மறைந்து விட்டார்கள். பகவான் சில காலத்திற்குப் பின்பு பழங்கள் கொடுத்ததைப் பற்றி பிரசாந்தி நிலையத்தில் சொன்னார். அப்போது வந்தவர்கள் சீரடி சாயி பாபாவும் சத்திய சாயி பாபாவும் என உணர்ந்தேன். நாம் அன்பைச் சேவையாக மாற்ற வேண்டும்.

மாநிலத் தலைவர் விபத்திலிருந்து தன்னைக் காப்பாற்றியதற்கு சுவாமியிடம் நன்றி தெரிவித்தார். அப்போது சுவாமி " நான் உன்னைக் காப்பாற்றவில்லை. நீ வறியவர்களு க்குச் செய்த சேவையின் புண்ணியம்தான் உன்னைக் காப்பாற்றியது" என்று கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜோன்சின் கிளேயர் என்ற பக்தனுக்கு நடந்தது. அவர் பணக்காரர். அமெரிக்கன். ஒருமுறை வானூர்தியில் பறக்கும் பொழுது, இயந்திரக் கோளாறு ஏற்பட்டது. பொறாமையினால் யாரோ பெற்றோல் தாங்கிக்குள் சோழப் பொரியைப் போட்டு விட்டார்கள். வானூர்தி கடுமையாக ஆட்டம் கொண்டது. இவரின் தலை அடிபட்டு மயங்கி விட்டார். ஆனாலும் வானூர்தி பாதுகாப்பாகத் தரையிறங்கியது. இவருக்குக் கைகுலுக்க விமான நிலையத்தவர்கள் வந்து பார்த்த போது. இவர் மயங்கியிருந்ததைக் கண்டார்கள். பின்பு அவர் சுயஉணர்வு அடைந்தார். சுவாமிக்கு நன்றி சொல்ல வேண்டுமென்று பிரசாந்தி நிலையத்திற்கு வந்தார். நேர்காணலின் போது நடந்ததைச் சுவாமியிடம் சொன்னார். தன்னிடமிருந்து சுவாமி எதை எதிர்பார்க்கிறார் என்று அவரிடம் கேட்டார். சுவாமி "நான் கேட்பதைத் தருவாயா?" ஆம் என்று சொல்ல "எப்போதும் ஆனந்தமாக இரு" என்று சொன்னார். இது தான் தெய்வீக அன்பு.

சுவாமி ஒருமுறை கனவில் வந்து "நீ போகின்ற சமித்தியில் திருமதி கைலாஷ் என்பவரிடமிருந்து அவர் செய்யும் சாதனையை கற்றுக் கொள்" என்று சொன்னார். விடிந்ததும் அந்த அம்மாவின் வீட்டிற்குச் சென்று, அவர் செய்யும் சாதனையைக் கற்றுத் தரும்படி கேட்டேன். அதற்கு அவர் தான் ஒரு சாதனையும் செய்வதில்லை என்று சொன்னார். திரும்ப திரும்ப கேட்ட போது தான் காலை எழுந்து நித்திரைக்குப் போகும் வரை செய்கின்ற செயல்கனெல்லாம் சுவாமிக்கு செய்வதாகவே நினைத்துச் செய்கிறேன். குளித்தல், சமைத்தல், வீடு கூட்டுதல், துணி தோய்த்தல், பிள்ளைகள் - கணவருக்கு வேண்டியதைச் செய்தல் எல்லாமே இந்த மனப்பாங்குடன் செய்வேன் எஞ்சியிருக்கும் நேரத்தில் அயலிலுள்ள வறிய பிள்ளைகளை அழைத்துப் பாடம் சொல்லிக் கொடுக்கிறேன் என்றார். அன்பைப் பெருக்கி ஆண்டவனிடம் சரணடைந்து எல்லாவற்றையும் செய்கிறேன் என்றார். செய்யும் செயல் முக்கியமல்ல, மனப்பாங்கே முக்கியம்.

நானும் இதைப் பின்பற்றினேன். கனவில் தரிசனத்தின் போது , என்னைக் கூப்பிட்டு இறுகத் தழுவி , "நீ சகலதையும் எனக்கு அர்ப்பணிக்கிறாய் எனக்கு மிகவும் ஆனந்தம்" என்று கூறினார்.

ஒருமுறை மாணவனைப் பார்த்து என்ன வேண்டு மென்று கேட்டார். மாணவன் சுவாமியுடன் ஒன்றாக வேண்டு மென்பதைக் கேட்டான். சுவாமி "அப்படியானால் இப்ப வா. ஆனால் நீ என்னைப் போலாக வேண்டும். எண்ணெய்யும் நீரும் கலக்க மாட்டாது. எண்ணெய் எண்ணெய்யுடன் கலக்கும்" என்று சொன்னார். தூய அன்பு தான் தூய அன்புடன் கலக்கும்.

கோடைக்கானலில் பக்தை ஒருவர் தான் நெடுங் காலமாகச் சாதனை செய்வதாகவும், எவ்வளவு தூரம் முன்னேறியுள்ளேன் என்பதை எப்படி அறியலாம் எனக் கேட்டார். இதற்கு சுவாமி "நீயே உன்னைக் கேட்க வேண்டும்" என்று பதிலளித்தார்.

ஒரு முறை காலை 6.30 மணிக்கே சுவாமி குல்வந்த் மண்டபத்திற்கு வந்தார். சேவாதாள் அவசரமாக கதவுகளைத் திறந்து ஆயத்தம் செய்தார்கள். சேவாதாள் மூலம் கலாநிதிப் பட்டப்படிப்பு மாணவர்களை வரும்படி அழைத்தார். நாம் அவசரமாக ஓடிப்போனோம். சுவாமி தனது அறையில் கைவிரலைக் கன்னத்தில் வைத்து அமைதியாக இருந்தார். ஏன் கூப்பிட்டார் என்று தெரியவில்லை. 45 நிமிடத்திற்குப் பின் கண்களைத் திறந்து, இன்று என்ன நாள் என்று கேட்டார். நாம் ஆகஸ்ட் மாதம் 24 ஆம் திகதி என்று சொன்னோம். இன்று என்ன நடந்ததெனத் தெரியுமா? என்றார் நாம் அமைதியாக இருந்தோம். இன்றுதான் யப்பான் நாட்டின் கிரோசூஷிமா நகரத்தில் அணுக்குண்டு போடப்பட்டது என்று சொன்னார். அங்கே சிறுவர்கள், மக்கள் பிரார்த்தனை செய்தார்கள் இதைப்போல இனிமேல் நடக்கக்கூடாதென்று பிரார்த்தித்தார்கள்.

அவர்கள் சாயி பக்தர்கள் அல்ல. தங்களின் இஷ்ட தெய்வங்களுக்குப் பிரார்த்தனை செய்தார்கள். நான் அப்பிரார்த்தனைக்காக அங்கே சென்று வந்துள்ளேன். எந்த நாமத்திலும் பிரார்த் தனை செய்தால் அது என்னை வந்து சேரும். தன்னலமில்லாது பிறரின் நன்மைக் காகப் பிரார்த்தனை செய்தார்கள். இவர்கள் தான் உண்மையான பக்தர்கள் என்று சுவாமி கூறினார்.

கேள்வி- பதில்

கேள்வி:
எவ்வாறு மனதைக் கட்டுப்படுத்தலாம்?

பதில்:
மனம் பிரம்மாவின் குழந்தை. ஆகவே அதைக் கட்டுப்படுத்துவது மிகவும் கஷ்டம். மனதை நாய்க்குட்டி போல் நடத்த வேண்டும். பாற் கிண்ணத்தை வைத்தால் வாலை ஆட்டிக் கொண்டு வந்து குடிக்கும். இப்படிப் பழக்கினால் உங்களுக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னாலேயே வாலை ஆட்டிக் கொண்டு வந்து நிற்கும் இதுவும் பிரேமை மார்க்கம். கோடைக்கானலில் சுவாமி மனதைக் கட்டுப்படுத்தி மனதின் நிபுணராக வர வேண்டும். (Master the mind and become a master mind) என்று சொன்னார். முதலில் நாம் எவ்வாறு மன நிபுணராக வர முடியும் என்று கேடடேன். இறைவன் மேல் மேலும் மேலும் அன்பு வைப்பது தான் ஒரேயொரு மார்க்கம். இதற்கு நாம் எல்லோரையும் நேசித்து எல்லோருக்கும் சேவை செய்ய வேண்டும்.

கேள்வி:
இக் கலியுகத்தில் அன்பு (பிரேமை) மீது கண்ணாயிருக்க வேண்டும். ஏன் அப்படி?

பதில்:
கலியுகத்தில் மனித விழுமியங்கள் வறண்ட காலம் கலியுகத்தில் வாழ்ந்தாலும், எந்த யுகத்தில் நாம் வாழ்கிறோம் என்பதை நாமே தீர்மானிக்கலாம். திரேதா யுகத்தில் தர்மம் தலை ஓங்கியிருந்தது. நன்மையும் தீமையும் கலப்படாமல் இருந்தது. பின்பு நல்லதும் தீயதும் ஒரு சமூகத்திலே தலை தூக்கியது. பின்பு ஒரு குடும்பத்திலே தலை தூக்கியது. பின் இரண்டும் ஒருவனுள்ளே தலை தூக்கியுள்ளன. ஆகவே தீமையை அழித்து நல்லதைக் காப்பாற்ற முடியாது. இக் கலியுகத்தில் தீமையை நல்லதாக மாற்ற வேண்டும். இதைத்தான் உன்னத மாற்றம் என்கிறோம். இதை அன்பினால் தான் செய்ய முடியும்.

ஒருவன் வரம் வேண்டி தேவர் களைப் பிரார்த்தித்தான். பலன் கிடைக்காத படியால், சிவனை வழிபட்டான். சிவன் காட்சியளித்து என்ன வரம் வேண்டு மென்று கேட்டார். தேவர்களை எரித்துச் சாம்பலாக வரம் வேண்டுமென்று கேட்டார். சிவன் நெற்றிக் கண்ணைத்திறந்து அவரைச் சாம்பலாக்கினார். அவன் சாம்பலாகும் பொழுது, ஏன் தேவர்களைச் சாம்பலாக்காமல் என்னைச் சாம்பலாக்கு கிறீர்கள் என்று கேட்டான் தேவர்கள் எல்லாம் உன்னுள் இருப்பதால் உன்னைச் சாம்பலாக்கினேன் என்று சிவன் கூறினார் நாங்கள் கலியுகத்தில் வாழ்ந்தாலும், தூய அன்பினாலும் தன்னலமற்ற சேவையினாலும், திரேதயுகத்தில் வாழ்வதை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

கேள்வி:
சுவாமி சர்வமதக் கொள்கையைப் பரப்புகிறார். சிலர் பக்தர்கள் எல்லா மதங்களையும் சமமாகப் பார்ப்பதில்லை. இவர்களுக்குப் புத்தி புகட்டவும்.

பதில்:
சமயம் அடையும் இடம் அல்ல. அது அடையும் இடத்திற்கு வழிகாட்டியேயாகும். ஒன்றையடைவதற்கு எத்தனையோ பாதைகள் உண்டு. ஒவ்வொருவருக்கும் பிடித்தமான, பொருத்தமான பாதையொன்றுண்டு. அதன் வழியே பயணித்து இலக்கையடைய வேண்டும். சமயங்கள் எல்லாவற்றிலும் மனித விழுமியங்கள் வலியுறுத்தப்பட்டுள்ளன.

திரேதாயுகத்தில் இராமர் தர்மத்தை நிலைநாட்டினார். துவாபர யுகத்தில் கிருஷ்ணர் தர்மத்தையும் ஞானத்தையும் நிலைநாட்டினார். கலியுகத்தில் சீரரடிசாயி பாபாவும் சத்திய சாயி பாபாவும் பிரேமை மார்க்கத்தையும் போதித்தார்கள்.

சுவாமி பாரிய குடிநீர்த்திட்டத்தை அறிவித்ததும், மத்திய அறக்கட்டளை நிர்வாகிகளுக்குத் தூக்கி வாரிப்போட்டது. எங்கிருந்து பணம் வரப்போகிறதென்று சுவாமியிடம் பிரார்த்தித்தார்கள். தனது இரத்தத்தையும் கொடுப்பேன். பிருந்தாவனச் சொத்தை ஈடும் வைப்பேன் என்று சொன்னார். இதயம் மேலோங்கினால் அன்பும் சாந்திம் ஆனந்தமும் மேலோங்கும்.

சத்திய சாயி அவதாரின் நாமமும் ரூபமும் கிடைக்காத பொக்கிஷம். ஏனைய அவதாரங்களுக்கு நம்பிக்கைதான் நாமத்திறற்கும் உருவத்திற்கும் ஆதாரம் பூர்ண அவதாரில் உருவமும் அருவமும் ஒன்றேயாகும். தற்போது சுவாமி அருவத்தில் உள்ளார். பிரேம மார்க்கத்தினால் அவரை அடையலாம்.

கேள்வி:
பகுப்பாய்வு, நாமஸ்மரணம், தியானம் எவ்வாறு அன்பை விருத்தி செய்யும்?

பதில்:
சாதனைகள் பல உள்ளன. மனதைத் தூய்மைப்படுத்தவும். கட்டுப்படுத்தவுமே சாதனைகள் உதவுகின்றன. நாமம் உருவத்தை வெளிப்படுத்தும் இவ்விரண்டிலும் மனதைக் குவிக்க வேண்டும். மனக்குவிப்பு சக்தி விரயத்தைக் குறைக்கிறது. இதனால் ஆன்மீக அனுபவங்கள் ஏற்படும். உதாரணமாக சூரிய ஒளியை வில்லை மூலம் செலுத்தினால் அது ஒரு புள்ளியில் குவிக்கப்படுகிறது. அதில் கடதாசியை வைத்தால் அது எரிந்து விடும். மனமும் குவிக்கப்படும் பொழுது சக்தியும் குவிக்கப்படுகிறது. நிரந்தரமானதையும் தற்காலிகமானதையும் பிரிக்கும் பகுத்தறிவுத்திறன் விருத்தி யடையும். ஆத்மாவைப் பற்றி உலகப் பற்று நீங்கி வீடும்.

கேள்வி:
அன்பு துவைத நிலையிலிருந்து எம்மை எவ்வாறு விடுவிக்கிறது?

பதில்:
மனம் கேட்பதுடன் மற்றவர்களை எதிர்த்தும் விடும். அயலவர்களுடன் ஒப்பிட்டுக் குழப்பம் அடைகிறது. அது வெளியே நோக்கும் தன்மையுடையது. இதயம், தலையையும் கைகளையும் இணைக்கிறது. அயலவன் நல்ல அழகான கார் வாங்கி விட்டால் சந்தோசப்பட்டு கொண்டாடுவதை விட்டு பொறாமைப்படுகிறோம். சுவாமி ஒருவரை ஆசீர்வதிக்கும் பொழுது நாமும் சந்தோசப்பட வேண்டும். அன்பு விரிவடையும் பொழுது, மனம் அதில் மூழ்க வேண்டும். இப்படியானால் ஆனந்தமும் பரவசமும் கிடைக்கப் பெறுவோம். நகரங்களில் அயலானுடன் பழக்கமில்லை. கிராமத்தில் எல்லோரும் ஒன்றிக் கொண்டு இருப்பார்கள். இந்தியக் கலாச்சாரம் கிராமங்களில் தான் உயிர்ப்புடன் இருக்கிறது. எல்லாச் செயல்களும் இதயபூர்வமாக இருக்க வேண்டும். தன்னல மில்லா அன்பு வேறு என்ற நிலையிலிருந்து ஒன்று என்ற நிலைக்கு உயர்த்துகிறது. உதாரணமாக சுவாமி பாரிய குடிநீர்த்திட்டத்திற்கு பணவளம் குன்றியதும் தன்னையும் , வளாகத்தையும் விற்கவோ ஈடுவைக்கவோ தயாரானார் அன்பு தியாக மனப்பாங்கை உயர்த்துகிறது.

கேள்வி:
விமர்சனம் எம்மில் உள்ள அன்புச் சக்தியைக் குறைத்து விடுமா?

பதில்:
நாங்கள் மற்றவரை மதிப்பீடு செய்யத் தொடங்கிய உடனேயே அன்பின் விரிவு தடைப்பட்டு விடுகிறது. நாங்கள் மற்றவர் மீது அன்பு கொண்டுள்ளோம் என்ற நினைவு வந்தாலுமே அது தடைப்பட்டு விடும். உதாரணமாக... தியானத்திலிருக்கும் போது தியானிக்கிறோம் என்ற எண்ணம் இருக்கும் வரை தியானம் தடைப்பட்டு விடுகிறது. அன்பை அளவிட முடியாது. ஆனால் அதை அனுபவிக்கலாம். நாம் துயிலுவதற்கு முன் “யாரை இன்று நேசித்தேன்? அதில் சுயநலம் இருந்ததா? என்று மதிப்பீடு செய்தால் நல்லது.

கேள்வி:
அன்பின் நிமித்தமே அன்பாயிருக்க வேண்டும் விளக்குக.

பதில்:
அன்பின் பலன் அன்பேயாகும். வேறு பரிசில்களே அல்ல. மலை உச்சியில் விழுந்த நீர்த்துளி எப்படியாகிலும் சமுத்திரத்தைச் செயன்றடையும். இடையில் பல விதத்தில் தேங்கி நிற்கலாம். அதைப் போல நாமும் இடையில் தேங்கி நிற்காது பரம்பொருளைச் சென்றடைவோம். ஒரு விதை தன்னை மாற்றியோ அழித்தோ மரமாக வளர்ந்து காய், கனிகளைக் கொடுக்கிறது. எமது கீழ் நிலையை விட்டால்தான் மேல் நிலையை அடையலாம். மரத்தின் மகிமையை விதைக்குத் தெரியாது. தன்னை அழித்து மரமாக மாறுவதே விதையின் நிறைவு நிலையாகும். கப்பல் செய்யப்பட்டது. கரையில் ஒதுங்கி நிற்பதற்கு அல்ல. சேர வேண்டிய இடத்திற்குப் போவதற்கேயாகும். அல்லாவிடில் படைப்பில் பிரயோசனமில்லை.

அன்பர்களே நாங்கள் முதல் நாள் நிகழ்வின் கடைசிக் கட்டத்தை அடைந்துள்ளோம். மிகவும் அர்த்தமுள்ள ஆனந்தமான மாகாநாடு இதுவரை கேட்டதையெல்லாம் உள்வாங்கி வாழ்க்கையில் கடைப்பிடிப்பீர்களென நம்புகிறேன்.

பிரேம மார்க்கத்தில் ஏற்படும் தடைகள் எவையென பார்ப்போம்.

1. தனி மனிதர்கள் சேர்ந்ததே சமூகம். தனிமனிதர்கள் மீது கவனம் செலுத்தத் தவறிவிடுகிறோம்.

உலகில் எத்தனையோ முதியோர் இல்லங்கள் இயங்குகின்றன. பிள்ளைகளுக்கு பெற்றோர்கள் மீது நன்றியுணர்வு இல்லையே. மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற தெய்வீக வாக்கை மறந்து விட்டார்கள். பெற்றோரும் பிள்ளைகள் மீது போதியளவு அன்பு காட்டாமையும் இதற்கு ஒரு காரணமாகும். பெற்றோர் மீது அன்பில்லாமை, நன்றியுணர் வில்லாமை மன்னிக்க முடியாத பெரும் பாபம் என்று சுவாமி கூறியுள்ளார். நிறுவனங்களிலும், வேலைத் தளங்களிலும் உள்ள ஒவ்வொருவரிலும் கரிசனையாயிருக்க வேண்டும். தலைமைத்துவம் என்றால் என்ன? தலைவருக்கு தன் குழுவிலுள்ள ஒவ்வொருவரினதும் திறன்களை உணர்ந்து அவற்றை விருத்தி செய்யச் சந்தர்ப்பங்களை அளிப்பது தான் முக்கிய கடமை. இதைச் செய்யா விட்டால் இளம் சமுதாயத்தினரில் ஏமாற்றம் அல்லது விரக்தி ஏற்படும். உதாரணமாக ஒரு நிகழ்வு:

பட்டமளிப்பு விழாவின் போது மாணவர்கள் நாடகத்தை தயார் செய்கிறார்கள். நடிக்கும் ஒருவனுக்கு சுகவீனம் ஏற்பட்டு அவனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒத்திகைக்குப் போக முடியவில்லை. அவரின் இடத்தை இன்னொரு மாணவனுக்குக் கொடுத்தார் கள். இம் மாணவன் மிகவும் திறமையாக நடித்ததைக் கண்டு அவனையே அதில் நடிக்க விட யோசித்தார்கள். சுவாமியிடம் கேட்டார்கள். அப்போது சுவாமி நாடகத் திலும் பார்க்க மாணவனே முக்கியம். மாற்ற வேண்டாமென்றும் சொன்னார். அப்படி நிறுத்தினால் அவன் துன்பப்படுவா னென்றும் கூறினார்.

2) எப்போதும் குறையையே காண்பது நல்லதல்ல.

குறையையே காண்பதும் நல்லதைக் கண்டு உசார்படுத்தாமல் இருப்பதால் பிள்ளையும் குற்றம் காணும் மனப்பாங்கையே வளர்த்துக் கொள்ளும்

ஒரு முறை குழுவாகக் ஹரித்வார் என்ற புனித ஸ்தலத்திற்குச் சென்றோம். அங்கே கங்கை நதி ஓடுகிறது. நான் நதிக்கரையில் இருந்த குப்பையைக் கண்டு, ஏன் மனிதர் இப்படிச் செய்கிறார்களென விமர்சித்தேன். என்னுடன் வந்த பக்தன் நீ குப்பையைப் பார், நான் புனித கங்கையில் குளிக்கப் போகிறேன் என்றார். அவர் கங்கையின் புனிதத்தில் கவனத்தைச் செலுத்தினார். நானோ கரையிலிருந்த குப்பை கூழத்தில் கவனத்தைச் செலுத்தினேன். நாம் சிறு குறைகளைக் கவனத்தில் எடுத்து பெரிய பரந்த அழகுத் தன்மையை மறந்து விடுகிறோம்.

3) தீய உணர்வும் தீய எண்ணங்களும் தடை போடுகின்றன.

நான் சுவாமியின் நேர்காணல் அறையில் இருக்கும் போது தீய எண்ணங்கள் எழுந்தன. நேர் காணல் முடிவில், என்னுடைய இந்தக் குறையை மன்னிக்கும்படி சுவாமியிடம் வேண்டினேன். சுவாமி, "தீய எண்ணங்கள் நகரும் முகிலைப் போன்றவை. கவலைப்பட வேண்டாம். இது இயற்கையானதே, ஆனாலும் அவற்றைச் செயலாக மாற்ற வேண்டாம். பக்தியுடன் சமர்ப்பிக்கும் எண்ணங்களே என்னை வந்தடையும். குழாயில் சேறு போய் அடைத்து விட்டால், நல்ல தண்ணீர் பாயும் போது முதலில் சேறுதானே வெளிவரும். சாதனையின் போதும் தீய எண்ணங்கள் வெளிவருவது தூய்மைப்படுத்துவதையே குறிக்கின்றது. இவை அடி மனதில் இருந்து எழுபவையே யாகும். இவற்றைச் சாட்சியாக கவனித்துக் கொள்" என்று சொன்னார்.

4) எமக்கு அருகாமையிலிருப்பவரின் குறைகண்டு முரண்பாடு கொள்ளுதல்

வேறு விதமாகப் பார்த்தால் எங்களில் குறைகாண்பவர்கள் மீது எவ்வாறு அன்பைச் செலுத்தலாம்? எம்மில் அன்பு காட்டுபவர் மீது அன்பு செலுத்துவது மிகவும் இலேசானதாகும்.

ஒருமுறை ஒரு "நக்சலைற்" பயங்கரவாதி சுவாமியைக் கொல்வதற்காகக் கத்தியுடன் பிரசாந்தி நிலையத்தினுள் நுழைந்தான். சுவாமி மேல் மாடியில் நின்று கொண்டே பெயர் சொல்லி அழைத்துக் கொண்டு கீழே போய் அவனைத் தழுவினார். அவன் கத்தியைக் கீழே போட்டு விட்டுச் சரணடைந்தான். கோபத்தை அல்லது வெறுப்பை அன்பினால் ஆட்கொள்ளலாம்.

ஒருவர் என்மீது கோபமோ வெறுப்போ கொண்டிருந்தால் அது நான் முன் எப்போதோ செய்த செயலின் விளைவாக இருக்கலாம். நாம் குளத்தில் கல்லை போட்டால் சிறு நீரலைகள் உண்டாகி நான் நிற்கும் கரையை நோக்கியே வரும். மற்றவர்கள் என்மீது கொண்டிருக்கும் வெறுப்பிற்கு நானே காரணம் என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும். இது தான் கர்ம விதி.

5) கட்டுப்பாடின்மை

எமது மனமோ தேள் கொட்டிய, மது அருந்திய குரங்கைப் போன்றது. இதைக் கடவுளால்தான் கட்டுப்படுத்த முடியும். பிருந்தாவனத்தில் 1980 இல் தரிசனம் முடித்து மண்டபத்தில் வெளியே வந்ததும் 6 குரங்குகள் மரத்தின் மேல் இருப்பதைக் கண்டார். சேவாதாளிடம் நிலக்கடலை கொண்டு வரும்படி சொன்னார். கடலையை கையில் வைத்து நீட்டினார். குரங்குகள் வரிசையில் நின்று ஒவ்வொரு கடலையை மட்டும் எடுத்துக் கொண்டு மேலே போயின. எப்படி குரங்கின் மனதைக் கடவுள் கட்டுப்படுத்தினார்?

நான் அன்புத் தெய்வத்தின் பாதத்தில் சரணடைந்தால் அவரே எமது மனதைக் கட்டுப்படுத்துவார்.

6) உன்னிப்பாகக் கேட்பதிலும் பார்க்க புத்திமதி சொல்வதில் அக்கறை காட்டுதல்.

மற்றையவருடைய உணர்வுகளைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

ஒரு பையனின் பெற்றோர் வீட்டில் எந்நேரமும் முரண்பட்டுக் கொண்டிருந்தார்கள். பையன் துக்கத்தினால் சாப்பாட்டிலும் மனமில்லாமல் மெலிந்து போனான். பிருந்தாவனத்தில் சுவாமியின் தரிசனத்திற்காக வந்திருந்தான். ஒரு மாணவனிடம் பையனைக் கொடுத்து நன்றாகப்

NATIONAL SAI YOUTH CONFERENCE
DIVINE LOVE
April 2016 Sri Lanka



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பராமரிக்கும்படி சொன்னார். பையன் தன்னுடைய மனக் கவலைகள் எல்லாம் சொல்லித் தேறினான். நாம் அன்புடன் மற்றவரின் துயரத்தைக் கேட்கப் பழக வேண்டும்.

7) அன்பின் நிமித்தம் மற்றவர்களைப் பற்றிக் கவலை கொள்ளுதல்

பாடசாலையிலிருந்து பிள்ளை வரப்பிந்தினால் என்ன நடந்து விட்டதோ என எண்ணிப் பதட்டம் அடைதல். இதே போல பலவிதமான எதிர்மறை உணர்வுகள் எழலாம். இது உண்மையான அன்பல்ல. எமது இம்மாதிரியான உணர்வுகளை மற்றவர்களுக்குக் கொடுக்கக்கூடாது. அன்பின் அடிப்படையே தன்னம்பிக்கையும் இறை நம்பிக்கையுமேயாகும்.

8) "அனைவரையும் நேசி, அனைவருக்கும் உதவி செய்" இக்கூற்று "தீயவர்களின் சகவாசத்தை தவிர்" என்ற கூற்றிற்கு எதிராக இருக்கிறதே. தீயவர்களுடன் பழகும் போது நாம் பலவீனமாக இருந்தால் நாம் தீமைக்குள் அகப்பட்டு விடுவோம்.

நாம் தூரத்திலிருந்து அன்பு காட்டவும், அருகிலிருந்து அன்பு காட்டவும் பழகிக் கொள்ள வேண்டும்.

ஒரு புலியைக் கட்டிப் பிடித்து அன்பு காட்ட இயலாது. அதை தூரத்தில் வைத்தே அன்பு காட்ட வேண்டும்.

அங்குலிமாலா என்ற கொலைகாரனை புத்தபெருமான் எவ்வாறு உன்னதமானவனாக்கினார். எம்மிடம் தூய அன்பு இருந்தால் யாரையும் திருத்தலாம்.

9) பொறாமை, அகங்காரம் பெரும் தடைகளாகும்.

மாணவன் ஒருவன் கலாநிதிப்பட்ட மாணவர்களுக்கு எதிராகக் கடிதம் ஒன்றை சுவாமிக்கு அனுப்பினார். அதில் இம்மாணவர்களின் நடத்தை சரியில்லையெனக் குற்றம் சாட்டப்பட்டது. சுவாமி 9 மாதங்களாக மாணவ சமுதாயத்தையே புறக்கணித்தார். இவர்கள் கடும் பிரார்த்தனையில் ஈடுபட்டார்கள். பின்பு சாப்பிடுவதையும் நிறுத்தி விட்டார்கள். அப்போது சுவாமி துணைவேந்தர் மூலம் தானும் சாப்பிடுவதை நிறுத்தியுள்ளதாக தெரிவித்தார். மாணவர்கள் தமது கடும்போக்கை கைவிட சுவாமியும் அக்கறை காட்டத் தொடங்கினார். மாணவர்கள் தாங்கள் ஒரு போதும் பொறாமைப்படமாட்டோம் என உறுதிமொழி கொடுத்தார்கள். அருகிலிருப்பவர்களை திருத்தும் ஒரு யுக்தி. அதாவது அன்பை தற்காலிகமாக வாபஸ் பெறுவதாகும்.

10) ஒரு முறை கோடைக்கானலில் இருக்கும் போது விநோதப் பயணத்தில் எங்களை அழைத்துச் செல்லுமாறு கேட்டோம். அப்போது கடும் காற்றினால் மரங்கள் வீழ்ந்து பாதை சில இடங்களில் தடைப்பட்டிருந்தது. அப்போது பொலிஸ் அதிகாரிகளிடம் தங்களின் பணயத்திற்கு ஏற்பாடுகள் அனைத்தையும் செய்யச் சொன்னார். சுவாமியும் எங்களுடன் பஸ் வண்டியில் பிரயாணம் செய்தார். போகும் போது பாதைகள் தடைப்பட்டேயிருந்தன. இதற்குப் பொறுப்பாக இருந்த பொலிஸ் அதிகாரி சுவாமியிடம் இருந்து நல்ல பேச்சு கேட்கப் போகிறாரென்று நினைத்தோம். நாங்கள் அந்த இடத்தை அடைந்ததும், பொலிஸ் அதிகாரியை கூப்பிட்டு மோதிரம் சிருஸ்டித்துக் கொடுத்து, பாத நமஸ்காரம் கொடுத்து படமும் எடுக்கச் சம்மதித்தார். இந்த அன்புச் செய்கையினால் அந்த அதிகாரி அழுது சரணடைந்து நல்ல பக்தனாக மாறினார். இது இன்னொரு வகையான திருத்தும் செயலாகும். கூறப்பட்ட பத்தையும் விளங்கிக் கொள்ளுங்கள்.

கேள்வி:
வேலை செய்யும் நிறுவனங்களில் மனித விழுமியங்கள் உதாசீனம் செய்யப்பட்டால், நாம் எவ்வாறு செயற்பட வேண்டும்.

பதில்:
இதைப்பற்றி எம்.பி.ஏ மாணவர்களுக்கு உரையாற்றும் பொழுது கூறியுள்ளார். "நீங்கள் இயற்கையைப் புனிதமாகப் பேண வேண்டும். இயற்கை தெய்வத்தின் அம்சமேயாகும். நீங்கள் இதை மாசு படுத்தினால் தண்டிக்கப்படுவீர்கள். தர்மத்தைப் பற்றி நன்கு உணர்ந்தவர்கள் அதர்மத்தைப் பின்பற்றினால் கடும் தண்டனைக்கு ஆளாவீர்கள். நாம் பிசாசை எதிர் கொண்டு அதை வெல்ல வேண்டும். வேலைத்தளத்தில் தர்மத்தைக் கடைப் பிடிப்பவர்கள் சிலர் இருப்பார்கள். இப்படி யானவர்கள் ஒன்று சேர்ந்து, கம்பனி நிர்வாகிகளுக்கு அதர்மச் செயற்பாட்டைச் செய்யாது இருக்கச் சொல்ல வேண்டும். நீங்கள் ஒன்று சேர்ந்தால் நிர்வாகிகள் செவிமடுப்பார்கள். நிறுவனத்தைக் கைவிடாது அதர்மத்தை நீக்க செயற்பட வேண்டும்.

கேள்வி:
எமது நோக்குகளை அடையச் செயற்படும் செயல்கள் ஆன்மீக முன்னேற்றத்திற்குத் தடையாக இருக்குமா?

பதில்:
சுவாமி அரவிந்தர் "இலக்கு இல்லாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வு பிரயோசனமற்றது" என்று சொல்லியுள்ளார். இலக்கு மிகவும் உயர்ந்ததாகவும், பலருக்கு நன்மை பயக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும். வருங் காலத்தைப்பற்றி மிகவும் முன்னரே திட்டம் போட வேண்டும். உதாரணமாக சுவாமி பட்டமளிப்பு விழாவிற்கு என்ன நிற அங்கிகள் போட வேண்டுமென்று 6 மாதத்திற்கு முன்பே துணைவேந்தரிடம் கேட்டார். அவர் ஆயத்தமாவில்லை. சுவாமி "கவலை வேண்டாம், நான் துணியெல்லாம் வாங்கித் தைக்கவும் கொடுத்திட்டேன்" என்று சொன்னார். இதைத் தான் சுவாமி நேரத்துடன் தொடங்கு, மெதுவாகச் செல், பாதுகாப்பாகப் போய்ச் சேர் என்று கூறினார்.

ஒரு முறை பல்கலைக்கழக மானியக்குழு எமது நிறுவனத்தைப் பார்வையிட வருவதாக இருந்தது. துணை வேந்தர் சுவாமியிடம் தாம் குழுவிடம் என்ன சொல்ல வேண்டு மென்று கேட்டார். சுவாமி "அதைச் செய்வது உமது பொறுப்பு நீரே செய்ய வேண்டும்" என்று சொன்னார். சுவாமி தங்களின் விருப்பத்தின்படியே எல்லாம் நடக்கும் என்று துணைவேந்தர் கூறினார். சுவாமி "ஆம் நீங்கள் உங்களின் திட்டத்தை வரைந்தால் தான் அது என் அதி மேலான திட்டத்திற்குள் அமையும்" என்றார். கவலையில்லாது வருங்காலத் திட்டங்களை தீட்டவும் வருங்காலத்தை மிகவும் கவனமாகப் பார்த்தால் அது என்னை வந்தடையும் வருங்காலத்திற்கு திட்டம் போடுவது தடையாக இருக்காது.

கேள்வி:
நடப்பதெல்லாம் முன்னரே நிர்ணயிக்கப் பட்டதா?

பதில்:
அப்படியென்றால் எமது வேலை என்ன? மனிதருக்கு இரண்டு சுய சங்கல்ப்பங்கள் உண்டு.

1. சரியான மனப்பாங்கு
2. சாதனை

உதாரணமாக, கங்கை நதியில் நான் குப்பையைப் பார்த்தேன், நதியைப் பார்க்கவில்லை. அங்கே எனக்குத் தெரிவு இருந்தது. சீரான ஆன்மீக சாதனை மூலம் மனப்பாங்கை மாற்றலாம்.

அர்ஜுனா கீதா உபதேசத்திற்குப் பின்பு தனது மனப்பாங்கை மாற்றினான். முதலில் பழிவாங்கவும் இராச்சியத்தை மீளப் பெறவும் போர் புரியப் புறப்பட்டான். கீதா உபதேசத்திற்குப் பின்பு கிருஸ்ண பகவானிடம் சரணடைந்து, சகல செயல்களையும் கிருஸ்ணருக்கே அர்ப்பணித்தான். இதன் மூலம் பிறப்பின் இலக்கை அடைந்தான்.

உங்களின் புற்றுநோய் காப்பகத்திற்குப் போயிருந்தேன். அங்கே அநேகரில் புற்றுநோயின் வலியிலும் மேலாகப் புன்னகையைக் கண்டேன். வலி உண்டாவது விதி. அதனால் துன்பப்படுவதோ விடுவதோ எங்களின் தெரிவு.

மீராபாய் கொடுக்கப்பட்ட நஞ்சை கிருஸ்ணருக்கு அர்ப்பணித்துப் பருகினாள். அது தேனாக மாறியது.

கேள்வி:
எமக்கு சுவாமியின் போதனைகளைத் தெரிந்தாலும் பின்பற்ற முடிவதில்லை. சோம்பலும் விடுகிறதில்லை. விளக்கம் தாருங்கள்?

பதில்:
குற்ற உணர்வு தேவையில்லை. நடந்ததும் நல்லதே நடக்கப் போவதும் நல்லதேயென ஏற்றுக் கொள்ள வேண்டும். நிகழ்காலம்தான் இறைவனின் கொடை. இதைப் பவித்திரமாக பாவிக்க வேண்டும். நாம் தர்மத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்.

தர்மா என்றால் மதிப்பேற்றம். கேட்கும் போது உன்னிப்பாகக் கேட்பது தர்மம். காரைச் செலுத்தும் போது வீதி விதிகளைக் கடைப்பிடிப்பது தர்மம். அடிப்படைத் தேவை இல்லாது கஸ்டப்படுவோருக்கு உதவுவது தர்மமாகும். முன் உதாரணமாக வாழ்தலும் தர்மமேயாகும். ஒன்றை 5 நிமிடங்கள் கேட்டாலோ, படித்தாலோ, 30 நிமிடங்கள் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும்.

ஒருவன் தலைமீது கூடையில் உணவுப் பண்டங்கள் சுமந்து சென்றான். பாரத்தோடு நடந்தால் களைப்பும் சோர்வும் ஏற்பட்டன. அவன் மரத்தின் கீழே அமர்ந்து சாப்பிட்டு களை ஆறி நடக்க ஆரம்பித்தான். சுமையும் குறைந்தது. முடிவில் சக்தியும் பிறந்தது.

மற்றவர்களிடமிருந்து எழுப்பப்பட்ட ஆசைகள் எமது முன்னேற்றத்தைத் தடுக்கின்றன. எமது நோக்கில் ஆழமாய் இருந்தால் சோம்பல் எம்மை அணுகாது.

ஜெய் சாயிராம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய சாயி இளைஞர் மாநாடு இரண்டாம் நாள் (30.4.2016) உரைகள்



ஓம் ஸ்ரீ சாயிராம்

சாயி மாதாவின் பொற்கமலப் பாதங்களில் எனது பணிவான அன்பான சமர்ப்பணங்கள். உங்கள் அனைவரையும் மீண்டும் வரவேற்கின்றேன். திரும்பவும் உங்களுடன் இருப்பதில் ஆனந்தம்.

சுவாமி ஒரு அருளுரையின் போது நிலக்கரியையும் வைரத்தையும் ஒப்பிட்டார். இரண்டும் கார்பன் அணுவினாலேயே உருவாக்கப்பட்டது. நிலக்கரி ஒளிக் கதிர்களை உள்வாங்குகிறது. வைரமோ ஒளிக்கதிர்களை வெளியே சிதறுகிறது. இதனால் இது பளபளக்கிறது. அதிக விலை உயர்ந்த ஆபரணங்களில் சேர்க்கப்படுகிறது. நிலக்கரியோ இறுதியில் சாம்பலாகப் போகிறது. ஆகவே நாம் சகல நிகழ்வுகளிலும் இருந்து பாடங்களைக் கற்றுக் கொண்டு மற்றையவர்களையும் உயர்த்த வேண்டும். இதில் நாம் சுவாமியைவிட வேறொருவரைச் சந்திக்க முடியாது.

தனிமனிதனை ஆராய்வதன் மூலமே மானிட சமுதாயத்தைப் பற்றி அறியலாம். சுவாமியின் இக்கூற்றை நாம் விளங்கவில்லையாகையால் அவரிடமே விளக்கும்படி கேட்டோம். நீங்கள் காட்டிலே நடந்து போகும் பொழுது காலில் முள்ளு குத்தி விட்டால் என்ன செய்வீர்கள் என்று கேட்டதற்கு கைகளால் உடனே முள்ளை எடுப்போம் என்று சொன்னோம். சுவாமி காலுக்கு ஏன் கை உதவப் போக வேண்டுமென்று கேட்டார். ஏனென்றால் காலின் வலியைக் கைகளும் உணர்ந்தன. முழு உடம்புமே அதனால் பாதிக்கப் படுகிறதெனக் கூறினார். சமுதாயமே கடவுளின் உடம்பு. சமுதாயத்தில் ஒருவருக்கோ அல்லது ஒரு பகுதியினருக்கோ துன்பம் நேர்ந்தால், ஏனைய சமுதாயம் உதவ வேண்டும். இயற்கையில் எல்லாமே பிணைக்கப்பட்டுள்ளன என்று கூறினார்.

உதாரணமாக ஆட்டோ ராஜாவின் வாழ்க்கையைப் பார்ப்போம். இம் மனிதன் பெங்களூர் தெருக்களில் ஆட்டோ ஓட்டுபவர். போகும் போது யாராவது தெருவில் கிடந்தால் தூக்கிக் கொண்டு போய் கவனிப்பார். அவருக்கு மனிதர் மேல் மிகவும் இரக்கம் உண்டு. அவர் சிறுவனாக இருந்த பொழுது சிறுபிள்ளை மறியலில் சிலகாலம் வாழ்ந்தார். அங்கே மிகவும் துன்பத்திற்கு ஆளானார். இதனால் மிகவும் இரக்க முள்ளவராக இருந்தார். வீட்டிற்கு எடுத்துச் சென்ற போதும் அங்கும் ஏச்சு வாங்கினார். பின்பு அவருக்கு நிலம் நன்கொடையாகக் கிடைத்தது. காப்பகம் நடத்தத் தொடங்கினார். அங்கு இப்போது 300 பேர் ஆறுதலும் உதவியும் பெறுகிறார்கள்.

இன்னொரு நிகழ்வு அசோக் என்ற வயது போன பார்வை குன்றிய பக்தர் சுவாமியின் வேலைக்காக கார் ஓட்டுவார். ஒரு முறை அவரும், சேவாதாளும் வளைவுகள் நிறைந்த பாதையில் காரைச் செலுத்தினார்கள். சேவாதாள் அவரிடம் "அன்பரே எவ்வாறு காரை கெட்டித்தனமாக ஓட்டுகிறீர்கள்"? என்று கேட்க, அவர் கார் செலுத்தும் கைகளை மேலே தூக்கி வைத்திருந்தார். கார் வளைவுகளை நிதானமாகக் கடந்து சென்றது. "இப்போது யார் காரை ஓட்டுவது என்று தெரியுதா?" என்று கேட்க, சேவாதாள் சுவாமியின் அற்புத நிகழ்வுகளில் இதுவும் ஒன்று என்று விளங்கிக் கொண்டார். இதுதான் முழுமையான சரணாகதியும் தூய பக்தியு மாகும். உண்மையான சாதகன், மேலும் மேலும் சாதனையைத் தீவிரமாக்கிச் செய்வான்

பிரசாந்தி நிலைய பொது வைத்திய சாலைப் பணிப்பாளர் டாக்டர்.அல்றேஜா (Dr.Alreja) வயோதிபர், பிரசாந்தி நிலையத்தில் வசித்தவர். அவர் ஒவ்வொரு நாளும் சுவாமியின் அறைக்குப் போய்

NATIONAL SAI YOUTH CONFERENCE
DIVINE LOVE
April 2016 Sri Lanka



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவளாவி அவரின் இரத்த அழுத்தம் யாவும் அளப்பார். அவர் இடை விடாத நாமஸ்மரணையையே சாதனையாகச் செய்தார். அதன் உச்சக்கட்டம் தான் அஜெப ஜெப என்று சொல்வார்கள். அவர் சுவாமியிடம் தான் "தத்துவம் அசி" என்ற நிலையை அனுபவிக்க வேண்டுமென்று சொன்னார். சுவாமி ஜனக மகாராஜனின் நிகழ்வைக்கூறினார். ஒருநாள் தனக்கு ஞான நிலையை குதிரையில் ஏறுவதற்கு முன்பு ஏற்படுத்தும் ஞானியை ராஜ ரிஷியாக நியமிப்பேன் என்று எங்கும் அறிவித்தார். ஒருவரும் முன்வரவில்லை. யக்ஞுவல்கயரே முன் வந்தார். ஞான நிலையை அடைந்தவர் ஒருவர் இன்னொரு வருக்கு ஞானநிலை அனுபவத்தை ஏற்படுத்தலாம் என்று மகாராஜாவுக்கு தெரிந்திருந்தது. யக்ஞுவல்கய இராசாவை சிம்மாசனத்திலிருந்து இறங்கி, உடுப்பை மாற்றித் தன்னைப் பின்தொடருமாறு பணித்தார். இராஜாவும் உடனே இறங்கி அவரைப் பின் தொடர்ந்தார். அவர் காட்டிற்குள் கூட்டிப் போய் ஒரு மரத்தடியில் இருத்தி குரு தட்சணை கேட்டார். என்ன தரலாம் என்று கேட்க மனதைத் தருமாறு கேட்டார். அவரை அப்படியே இருத்தி விட்டு ரிஷி காட்டிற்குள் போய் விட்டார். மகா ராஜாவும் நிஷ்டையிலிருந்தார். அரண் மனையில் பெரிய ஆரவாரம். போன ராஜா வரவில்லை என்று எங்கும் தேடி காட்டிற்குள் கண்டார்கள். யார் என்ன கேட்டாலும் ஒன்றும் கேட்காததைப் போலிருந்தார். பின்பு காட்டிற்குள் ரிஷியைக் கண்டு பிடித்து ராஜாவை குணப்படுத்தித் தருமாறு ராணி அரண்மனை நிர்வாகிகள் கேட்டார்கள். ரிஷி இராசா முன் சென்று கண்ணைத் திற வென்று சொல்ல, கண்ணை திறந்தார். ரிஷி இராசாவைக் குதிரை மீது ஏறிச் செல்லு மாறு கூறினார். குதிரையில் ஏறும் போது ரிஷி இராசாவின் காதில் இரகசியமாக 'தத்துவம் அசி' என்று உபதேசம் செய்ய இராசா அந்த நிலையை அடைந்தார்.

டாக்டர் அல்றேஜா சுவாமியிடம் சில வினாடிகளில் சாட்சாத்கார நிலையை அடையலாம் என்பதைத் தான் நம்பவில்லையென்று திரும்பத் திரும்பச் சொல்ல சுவாமியும் அது இயலும் இயலும் என்று சொல்லி மூன்றாவது நாள் அவரை இறுகத் தழுவி காதில் 'தத்துவம் அசி' என்று உபதேசித்தார். டாக்டர் ஜோதியாக மாறியதாக உணர்ந்து உணர்ச்சியற்று வீழ்ந்தார். சுவாமி விபூதி கொடுத்துப் பழைய நிலைக்குக் கொண்டு வந்தார். சுவாமியின் பாதத்தில் வீழ்ந்து வணங்கி சரணாகதியடைந்தார். தான் இந்த நிலையை அடைய வேண்டுமென்ற ஆர்வமும் தீவிர முயற்சியும் பலனளித்தது.

நாமத்தையும், உருவத்தையும் தேர்ந்தெடுத்து விட்டால் விடாது பிடித்துக் கொள்ள வேண்டும். இதைத்தான் சுவாமி பல இடங்களில் தோண்டாமல், ஒரு இடத்திலேயே ஆழமாகத் தோண்டினால் நீர் கிடைக்கும் என்று சொன்னார்.

சிலர் பிரேமசாயி பற்றிக் கேட்பார்கள். எனக்கு சத்திய சாயி பாபாவே போதும். இதுவும் உண்மையான பக்தனின் வெளிப்பாடு. எல்லாம் ஒன்று என்ற மனப்பாங்கும் உத்தமமான பக்தனின் இலட்சணம்.

அலைகள் சமுத்திரத்தில் ஒன்றாவது போல நாமும் நமது தெய்வத்துடன் ஒன்றாக வேண்டும். ஒரு முறை நான் யோசித்தேன். "நான் எப்படி சத்திய சாயி பாபாவாக ஆக முடியும். நான் கண்ணாடி போட்டிருக்கிறேன். சுவாமி கண்ணாடி போடுவதில்லை." சில காலத்திற்குப் பின்பு, சுவாமி எனது கண்ணாடியைக் கழட்டித் தான் மாட்டிக் கொண்டு என்னை உற்று நோக்கி இப்போது சாயிபாபா கண்ணாடி போட்ட பாபா ஆவார். என்று சொன்னார் அலைகள் ஒன்றோடொன்றும் சமுத்திரமும் ஒன்றாகி விடும். மாணவர்களும் எப்போதும் சுவாமிக்காகத் தயாராய் இருக்கிறார்கள்.

ஒரு நாள் ஹில் வீயூ மைதானத்தில் ஒரு மேற் பகுதியில் மாணவன் பரீட்சை இரண்டு நாளில் நடக்கப் போவதால், கவனமாகப் படித்துக் கொண்டிருந்தான். அவன் இருந்த இடம் இப்போது சிவபெருமான் சிலை இருக்கும் இடம் முன்னர் அதே இடத்தில் ஒரு களஞ்சிய அறை இருந்தது. சுவாமி அந்த இடத்திற்கு வந்து மாணவன் பரீட்சைக்காகக் படிப்பதால், சேவாதாள்மாரைக் கூப்பிடுவோம் என்று சொல்லிப் போய் விட்டார். மாணவன் இவ்விடயத்தை ஏனைய மாணவர்களிடம் சொல்லி, எல்லோரும் சேர்ந்து அந்தக் களஞ்சிய அறையை உடைத்து அவ்விடத்தைத் துப்பரவு செய்து விட்டார்கள். சுவாமி வந்து பார்த்தார். அடுத்த நாள் தரிசனத்தின் போது இம் மாணவர்களைப் பார்த்து புன்னகை பூர்ந்தார். மாணவர்களும் புன்னகை பூர்த்தார்கள். சுவாமி ஏதாவது சைகை காட்டினால் போதும், மாணவர்கள் உடனே செய்து முடித்து விடுவார்கள். உண்மையான பக்தன் பகவானிடமே எப்போதும் சரணடைந்து இருப்பான். அவரே சகல கஷ்டங்களையும் நீக்க வல்லவர்.


கேள்வி - பதில்

கேள்வி:

மாணவராகிய நாம் சுவாமியின் சேவையில் ஈடுபடுவதால்



Digitized by Noolaham Foundation.



எமது படிப்புத் தடைப்படுவதாக உணர்கிறோம். சுவாமி இதைப் பற்றி என்ன சொல்லியுள்ளார்?

பதில்:
இது ஒரு முக்கியமான கேள்வி. சுவாமி சுருக்கமான சாதனைகளைத் தந்துள்ளார். வகுப்பில் எடுக்கும் புள்ளிகளிலும் பார்க்க அங்கே எடுக்கும் குறிப்புக்களே முக்கியம். நல்ல புள்ளி எடுக்கா விட்டால் அதுவும் ஒரு குறைதானே. ஒரு பறவை பறப்பதற்கு இரு இறக்கைகள் தேவை. உலகவியலும், ஆன்மீக அறிவும் தேவை. பறப்பதற்கு காற்றும் தேவை. ஆண்டவனின் கிருபைதான் காற்றாகும். நாங்கள் படிப்பதை ஆழ்ந்த சிந்தனைக்கு எடுக்க வேண்டும்.

நான் எம்.பி.ஏ படிக்கும் போது என்ன செய்தேன் என்று சொல்கிறேன். சின்னத் துண்டுகளில் கேள்விகளை ஒரு பக்கத்திலும் உசிதமான மறுமொழிகளை மறுபக்கத்திலும் எழுதுவேன். நேரமுள்ள நேரம் அவற்றை எடுத்து ஆழமாகச் சிந்தித்துப் படிப்பேன். சந்தேகங்களைக் குறித்து வைத்து ஆசிரியர்களிடமோ அல்லது சிரேஷ்ட மாணவர்களிடமோ கேட்டுத் தெளிவடைவேன். நானே எனக்குப் பரீட்சை வைப்பேன். அதில் 80 புள்ளி எடுக்க வேண்டுமென தீர்மானம் எடுப்பேன். ஆன்மீக சாதனைகளில் ஈடுபட்டுக் கொண்டு ஆழ்ந்த சிந்தனையை உபயோகித்து, 6 மணித்தியாலங்கள் படித்து விளங்குவதை அரை மணித்தியாலத்தில் செய்து முடிக்கலாம். பாடவிதானத்தை படித்து முடிக்க வேண்டும்.

கேள்வி:
தீய எண்ணங்கள் எவ்வாறு அன்பு காட்டுவதைத் தடுக்கின்றன?

பதில்:
கரு முகில்களும் வெண்முகில்களும் ஒரே நேரத்தில் வரலாம். சிறிய கல்லும் பெரிய கற்களும் ஒன்றாக விழலாம். கடும் மழைக்குக் குடை பாதுகாப்பாக அமையும். இயற்கையை மாற்ற முடியாது. நாங்கள் எங்களைப் பாதுகாத்துக் கொண்டு நாம் தூய்மையடைய வேண்டும். பெரிதும் காலத்தால் சிறிதாகி விடும். வழியில் போடும் போது இரும்புக் கம்பி தடையாக இருந்தது. ஆமார், வாள், முதலியவற்றால் அகற்ற முடியவில்லை. அப்போது சிறிய சுடர் தன்னால் முடியுமென்று, அந்த இரும்புத் துண்டை மெல்ல மெல்ல காய்ச்சியது. ஒரு வெப்ப நிலையில் அது வளைந்து முறிந்து இடம் கொடுத்தது. தீய எண்ணங்களை அன்பு என்ற சுடரினால் அழிக்க முடியும்.

கேள்வி:
அன்பு கடமை, அன்பில்லாக் கடமை, கடமையில்லா அன்பு தெய்வீகமானது என்பதை விளக்கவும்.

பதில்:
ஒரு நிகழ்வு: பாதையோரத்தில் மூவர் கல்லுடைத்துக் கொண்டிருந்தார்கள். ஒவ்வொருவரையும் ஏன் உடைக்கிறீர்களெ னக் கேட்டார்.
முதலாவது: நான் பிழைப்பிற்காக உடைக்கிறேன். எனக்கு இதில் விருப்ப மில்லை என்று உதாசீனமாகச் சொன்னார்.
இரண்டாவது: உற்சாகமாக உடைத்துக் கொண்டிருந்தார். நான் ஒரு கோயில் கட்டுவதற்காக உடைக்கிறேன் என்று அமைதியாகப் பதில் சொன்னார்.
மூன்றாவது: மிகவும் ஆனந்தத்தில் கண்ணீர் மல்க உடைத்துக் கொண்டி ருந்தார். எனது இறைவனுக்குக் கட்டப் போகும் கோயிலுக்காக உடைக்கிறேன். மூவரும் கல்லுடைத்தார்கள். மனப்பாங்கு

NATIONAL SAI YOUTH CONFERENCE
DIVINE LOVE
April 2016 Sri Lanka



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்தியாசம். அர்ஜுனனுக்கும் கிருஸ்ணர் என்னில் சரணாகதி அடைந்து எனக்காகவே அனைத்தையும் செய் என்று கூறினார். இதனால் நீ என்னை வந்தடையவாய் என்றும் சொன்னார். ஆன்மீகத்தில் ஒரு விதியுண்டு தன்னலம் உலக பந்தத்தில் ஆழ்த்துகிறது. தன்னல மின்மை விடுதலையில் முடிகிறது. இது தான் கடமையில்லா அன்பு.

கேள்வி:
தனிநபரில் கரிசனை காட்ட வேண்டும் என்று சொல்லப்பட்டது. தனிமனிதனின் நடத்தையால் நிறுவனம் தாக்கமடையு மென்றால் என்ன செய்ய வேண்டும்?

பதில்:
குருநானக் என்ற ஞானி ஒரு கிராமத்தில் போய் அங்குள்ளவர்கள் எல்லோரும் நல்லவர்களாக இருந்தபடியால் கிராமத்தை விட்டு விலகச் சொன்னார். இன்னொரு கிராமத்தில் எல்லோரும் கெட்டவர்கள் அவர்கள் ஆனந்தமாக இருப்பதற்கு கிராமத்திலேயே தங்கியிருக்கச் சொன்னார். சீடனுக்கு வியப்பாய் இருந்தது. "நல்லவர்கள் வாழ்ந்த கிராமத்தைக் கலைத்தீர்கள். கெட்டவர்கள் வாழ்ந்த கிராமத்தை ஆசீர்வதித்தீர்கள். இதன் விளக்கம் என்ன?" என்று கேட்டான். நல்லவர்கள் நல்லதையே எங்கும் பரப்பு வார்கள். தீயவர்கள் ஒடுங்கி இருந்தால் நல்லது என்றார்.

எம்முள்ளே தீயது இருந்தால்தான் வெளியிலே தீமையைப் பார்ப்போம். நாக்கும் கூரிய பற்களும் ஒரே இடத்தில் இருக்கின்றன. மற்றவரை விமர்சிக்க என்ன உரிமை உண்டு? நாங்கள் ஒரு விரலால் குறித்தால் எங்களை நோக்கி மூன்று விரல்கள் காட்டுகின்றன. மகாத்மாகாந்தி தான் இனிப்புச் சாப்பிடுவதை நிறுத்தி விட்டுத்தான் குழந்தையை இனிப்புச் சாப்பிட வேண்டாம் என்று சொன்னார்.

அர்ஜுனா கிருஸ்ணபகவானிடம் ஏன் இந்தப் பாரதப் போர்? என்று கேட்டார். அதற்கு பகவான் "இது பல முன்னைய பிறப்புக்களின் விளைவே நிகழ்காலம். இந் நிகழ்காலமே பல பின்னைய பிறப்புக்களுக்கு வித்தாகும். இந் நிகழ்கால நிகழ்வுகளை முழுமையாக விளங்க முடியாது. எங்களுடைய நிகழ்காலத்தை ஏற்றுக் கொண்டால் அமைதி நிலவும்.

ஒருமுறை சுவாமியின் அறையில் படுத்திருந்தேன். சுவாமி துயில் கொள்வதில்லை. நான் எழும்பி வெளியே வந்ததும், நான் ஒரு பிரகாசமான ஒளியாக மாறினேன். அப்போது நான் எனது முன்னைய 6 பிறவிகளை அறிய முடிந்தது. என்னை வேறொருவர் மதிப்பிட முடியாது. அடுத்து என்னத்திற்காக சுவாமி எங்களைத் தயார் செய்கிறாரோ தெரியாது. நாங்கள் எங்களையே மதிப்பீடு செய்ய வேண்டும். சுவாமியின் கருவியாகச் செயற்படுவோம். அவரின் போதனைகளை வாழ்க்கையில் கடைப்பிடிப்போம். பின்பு மற்றையவர்களை மதிப்பீடு செய்யலாம். ஒருவர் மீது தூய்மையான அன்பு இருந்தால் தான் அவரை விமர்சிக்கலாம். அந்நிலை வரும் வரை எம்மைத் திருத்திக் கொள்ள வேண்டும்.

கேள்வி:
இப் பிறப்பில் நாம் கடவுளென்று எப்படி உணரலாம்?

பதில்:
அலையும் சமுத்திரமும் ஒன்றேயாகும். வெள்ளைநிற ஒளிகள் உள்ளன. நாமும் கடவுள்தான் ஒரு வித்தியாசம். நாம் வரையறுக்கப்பட்ட கடவுள் அவர் வரையறையில்லாத கடவுள். நாம் 3 நிலைகளிலும் அவற்றிற்கு அப்பாலும் உள்ளோம். பார்ப்பவர் உண்மையில் படைத்தவர் அல்லர்.

கடவுள் வலியுறுத்துகிறார்.
1. சாதனைகள் செய்தல்
2. சரியான மனப்பாங்கு என்ற இரண்டையும் நாமே திறமையாக எமது பாத்திரத்தை நடித்தால் நாமே இயக்கு னராக மேலே ஏறலாம்.
   கல்லிலிருந்து செதுக்கப்பட்ட சிலையைக் கடவுளென்று வணங்குகிறோம். நம்பிக்கைதான் கடவுளென்று வணங்குகிறோம். நம்பிக்கைதான் கடவுளாக்குகிறது. கல்லு கடவுளாக மாறினால், மனிதன் ஏன் கடவுளாக மாற முடியாது?

கேள்வி:
தன்னலமே தூய்மையான அன்பு விருத்திக்குத் தடையாய் உள்ளது. இதை எப்படி அகற்றலாம்?

பதில்:
ஆன்மீக விதி ஒன்றுண்டு.
- தன்னலம் உலக பந்தத்தை ஏற்படுத்தும். கடவுளிலிருந்து பிரித்து விடும்.
- தன்னலமின்மை விடுதலையைக் கொடுக்கும். கடவுளுடன் சேர வைக்கும்.

எம் மத்தியில் பல உதாரணங்கள் உள்ளன. கீழ் நிலையை அகற்றினால் மேல் நிலையை அடையலாம். சிறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீரோடைதான் அழிந்து பெரிய ஆறாக மாறுகிறது. விதை தன்னை அழித்து பெரிய மரமாக வளர்கிறது. மனிதனும் கீழ்த் தன்மையை அழித்து தெய்வமாகலாம். சுவாமி ஒவ்வொரு கணப் பொழுதும் புன்னகையுடன் அன்பாயும் இரு என்று சொல்கிறார். அன்பிலிருந்து புன்னகை எழுகின்றது. இதிலிருந்து தூய அன்பு விருத்தியடைகிறது. தூய அன்பின் தன்மைகளாவன:

ஆழமானது
விரிவானது
தன்னலமற்றது.

சுவாமி ஒரு முறை எங்களுக்கு ஒரு தர்மீக மந்திரம் சொல்லித் தரப் போவதாக, அரை மணித்தியாலம் அதன் மகிமையைப் பற்றிச் சொன்னார். நாங்களும் மிக ஆர்வமாக இருந்தோம். இது தான் மந்திரம். கவனமாகக் கேளுங்கள்.

"நான் நாயல்ல, நான் மனிதன்" என்றதைச் சொல்லி கீழ்த்தரமான எண்ணங்கள் எழும் போது இதைச் சொல்லவும் என்றார்.

நாய்க்கு எலும்புத்துண்டைப் போட்டால் உடனே பாய்ந்து கவ்விக் கொள்ளும் நாங்களும் இதைப் போல் ஆசைகளை எழும்பவிடக்கூடாது. எனக்கு இது தேவையா, அவசரமா, பலன் அளிக்குமா என்று ஆராய்ந்தே செயல்களில் ஈடுபட வேண்டும். மிருகத் தன்மையிலிருந்து மனிதத் தன்மைக்கு உயர்ந்து தெய்வீகத் தன்மைக்கு மேலோங்க வேண்டும்.

கேள்வி:
சூட்சும உடம்பின் மூலம் சுவாமியின் அனுபவங்களைப் பற்றிக் கூறுங்கள்.

பதில்:
எனக்குச் சத்திய சாயி பாபாவே போதும். சூட்சும உடம்பின் மூலம் அற்புதங்கள் நிகழ்கின்றன. இதற்காக போகும் பாதையிலிருந்து விலக வேண்டாம்.
மனிதப் பிறப்பே அரிது. சாத்திரங்கள் 6 மனிதப் பிறவியின் பின்பே முக்தி நிலை கிடைக்கும் என்று சொல்கின்றன. சத்திய சாயி நிறுவனத்தில் சேர்ந்தது மூலம் பிறவிக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டோம்.
ஒரு படத்தைச் சுவரில் தூக்க முன்பு ஆணி திடமாகப் பதிந்துள்ளதா என அசைத்துப் பார்ப்போம் இதே போல சுவாமியும் எங்களின் நம்பிக்கையை உலுக்குவதற்கு சோதிப்பதற்கு சில சோதனைகளைத் தருவார். நாம் சுவாமியின் மீது உறுதியான நம்பிக்கை வைக்க வேண்டும்.

எனக்கு விரும்பிய பிரார்த்தனை:
"சமஸ்த லோகா சுகினோ பவந்து" என்பது தான் . உருவ நிநலையை எமது இதயத்தில் அருவ நிலையாக நிறுத்த வேண்டும்.

கேள்வி:
பிராமணர் அல்லாதவர்களும், மாமிசம் புசிப்பவர்களும் வேதபராயணம் செய்யலாமா?

பதில்:
அசைவ உணவை விடும்படி சுவாமி சொன்னது எமது




நன்மைக்காகவேயாகும். ஆதிவாசிகள் வேட்டையாடிச் சீவித்தார்கள். அப்போது மேல் நிலையிலிருக்கும் ஜீவராசிகள் கீழ் நிலையிலுள்ளவற்றை உணவுக்காகக் கொல்லலாம் என்ற ஒரு இயற்கை நியதி இருந்தது. இப்போது மரக்கறி வகைகள் ஏராளமாகக் கிடைக்கிறது. இப்போது விலங்குகளை உணவுக்காகக் கொல்லத் தேவையில்லை. நாம் மற்றைய உயிரினங் களுக்குக் கொடுக்கும் துன்பம் எங்களை வந்தடையும்.
வேதம் எல்லோரும் ஓதலாம்.
சாயி நிறுவனத்திலுள்ளவர்கள் அசைவ உணவை விடுவதே சாலச் சிறந்தது.

சரியான புரிந்துணர்வுடன் நாமும் உயர்ந்து மற்றையவர்களும் உயர்வதற்கு உதவி செய்ய வேண்டும்.

தூய்மையான அன்பிருந்தால் "எப்போதும் உதவி செய், ஒரு போதும் தீங்கு செய்யாதே" என்பதைப் பின்பற்ற இலேசாக இருக்கும்.

சுவாமிக்கும் உங்கள் அனைவரு க்கும் நன்றி

ஜெய் சாயிராம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டாக்டர்.தீபக் ஆனந் அவர்கள் யாழ்ப்பாணம் சாயி நிலையத்தில் 7.5.2016 ஆற்றிய உரை

மிகப் பணிவுடனும், பக்தியுடனும் என்னைப் பகவானின் பொற்கமலப் பாதங்களில் சமர்ப்பிக்கின்றேன். இங்கு வருகை தந்த இளைஞர்களின் எண்ணிக்கை குறைவாகத் தென்படுகிறது. இன்றைய உரை "உலக வாழ்வில் வெற்றி யடைவதற்கு ஆன்மீகம் அவசியம்" அவர்களுக்கு மிகவும் பயனுள்ளதானது.

எங்களில் அநேகர் எத்தனையோ ஆசைகளை நிறைவேற்றியிருந்தாலும், உள் நிறைவு இல்லாமல் சஞ்சலமடைகி றோம். எமக்கு எத்தனையோ பொறுப்புகள் (அரசியல், குடும்ப, நிறுவன) இருந்தாலும் நாம் அவற்றைச் செவ்வனே நிறைவேற்று வதில்லை. எங்களின் பொறுப்புகளை மற்றவர்களுக்குச் சுமத்திவிடுகிறோம்.

ஒரு நிறுவனத்திலிருந்து ஒருவர் சடுதியாக வேலைநீக்கம் செய்யப்பட்டார். அவர் வேறு ஒரு கம்பனியில் வேலைக்கு விண்ணப்பித்திருந்தார். நேர் காணலில், நிறுவன முகவர் சொன்னார்; "மிகவும் பொறுப்புடன் வேலை செய்பவர்தான். எங்களுக்குத் தேவை. நீர் பொறுப்புணர்வு உள்ளவரா?" என்று கேட்டார்கள். இதற்கு அவர்; "நான் முன்பு வேலைசெய்த கம்பனியில் அங்கு ஏற்பட்ட பல பிரச்சனை களுக்கும் நானே பொறுப்பு என்று கூறினார்கள். ஆகவே நான் பொறுப் புணர்வு உள்ளவன் என்று நினைக்கிறேன்" என்று கூறினார். அவருக்கு வேலை கிடைக்கவில்லை.

உலக வாழ்க்கையில் எத்த னையோ பேர் வெற்றி கண்டுள்ளார்கள்.



அது எப்படி என்று தெரிந்து கொள்ள ஒரு நிகழ்வைக் கூறுகிறேன்.

ஒரு முறை ஊட்டியில் (ootty) வீதியோரமாக நடந்து செல்கையில், இரண்டு அழகான வீடுகளைக் கண்டேன். யாருடைய வீடுகள் என்று விசாரித்த பொழுது, ஒன்று விப்றே (Vibro) என்ற கம்பனியின் சொந்தக்காரனினதும் மற்றையது இன்லோசைத் (Inlosys) என்ற கம்பனியின் சொந்தக்காரனதும் என்று சொன்னார்கள். எனக்கு வியப்பாக இருந்தது. இந்த இரு கம்பனிகளும் மிகவும் பெயர் போனவை. அவற்றின் மேலதிகாரிக்கே நேரமில்லாது பங்களூரிலும், மும்பாயிலும் வேலைகள் இருக்குமே. அவர்கள் எப்படி ஊட்டிக்கு வந்து தங்குவார்களெனக் கேட்டேன். அவர்கள் மாதத்திற்கு இரண்டு நாட்கள் இவ் வீடுகளில் வந்திருப்பார்களெனச் சொன்னார்கள். அவர்கள் இரு நாட்களும் வெளித்தொடர்புகள் எல்லா வற்றையும் துண்டித்து, ஆழமான சிந்தனையில் எவ்வாறு நிறுவனத்தை முன்னேற்றலாம் என்று இருப்பார்கள். இச் செயல் மூலம், அதி சிறந்த ஆக்க பூர்வமான சிந்தனைகள் எழுகின்றன. அவற்றின் மூலமும் கம்பனியின் முன்னேற்றத்தை ஏற்படுத்துகிறார்கள். மௌனத்தின் அடியிலே தான் மிகச் சிறந்த சிந்தனைகள் எழுகின்றன. அவை ஆண்டவனின் குரலேயாகும்.

சுவாமியும், உனது, குடும்ப, சமுதாய, நிறுவன மேம்பாட்டிற்கு ஒரு விடயத்தை ஒவ்வொருநாளும் செய்ய வேண்டு மென்று கூறியுள்ளார். தான் எங்களின் பூஜை அறையில், பிரம்ம முகூர்த்த நேரத்தில் (காலை 4 - 6 மணி) எங்களுக்கு வழிகாட்டல் சொல்ல எப்போதும் காத்திருப் பதாகவும் ஆனால் நாங்களோ எழும்பாமல் தூங்கிக் கொண்டேயிருக்கிறோம் என்று கூறியுள்ளார். ஆகவே ஒவ்வொரு நாளும் பிரம்ம முகூர்த்த வேளையில் 10 நிமிடமாவது ஆண்டவனுடன் பேசினால், ஆக்க பூர்வமான சிந்தனைகள் கிடைத்து வெற்றியடையலாம்.

நான் கலாநிதிப் படிப்பின் போது, ஆராய்ச்சியின் நிமித்தம் மும்பாயிலுள்ள HDFC உயர் அதிகாரியான

திரு.சுப்பிரமணியத்தைச் சந்தித்தேன். நான் அவரிடம் வெற்றியின் காரணம் என்ன வென்று கேட்டதும், கதிரையை விட்டுத் துள்ளி எழும்பினார். எனக்குச் சஞ்சலமாக இருந்தது. அவர் எழும்பி தனது சட்டைப் பையிலிருந்து சிறு படத்தை எடுத்துக்காட்டினர். அதில் ஒரு பக்கத்தில் சீரடிபாபாவும் விபூதியும், மறுபக்கத்தில் சத்தியசாயிபாபாவும் குங்குமமும் இருந்ததைக் காட்டினர். தான் கந்தோருக்கு அரைமணி நேரம் முன்னதாகவே வந்து, ஆழ்ந்த சிந்தனையில் பேனாவை எனது புருவமத்தியில் வைத்து பின்பு பகவானின் புருவ மத்தியில் வைத்ததும் மிகவும் சிறந்த தீர்மானங்கள் என் மனதில் எழுகின்றன. இதனால் நான் எடுத்த தீர்மானங்கள் ஒருபோதும் பிழைபோகவில்லை என்று சொன்னார். நாம் சுவாமியிடம் முழுவதுமாகச் சரணகதி அடைந்துள்ளேன். இதுதான் உண் மையான பக்தனின் செயற்பாடு. நான் அவரை புட்டபர்த்தியிலுள்ள பல்கலைக்கழகத்திற்கு வருமாறு அழைத்தேன். அவர் வரமுடியாதென்றார். ஏன் என்று கேட்டபொழுது, “சுவாமி எனக்கு மிகவும் அழகான அருமையான பொக்கிஷத்தைத் தந்துள்ளார். அதை நான் மிகவும் பவித்திரமாகப் பராமரிக்கவேண்டும்” என்று சொன்னார்.


அது என்ன என்று கேட்க, “எனக்குத் தசை குறுக்கமுள்ள மூளைக் குறைவான அழகான குழந்தையைத் தந்துள்ளார். மனைவியாரும் இறந்து விட்டார். ஆகவே நான் அக் குழந்தையைச் சிறப்பாகப் பராமரிக்க வேண்டும் என்று” கூறினார். அவரின் காலடியில் வீழ்ந்து வணங்க வேண்டும் போல் எனக்குத் தோன்றியது. இங்கே அவர் கடவுள் தந்ததெல்லாம் அருமையான பரிசில்களே என்று ஏற்றுக் கொண்டுள்ளார். இதுதான் உண்மையான பக்தனின் மனப்பாங்கு.

நாம் செல்வம், அதிகாரம் பதவி ஆகியவற்றில்தான் வெற்றியிருப்பதாக நினைத்துச் செயற்படுகிறோம். இதற்கு ஒரு கதை.

ஒரு வணிகர் வியாபாரத்தின் பொருட்டு, நீண்ட நாட் பயணத்தை மேற்கொண்டார். ஒருநாட் காலை, அவ்வீட்டிலுள்ள சிறு பிள்ளை அழுது கொண்டு தாயிடம் ஓடியது. ஏன் அழுகிறாய் என்று தாய் கேட்க, “அறையிலே முன் பின் தெரியாத ஒருவர் தூங்குகிறார். நான் பயந்துவிட்டேன்” என்று கூறியது. தாய் அவர் உன் தகப்பன், வெகுநாட்களுக்குப் பின் வந்துள்ளார். அவர் உனக்காக எவ்வளவோ கொண்டு வந்துள்ளார். இதுவெல்லாம் குழந்தைக்கு விருப்பமானது. பிள்ளையும் அவற்றிற்கு மதிப்புக்கொடுக்குமா? நெருங்கி வாழ்வதையே பிள்ளை விரும்புகிறது.

சுவாமி ஒரு பக்தனுக்கு இருக்கவேண்டிய இரண்டு செயற்பாடுகளைக் கூறியுள்ளார்.

01. முதல் தடவை சுவாமியின் தரிசன நிகழ்ச்சியையும், முதல் தடவை சுவாமி சம்பாஷித்து, விபூதிதந்ததையும், முதல் தடவை கனவில் வந்ததையும், திரும்பத்திரும்ப நினைவுகூர்ந்து புழகாங்கிதம் அடைய வேண்டும். அவரின் படத்தைக் கண்டதுமே இந்த உட்கிளர்ச்சி எழும்ப வேண்டும். இந்த ஆனந்தத்தை எப்போதுமே அனுபவிக்கத் தெரிய வேண்டும்.
ஒருமுறை சுவாமியின் பாடசாலை மாணவன்,



பாதநமஸ்காரம் எடுக்க வேண்டுமென்று ஆசைப்பட்டார். பொருத்தமான இடத்தில் அமர்ந்திருந்தான். சுவாமி வந்ததும், சுவாமியின் அனுமதியைக்கேட்டு பாதநமஸ்காரம் செய்தான். மிகவும் ஆனந்தத்தில் ஆழ்ந்தான். அடுத்த நாளும் பாதநமஸ்காரம் எடுக்க அனுமதி கேட்டான். ஏன் என்று கேட்க, சுவாமி மீது தனக்குள்ள அன்பினால் என்று சொன்னான். சுவாமி சொன்னார். நானும் உன்மீது 1000 தடவைக்கு மேலான அன்பு வைத்துள்ளேன். நேற்றைக்கு கிடைத்த பாதநமஸ் காரத்தின் மதிப்பு விளங்கவில்லையே என்று சுவாமி சொன்னார். தரிசனம், சம்பாஷணை, பஜன் போது எழுந்த ஆனந்தத்தைத் திரும்பத் திரும்ப நினைவு கூர்ந்து, நிரந்தரமான பதிவாக மாற்ற வேண்டும். இது நிரந்தர ஆனந்தத்தை தரவுள்ளது.

02. இரண்டாவது இன்று தான் எமது கடைசி நாளாக இருக்கும் என்ற மனப்பாங்குடன் வாழ வேண்டும் இம் மனப்பாங்கில் எல்லாம், அதிகாரம், பதவியை நாட மனம் வருமா? யாரிலும் பழிக்குப் பழி வாங்க மனம் வருமா? யாரிடமும் வெறுப்பு ஏற்படுமா?

NATIONAL SAI YOUTH CONFERENCE
DIVINE LOVE
April 2016 Sri Lanka



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லவே இல்லை. குடும்பத்துடன் அமைதியாக பூஜை அறையில் சுவாமியை வழிபடவே முயற்சிப்பேன்.

சக்கரவர்த்தி பரீக்ஷித் என்ன செய்தார்? ஏழுநாட்கள் வாழ்நாள் இருப்பதாக அறிந்ததும், இராச்சியம், சுற்றத்தார் எல்லாவற்றையும் துறந்து பகவதம் சொல்லக் கேட்டுக் கொண்டி ருந்து இறைவனடி சேர்ந்தார். எங்கள் எல்லோருக்கும் தனித்தனியே பகவதம் உண்டு. ஆனால் எங்களு க்கோ கேட்க நேரமில்லை.

இராமகிருஷ்ண பரமஹம்சர் 3 விதமான அன்பைப்பற்றிச் சொன்னார்.

- பிள்ளைக்குமேல் தாய் வைத்தி ருக்கும் அன்பு
- கற்புக்கரசி கணவன் மீது கொண்ட அன்பு
- கருமி தனது பணத்தின் மீது கொண்ட அன்பு

இம் மூன்றையும் ஒன்றாகச் சேர்த்து கடவுள் மீது வைத்தால், 3 நாட்களிலேயே அவரை அடையலாம். நாம் முழுமையான அன்பை கடவுள் மீது செலுத்துவதில்லை. சிறு சிறு பகுதியாகத் தான் செலுத்துகிறோம். மேலும் ஆன்மீக சாதனைகளை வயது போன காலத்தில் செய்யலாம். பல வேலைகளுக்கு மத்தியில் இறைவனைச் சிந்திக்க நேரமில்லை. இப்படி நினைத்தால் அந்த நாள் வராமலே போய் விடும். நாங்கள் உறுதி பூண்டால் இன்றைக்கே தொடங்கலாம்.

ஒரு கஞ்சத்தனமான வியாபாரி க்குச் செல்வம் இருந்தது. பணத்தின் மீதே ஆசை இருந்தாலும், கடைசி நேரத்தி லாவது ஆண்டவனை நினைத்தால் மோட்சம் கிடைக்கு மென்று நினைத்தார். தனது நாலு மகன்களுக்கும் இராமா, கிருஷ்ணா, சிவா, நாராயணா என்ற பெயர்களை வைத்தார். கடைசித்தறுவாயில், ஒவ்வொருவராகக் கூப்பிட்டார். கடைசி மகனும் வந்ததைக் கேட்டவுடன், யார் கடையைப் பார்ப்பது என்று கத்தி உயிரை விட்டார். யமதர்மன் கடைசி நேரத்தை யாருக்கும் சொல்ல மாட்டான். நாம் தான் கடைசிநேரத்தில் ஆண்டவன் சிந்தனையில் இருக்க எம்மை எப்போதும் தயார்நிலையில் வைத்திருக்க வேண்டும்.

மகா அலெக்சாண்டர் பல தேசங்களைக் கைப் பற்றியும், இறுதியில் வெறும் கையுடனேயே போகின்றான் என்பதைக் காட்ட தனது கடைசி ஊர்வலத்தில் கைகள் இரண்டையும் பிரேதப் பெட்டிக்கு வெளியை வைத்துக் கொண்டு செல்ல வேண்டு மென்று கட்டளையிட்டான். இந்த உலகம் ஒரு விடுதி போன்றது. அநேக பொருட்கள் அங்கு இருக்கும். விடுதியை விட்டுப் போகும் போது நான் சாமான்களை எடுத்துச் செல்வதில்லை. அவை என் சொத்தல்ல என்று தெரியும். எமக்கு முன் யாரோ சொந்தம் கொண்டாடினார்கள். பின் விடுதியாக்கினார்கள். நாமும் சில காலம் இருந்தோம். எமக்குப் பின்பும் பலர் வந்து தங்குவார்கள். நாளை என்ன நடக்குமோ தெரியாது. எமக்கு எது மிகவும் உகந்ததென்று ஆண்டவனே நிர்ணயிக்கட்டும். அவனிடம் சரணடைந்தால் எமக்கு உகந்ததைச் சொல்லுவார் செய்ய உதவுவார்.

சுவாமியின் பக்தை இராஜமாதா பிருந்தாவன வளாகத்திற்கு பெரிய அளவில் நிலத்தைக் கொடுத்தார். அவரது மகன் சுவாமியின் உயர் கல்வி நிறுவனத்தில் MBA பட்டம் பெற்றார். பட்டத்திற்கு பின்பு என்ன செய்ய வேண்டு மென்று எண்ணினார்.

சுவாமியிடம் போய் மேற்படிப்பு படிக்கட்டுமா என்று கேட்டார். சுவாமி ஜெஸ் ஜெஸ் ஜெஸ் (yes, yes, yes) என்று சொன்னார். ஆனால் பாடங்களில் எடுத்த புள்ளி போதாமையால் அதைத் தொடர முடியவில்லை. பின்பு குடும்ப வணிகத்தைச் செய்யலாமா என்று கேட்டார். சுவாமியும் ஆம் ஆம் என்று பதிலளித்தார். இந்திய நிர்வாகத் துறையைச் சேர ஆர்வம் கொண்டு, சேரலாமா என்று கேட்டார். ஆனால் பரீட்சை கடுமையாயிருக்குமென எண்ணி, சுவாமியின் பல்கலைக்கழகத்திலேயே வேலை தரும்படி கேட்டார். ஆம் ஆம் போய்த் துணைவேந்தரிடம் கேள் என்றார். துணைவேந்தரிடம் கேட்டபோது அவர் சுவாமி தனக்கு ஒன்றும் சொல்லவில்லையெனச் சொல்லி அனுப்பினார். சுவாமியிடம் போய் தான் என்ன செய்யலாம் என்று கேட்டார். சுவாமி, அவர் விரும்பியதைச் செய்யலாம் என்றார். சுவாமி நான் நாலு தடவை கேட்டபொழுது எல்லாவற்றிற்கும் ஆம் ஆம் என்று சொன்னீர்களே தனக்கு விளங்கவில்லையென்று கேட்டார்.

நீ சிந்திப்பதை விட்டு சரணாகதியடைந்தால் என்ன செய்ய வேண்டுமென்று சொல்வேன் என்றார். பக்தர்கள் தங்கள் ஆசைகளை நிறைவேற்றும்படி கேட்டார் நான் நிறை வேற்றுகிறேன். நான் ஆத்ம வித்தியா கொடுக்கவே வந்தேன். அதை கேட்கும் வரை நீங்கள் கேட்டதைத்தான் தருவேன் என்றார்.

எனக்கு ஒன்றும் தெரியாது
எனக்கு ஒரு அருகதையுமில்லை
ஆகவே எனக்கு அருள்புரிய வேண்டுமென்று பிரார்த்திக்க வேண்டும்.

NATIONAL SAI YOUTH CONFERENCE
DIVINE LOVE
April 2016 Sri Lanka

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருமுறை பக்தையான ராதை கிருஷ்ண பகவானின் புல்லாங்குழல் மீது பொறாமை கொண்டார். குழலைப் பார்த்து "நானே எல்லா சாதனைகள் செய்கிறேன். பகவானையே நினைத்தபடி இருக்கிறேன், ஆனால் நீயோ அவரது இடுப்பில் இதயத்திற்கு அருகாமையில் இருக்கிறாயே. இதன் இரகசியம் என்ன?" என்று கேட்டார். குழல் "நான் என்னை முதலில் வெறுமையாக்கினேன். என்னுடைய நாதம் என்று ஒன்றுமில்லை. பகவானின் மூச்சு என்னுள்ளே போய் வருவதை நான் தடுப்பதில்லை அவர் இசைக்கும் ஓசையை முழுவதுமாக ஏற்றுக் கொள்கிறேன். தனது உதட்டில் வைக்கும் பொழுது பெருமைப்படுவதில்லை. நிலத்தில் வைக்கும்போது விரக்தியடைவதில்லை. பக்தர்களில் ஆசைகள் நிரம்பி இருந்தால் பகவான் ஒன்றும் கொடுக்கமாட்டார்" என்று கூறியது.

ஒருமுறை ஒரு பக்தன் சுவாமியிடம் தனக்கு சேவை செய்ய சந்தர்ப்பம் தருமாறும் ஒரு கருவியாகப் பாவிக்கு மாறும் கேட்டார். சுவாமி அவரைப் பார்த்து, "சில வருடங்களுக்கு முன்பு இதய சத்திர சிகிச்சை நடந்ததல்லவா? அப்போது சத்திரசிகிச்சைக்காக நூறுக்குமேல் ஆயுதங்கள் கருவிகள் இருந்தன. ஆனால் சந்திரசிகிச்சை நிபுணர் உனது நிலைமைக் கேதுவாக, சிகிச்சைக்குத் தேவையான கருவிகள் 3 அல்லது 4ஐ பாவித்தார். இதேபோல ஆண்டவனும் தேவை, திகதி சந்தர்ப்பத்திற்கு ஏற்ப கருவிகளைத் தெரிந்தெடுக்கிறார். இதே போல பின்னுக்கு இருப்பவர்கள், விடுபட்டவர்கள் கவலை கொள்ளத்தேவையில்லை. சந்தர்ப்பம் கிடைக்கும். ஆனால் உங்களைத் தகுதியாகவும் தயாராகவும் எப்போதும் வைத்திருக்க வேண்டும். தயார் நிலையொன்றில்,

கடவுள் முதல்
ஏனையோர் இரண்டாவது
நான் மூன்றாவது

என்ற முன்னுரிமையில் செயற்படுதலேயாகும். மற்ற மாதிரி ஒழுங்கு இருந்தால் கருவி மங்கிவிட்டதென்பதே அர்த்தம்.

தற்காலத்தில் இளைஞர்கள் MBA, Engineering படிக்கவே விரும்புகிறார்கள். இதில் தீவிர போட்டியும் உள்ளது. கல்வி நிறுவனங்களில் மனித மேம்பாடுகளைப் பற்றிப் போதிப்பதில்லை. சாதாரண கோலாஸ் (Cabbage) பூக்கோவாவாக மாற்றவது தான் கல்வி முறை. இரண்டும் மரக்கறி வகையே. பட்டம் கிடைத்ததும். அதைப் பிச்சைப் பாத்திரமாக ஏற்றி வேலை தேடி, செல்வம் சேர்த்து, முறையாக வாழாமல், நோய்வாய்ப்பட்டு, சேர்த்ததையெல்லாம் வைத்திய சிகிச்சைக்காக செலவழிக்கிறார்கள். இதையா உலகியல் வெற்றி என்று கூறுவது.

நாம் ஏன் பிறந்தோம்? நான் யார்? எங்கிருந்து வந்தோம், எங்கே செல்கிறோம் என்பதில் சிந்தனையைச் செலுத்த வேண்டும். எம்மில் ஓடும் இரத்தம் அன்பினால் நிறைந்திருக்க வேண்டும். அவதாரம் அன்பினால் நிரம்பியே மனித உருவம் எடுக்கின்றது.

மகாபாரதப் போர் முடிவடைந்ததும், பாண்டவர்கள் கிருஷ்ண பகவானுக்கு நன்றியுணர்வு தெரிவித்தார்கள். அப்போது நடந்த சம்பாஷணை

தருமர்: பகவானே போர் முடிந்துவிட்டது. உங்கள் பணியும் முடிந்துவிட்டதா?

கிருஷ்ணர் : அது எனது நோக்கமல்ல

தருமர் : எங்களுக்கு வழிகாட்டி, தேரோட்டியாக இருந்து யாகத்தில் சேவை புரிந்தார்கள். இது முக்கிய நோக்கமாக இருக்கவில்லையா?

போர் வெல்வது பிரதான நோக்க மல்ல. பக்தர்கள் மீது அன்பு செலுத்தவே அவதாரம் எடுத்தேன். பக்தர்கள் என்னிடம் சரணாகதியடையும் போது நான் ஆனந்த மடைகிறேன். குந்திதேவி தனக்குக் கஷ்டங் களையே தருமாறு வேண்டினார். அதுவே சரணாகதி. திரௌபதி துகில் உரியப்படும் பொழுது இருகைகளையும் உயர்த்தி இருதய வாசி, கிருஷ்ணா என்றழைத்தாள். அதுவே சரணாகதி. போரில் பீஷ்மரை நோக்கி தேர்ச் சக்கரத்துடன் சென்றபோது பகவானே வந்து என்னைக் கொல்லுங்கள் என்றார். இதுவே சரணாகதி அர்ஜுனா கர்ணனின் தேர்ச்சில்லு சேற்றில் புதைந்த பொழுது. அவனைக் கொல்லும்படி சொன்னேன். அப்போது கர்ணன் எனது தரிசனத்தை வேண்டி நின்றான். இதுதான் சரணாகதி, அபிமன்யு இறந்ததைக் கேட்டதும், என் தோள்மீது சாய்ந்து கண்ணீர் விட்டாயே. இப்படியான சரணாகதிகளைப் பெறுவதற்கே நான் அவதரித்தேன்.

உத்தவர் ஒரு ஞானியும் கிருஷ்ண பகவானின் நண்பருமாவர். கிருஷ்ண பகவான் சதா கோபியர்களைப் பற்றியே நினைவில் கொண்டார். கோபியர்களும் சதா கிருஷ்ணரைப் பற்றிச் சிந்தித்த வண்ணம், கிருஷ்ணரின் பிரிவால் ஆழ்ந்த துயரத்தில் இருந்தார்கள். உத்தவர் இவர்களுக்கு ஞானம் இல்லாததல பக்தியைப் பற்றிய விளக்கமில்லை என்று கிருஷ்ணரிடம் கூறினார். கிருஷ்ண பகவான், கோபியர்களுக்கு கடிதம் எழுதி, உத்தவரிடம் கொடுத்து, பிருந்தாவனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போய் கோபியர்களுக்கு ஞானம் புகட்டு என்று கூறி அனுப்பினார். பிருந்தா வனத்தில் கோபியர்களில் பக்தியின் மேன்மையைக் கண்டார். காகிதத்தை வாசிக்கவும் முடியவில்லை. தங்களுக்கு மனது என்று ஒன்று இல்லையே, தாங்கள் பிரிவால் வாடுவதாகத் தெரிவித்தார்கள்.

அவர்கள் பின்வருமாறு கிருஷ்ணா
நீ தேனியானால் நாங்கள் தேனாவோம்
நீ மாமானால் நாங்கள் கொடியாவோம்
நீ மலையானால் நாங்கள் அருலியாவோம்
நீ ஆகாயமானால் நாங்கள் விண்மீன்களா வோம்
நீ யமுனா நதியானால் நாங்கள் அலை களாவோம்

உன்னைவிட்டுப் பிரிந்திருக்கமுடியாது எனப் பாடி சகலதிலும் கிருஷ்ணனையே கண்டார்கள்.

கிருஷ்ண பகவானும் பிருந்தா வனத்திற்கு வந்து ராதை எங்கே என்று விசாரித்தார். அவள் ஆற்றங்கரையில் சிறு குடிசையில் தனிமையில் நீர் ஆகாரமின்றி கிருஷ்ண சிந்தனையில் ஆழ்ந்திருப்பதை அறிந்தார். அவர் குடிசையை அடைந்து கதவைத்திறந்து தோளில் தட்டினார். ராதை கண்ணைத்திறந்து முன்னால் உருவத் திலுள்ள கிருஷ்ணரைக் கண்டாள். விஸ்வரூப தரிசனத்தில் இருந்த ராதை இப்போது மண்டருவ தரிசனத்தை அனுபவி த்தாள். இந்நிலையைச் சுவாமி -

பிரிவில் ஒன்றிணைவு
ஒன்றிணைவில் பிரிவு என்று

விவரித்தார். பிரபஞ்ச கிருஷ்ண தத்து வத்தில் மனித உருவக் கிருஷ்ணர் மறைந்து விடுகிறார். அவதாரப் பணி முடிந் ததும், அவதாரம் பிரபஞ்சத்தத்துவத்துடன் ஒன்றிவிடும்.

சுவாமியின் சுவாசம் எங்களூடாகச் செல்ல வேண்டும். இதற்கான ஒரு நிகழ்வு:

ஒருமுறை தரிசனம் நடைபெறும் பொழுது, குழலோசை கேட்டது. சுவாமி மென்மையாக அசைத்து கொண்டு T.M கிரிதர் என்ற மாணவரைப் பார்த்து, எங்கிருந்து ஓசை வருகின்ற தெனக் கேட்டார். மாணவன் மேலே பார்த்து ஒலி பெருக்கிப் பெட்டியிலிருந்து வருகிறதென்றான். சுவாமி இல்லை என்று சொல்லி பனை மரத்திலுள்ள ஒலி வாங்கி மூலம் வருகிறதென்றார். கருவிகளை ஓசையின் உற்பத்தி என நினைக்கக்கூடாது. இது அந்த மாணவனின் நெஞ்சில் ஆழமாய் பதிந்தது.

சில வருடங்களில் பின்பு ஒரு பெரிய கம்பனியில் வேலை பார்த்தான். அப்போது அவர் ஒரு வேலைத்திட்டத்தை இன்னொரு அந்நிய கம்பனி நிர்வாகிகள் முன்பு தெளிவு படுத்த வேண்டியிருந்தது. மிகவும் மனப் பதட்டத்துடன் இருந்தார். முன்னைய நிகழ்வு ஞாபகம் வந்ததும், பதட்டம் நீங்கி, மனத்திடமும் நம்பிக்கையும் ஏற்பட்டது. நான் கருவி தானே. சுவாமி தான் எல்லாவற்றையும் செய்கிறார் என்ற தெளிவு ஏற்பட்டது. அவருடைய விளக்கத் தெளிவு நன்றாக இருந்தது. கம்பனிக்கும் பெரிய வேலை ஒப்பந்தம் கிடைத்தது.

பக்தரும் பாடகியுமான எம்.எஸ்.சுப்புலட்சுமி, தன்னை அர்ப்பணித்தே பாடுவார். கடவுளுக்காகவே பாடுகிறார் என்று சுவாமி அடிக்கடி கூறியுள்ளார். சுவாமி அவரின் பாடலை மிகத் திறமையாக்குகிறார். தன்னலம் பொங்கினால் திறனின் திறமை குன்றிவிடும்.

கிரிக்கட் வீரன் சச்சின் ரெண்டுல்கர் சுவாமியிடம் தான் பலமுறை 90 ஓட்டங்களை எடுத்ததும் வீழ்ந்து விடுகிறேன். இதிலிருந்து தப்ப வழிகாட்டும் படி கேட்டார். சுவாமி கூறியது.

நீ 90ஐ அடைந்ததும் பதட்டப்படுகிறாய் ஒருவிதமான கோபவேகம் எழுகிறது. அடுத்த பந்துகளை மைதானத்துக்கு வெளியே போக அடிக்க எத்தனிக்கிறாய் இதனால் வீழ்கிறாய். பந்து வீச்சாளரில் கவனம் செலுத்தாதே. உனது ஓட்ட எண்ணிக்கையிலும், குழுவின் ஓட்ட எண்ணிக்கையிலும் கவனம் செலுத்தாதே. பந்திலே முழுக் கவனத்தையும் வைத்து அதற்கேற்றவாறு அடி. கடவுளுக்கு அர்ப்பணி கடவுள் சரியானதை அடிக்க உதவுவார்.

எங்களுடைய இதயம் அன்பினால் நிரப்பப்பட வேண்டும். முகத்தில் புன்சிரிப்பு நடமாடவேண்டும்.

சுவாமியுடன் எப்போதுமே ஆனந்தம். சுவாமி எங்களின் நிலைக்கு இறங்கி வந்து எங்களை மகிழ்ச்சிப்படுத்து வார். இதைத் தலைவர்கள் பின்பற்றவேண்டும். எங்களின் கூற்றையே சுவாமி திருத்திச் சொல்லி பெரிய பாடத்தைப் புகட்டுவார். ஒருமுறை என்னைப் பார்த்து பிராமணரா என்று கேட்டார். நான் இல்லை சுவாமி, உங்களைப்போல சத்திரியன் எனச் சொன்னேன். சுவாமி சத்திரியன் என்பது சரி, ஆனால் நான் உன்னைப்போல அல்ல என்று பகிடியுடன் பாடமும் படிப்பித்தார்.

ஒரு விளையாட்டு விழாவின் போது, பிரசாதங்களைப் பதித்து, ஆசீர்வாதம் பெற்றபின் அடியார்களுக்கு வழங்கு வோம். ஒரு மின்ற் பெட்டி விசித்திரமாக இருந்தது. அதை திறந்து காட்டும்படி சொன்னார். ஒரு பொத்தானை அமத்தியதும் அது திறந்தது. சுவாமி தானும் செய்ய வேண்டு

NATIONAL SAI YOUTH CONFERENCE
DIVINE LOVE
April 2016 Sri Lanka



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மென்று தெண்டித்தார். திறபடவில்லை. என்னைப் பார்த்தார். நான் சுவாமியின் கைவிரலைப் பிடித்து சரியான பொத்தானை அமர்த்தினேன். பெட்டி திறந்தது. அப்போது சுவாமி சிறு பிள்ளைபோல் பெருமிதத்துடன் சிரித்தார். பிள்ளைகளின் மத்தியில் சிறுவனாகவே நடிப்பார். பெண்களின் மத்தியில் பெண் போலவே தென்படுவார். ஆண்கள் மத்தியில் ஆணாகத் தென்படுவார். தனிமையில் இருக்கும் போதுதான் தெய்வமாக இருப்பேன் என்று கூறியுள்ளார்.

ஒரு முறை மயூர பாண்டிய என்ற மாணவனுடனும் ஆங்கிலத்தில் பாண்டித்தியமான கலாநிதி வனிபண்டா (Fanibunda) என்பவருடன் காரில் போனார். அப்போது சுவாமி ஆங்கிலத்தில் மிகவும் திறமையுடன் உரையாடினார். எல்லாம் முடிந்தபின்பு மாணவன் சுவாமியிடம், எவ்வளவோ பாண்டித்தியத்துடன் கதைக்க ஒலுமாகிலும், ஏனைய வேளைகளில் அப்பா என் கதைப்பதில்லை என்று கேட்டார். சுவாமி இதுதான் மாயா சக்தி என்று சொன்னார். மாயா சக்தி இல்லாவிடில் நீங்கள் என்னை விசித்திரப் பொருளாகக் கண்ணாடியால் பூட்டி காட்சிக்கு வைத்து விடுவீர்கள் என்றார்.

ஒருமுறை பாடசாலைப் பையன்களுக்கு காற்சட்டை சேட்டும், கல்லூரி மாணவர்களுக்கு சவாரி உடுப்பும் கொடுத்தார். கடைசியாக எஞ்சிய 5 பேருக்கும் தானே கொடுத்தார் பாடசாலை மாணவன் சவாரி (Safari) உடுப்புப் போட்டிருந்ததைக் கண்டு காற்சட்டை திருப்பித் தரும்படியும் தான் சவாரிசூட் தருவதாகவும் சொன்னார். மாணவன், சுவாமி தங்களின் தெய்வீகக் கைகளால் தந்தது, அதுவே போதும் என்றான். சுவாமி சவாரி சூட்டையும் தெய்வீகக் கரங்களால் தான் தருவேன். தெய்வீகக் கால்களால் தரமாட்டேனென்று சொன்னார். பகவான் எங்களுடன் எங்களைப் போலவே ஆனந்தமாகச் செயற்படுவார்.

இன்னொரு நிகழ்வு:

ஒருநாள் முதலாம் வகுப்பில் ஆங்கிலப்பாடம் நடக்கும் போது சொன்னார். அங்கே ஆசிரியை கரும்பலகையில் "The cat met the vat in the garden" என்ற வசனத்தைப் பற்றி விளங்கப்படுத்திக் கொண்டிருந்தார். ஆசிரியையிடம் அந்த வசனம் பிழையானதே. பூனை எலியைச் சந்திக்கப் போனாலும், எலி சந்திக்கமாட்டாதே. அது நாயிடம் அல்லவா போகச் சொல்லியிருக்கும். இப்படியாக எந்நேரமும் எங்களுடன் அன்யோன்யமாகப் பழகுவார். எங்களுள் இருக்கும் இறைவன் அல்லவா!

பகவானுக்கு மிக அருகாமையிலிருந்து தொண்டாற்றியவர் சத்தியஜித் என்பவர் அவரைச் சுவாமி மத்திய அறக்கட்டளை கந்தோரில்வேலை செய்யும்படியும் அங்கே ஒருவருடனும் கதைக்கவேண்டாமென்றும் சொல்லி அனுப்பினார். வேலை முடிந்து மந்திருக்குப் போனதும், சுவாமி நீ அதிகம் கதைக்கிறாய் என்று சொல்லி அவரைப் புறக்கணித்தார். அடுத்த நாளும் அப்படியேயாயிற்று. அடுத்த நாளும் வேலை முடிந்து போனதும் சுவாமி பத்திரிகையை வாசித்துக் கொண்டிருந்தார். வழமைபோலச் சுவாமியின் பாதங்களை தடவத் தொடங்கினர். நீ இன்னும் அதிகமாகக் கதைக்கிறாய், உன்னை வெளியில் அனுப்பிவிடுவேன் என்று கடுமையாகச் சொன்னார். சத்தியஜித் அழுது அழுது பாத சேவையைத் தொடர்ந்தார். பின்பு சுவாமியின் அறையில் நிலத்தில் அழுத வண்ணம் படுத்தார். சுவாமியின் அறையில் ஒரு மின் வெளிச்சம் மங்கலாக எரிவது வழக்கம். அது எதிர்ச்சுவரில் சிறிய ஒளி வட்டத்தை ஏற்படுத்தியது. சுவாமி "நீ நன்றாக அழுது விட்டாய்" என்று சொல்லித் தனது கைவிரல்களை அந்த மின் ஒளிக்கு முன்னால் வைத்து பலவிதமான நிழல் உருவங்களை எதிர்ச்சுவரில் உண்டாக்கினார். அதைப் பார்த்து இருவரும் கெக்கட்டம் போட்டுச் சிரித்தனர். சுவாமி "நீ பயப்படவேண்டாம். கவலைப்பட வேண்டாம். நான் உன் மீது ஆனந்தமாக வுள்ளேன்" என்று கூறி சமாதானப் படுத்தினர். இது அவருக்குக் கொடுத்த கடும் பரீட்சை. சத்தியஜித் சித்தியடைந்தார்.

குழுவின் முகாமையாளர் தகப்பனைப் போல் கண்டிப்பாகவும், தாயைப்போல் உருக்கமான அன்புள்ளவருமாக இருக்கவேண்டும். எல்லா வளங்களிலும் பார்க்க மனித வளமே முக்கியமானது. நாம் எதையும் நேர்மறையான நோக்குடனே சிந்திக்க வேண்டும். சுவாமியோடு இருக்கும் போது ஏற்படுகின்ற ஆனந்தமே எங்களில் நன்றியுணர்வைத் தூண்டுகிறது. முகாமையாளரோ, பெற்றோரோ பிள்ளைகளை மகிழ்ச்சியுடன் இருக்கப் பழக்க வேண்டும்.

தலைவன் தன்னோடு சேர்ந்து சேவை செய்பவர்களுடன் ஒன்று சேர வேண்டும். நீர் மரத்தின் வேர் மூலம் எவ்வாறு இலைகளுக்கும் காய் கனிகளுக்கும் செல்கிறதோ அப்படி அன்பு எல்லோருடாகச் செல்ல வேண்டும்.

கலாநிதிப் பட்டதாரிகள் சுவாமியைச் சந்திக்கப் போகும் போது சிறிதளவு உண் பண்டம் கொண்டு செல்வோம். சுவாமி சிலவேளைகளில் சிறிதளவு உண்பார். ஒரு முறை உப்புத் தோய்ந்த






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடலையை சிறிய பிளாஸ்ரிக் குவளையில் மாணவன் கொண்டு வந்தார். உள்ளே மூடியைத் திறந்ததும் அது விசிறியின் காற்றில் மேலெழுந்து சுவாமியின் கதிரையின் கீழேபோய் விழுந்தது. நாம் எல்லோரும் சுவாமி என்ன நினைப்பாரோ என்று சஞ்சலப்பட்டோம். அம்மூடி பின்பு சுழன்று கதிரே மேலே பறந்தது. சுவாமியும் சிரித்தபடியே ஹெலிகொப்டர் என்று சொன்னார். அது பின்பு மடியிலே இறங்கி யது. சுவாமி பாதுகாப்பாக இறங்கி விட்டதென பகிடியாகச் சொன்னார். சுவாமி கோபப்படக்கூடிய சந்தர்ப்பங்களிலும் எங்களைப் பகிடிமூலம் சிரிக்க வைத்து விடுவார்.

எனது தகப்பனார் யோகா வகுப்புகள் எடுப்பவர். ஒருநாள் ஸ்ரீ சாயி ரவி சங்கர் அவர்கள் தனக்கு வகுப்பு எடுக்க 10 நிமிடம் தருமாறு கேட்டார். அவர் ஒவ்வொருவரின் வாயில் ஒரு திராட்சைப் பழத்தைப் போட்டு, சப்பாமல் உருட்டி உருட்டி உருட்டி இரசிக்கச் சொன்னார். அனுபவத்தை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளச் சொன்னார். கதைக்க முடியாத தால் ஒருவரை ஒருவர் ஆழமாகப் பார்த்தார் கள். சில நிமிடத்திற்குப் பின்பு எல்லோரும் உரக்கச் சிரித்தார்கள். எல்லோரும் சப்பிச் சாப்பிட்டார்கள். என்ன அனுபவம் என்று கேட்க எல்லோரும் ஆனந்தம் என்று சொன்னார்கள். அப் பெரியவர் இந்தச் சின்னத் திராட்சைப்பழம் இல்லாத ஆனந்தம் தருமாகில் இயற்கையில் எத்தனையோ பெருமளவில் ஆனந்தம் தரும் நிகழ்வுகளை நாம் அவதானிப்ப தில்லை. நாம் இயற்கை தரும் ஆனந் தத்தை அனுபவிக்காமல், மிகவும் வேகமாகப் பயணிக்கின்றோம்.

நாம் எதைச் செய்தாலும் அன்பினால் நிரப்பினால், அது ஆனந்தத்தைத் தரும்.

ஒரு முறை சுவாமியிடம் ஆசீர்வாதம் பெறுவதற்காக 11 விளையாட்டு கப்ரன்கள் சென்றோம். சுவாமி என்ன கூட்டம் என்று கேட்க, நாங்கள் விளையாட்டுக்கு முன்பு ஆசீர்வாதமும் பாத நமஸ்காரமும் பெற வந்தோம் என்று கூறி பேனும். சுவாமி எடுங்கள் என்று சொன்னதும், சிலர் முண்டியடிக்கத் தொடங்கினார்கள். நான் கெதியாக எடுத்துவிட்டு விலகி நின்றேன். என்னை உற்று நோக்கி, பாதநமஸ்காரம் இதய உழைப்பு இல்லாமல் எடுப்பதில் பிரயோசனமில்லை. நாங்கள் நமஸ்காரம் செய்யும் பொழுதோ, தொட்டு விளங்கும் பொழுதோ உணர்வுடன் செய்யவேண்டும்.

சுவாமியுடன் கோடைக்கானல் போனால் எங்கே சுவாமி எங்களுடன் சேர்ந்து படங்கள் எடுப்பார். எங்களுடன் நெருக்கமாகப் பழகுவார். ஒருமுறை சுவாமி ஒரு கிழமையாகப் படங்கள் எடுக்கவிடவில்லை. ஈஸ்வரம்மா தினத்தன்று எம்முடன் பல படங்கள் எடுத்தார். ஒவ்வொரு செயலையும் அன்பு அர்ப்பணிப்புடன் செய்கிறோமா என்று அவதானித்துக் கொள்வார். இதுதான் ஆன்மீக மனப்பாங்கு.

இளைஞர்களுக்கு எதிர்மறை உணர்வுகள் எழுவது அதிகம். அவற்றைத் தூய்மைப்படுத்த பஜனை, நாமஸ்மரணை, தியானம் ஆகிய சாதனைகள் உதவும்.

ஆன்மீக நோக்குடன் அனைத்தையும் செய்தால் உலகவியலில் வெற்றி கிடைக்கும்.

நீங்கள் நம்பத் தகுந்தவர்களாகவும்,
பொறுப்புணர்வுகள் உள்ளவர்களாகவும்
அர்ப்பணிப்புடன், நேரக்கட்பாடுடையவர்களாகவும்
பூரணமாக செயல்களைச் செய்ய வேண்டும்.
வெற்றி எமதே.

ஜெய்சாயிராம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் டாக்டர்.தீபக் ஆனந் அவர்களிடம் கேட்கப்பட்ட கேள்விகளும் அவர் வழங்கிய பதில்களும்



கேள்வி:
நான் சுவாமியை வணங்க விரும்புகிறேன். ஆனால் எனக்கே பல வேலைகள் உண்டு. இதனால் எனக்குக் கோபமும் கவலையும் ஏற்படுகின்றன. இதற்குப் புத்தி சொல்லுங்கள்?

பதில்:
ஒன்று நேரமில்லையென்ற பிரச்சினை. மற்றையது கோபமும் விரக்தியும் ஏற்படுதல். நாங்கள் கடமையில், வேலையில் ஈடுபடத்தான் வேண்டும். கடமையைக் கடவுளாக சிந்தித்துச் செயற்படவும். வேலையைப் பிரார்த்தனையாக மாற்றவும் வேண்டும். இதற்குரிய மனப்பாங்கை வளர்க்க வேண்டும்.
உதாரணக் கதை:
பாதையோரத்தில் மூவர் கல்லுடைத்துக் கொண்டிருந்தார்கள். ஒவ்வொருவரையும் ஏன் உடைக்கிறீர்களெனக் கேட்டார்.

முதலாவது நபர்: நான் பிழைப்பிற்காக உடைக்கிறேன். எனக்கு இதில் விருப்பமில்லை என்று உதாசீனமாகச் சொன்னார்.

இரண்டாவது நபர்: உற்சாகமாக உடைத்துக் கொண்டிருந்தார். நான் ஒரு கோயில் கட்டுவதற்காக உடைக்கிறேன் என்று அமைதியாகப் பதில் சொன்னார்.

மூன்றாவது நபர்: மிகவும் ஆனந்தத்தில் கண்ணீர் மல்க உடைத்துக் கொண்டிருந்தார். இந்த வேலையைப் பூரணமாகச் செய்ய வேண்டும். என்னைக் குழப்ப வேண்டாம் இந்தக் கற்கள் எனது இதயத்தில் வாழும் இறைவனுக்க ஆலயம் கட்ட உபயோகப்படப் போகிறது. வேலை மிகவும் விருப்புடன் பிரார்த்தனையாகச் செய்யப்பட்டது.

நான் செய்கிறேன் என்று நினையாது, ஆண்டவனே எல்லாம் செய்கிறார். நான் அவரின் கருவியே என்ற மனப்பாங்கு வேண்டும். சுவாமி சகலதும் தன் சங்கல்ப்பத்தினாலே நடக்கிறது என்று மாணவர்களுக்குச் சொன்னார். மாணவன் ஒருவன் தனது கை உயர்த்தவும் கடவுளின் சங்கல்ப்பம் தேவையா என்று கையை உயர்த்திக் காட்டினான். சுவாமி சிரித்து விட்டுத் திரும்பவும் கையை உயர்த்துமாறு கூறினார் அவன் எவ்வளவோ தெண்டித்தும் தூக்க முடியவில்லை. சுவாமி சிரித்த படி மீண்டும் தூக்கச் சொன்னார். உடனே கையைத் தூக்க முடிந்தது. இருதயம் துடிப்பதும், நீ சுவாசிப்பதும், கண் இமைப்பதும் எல்லாமே என் சங்கல்ப்பம் என்று சுவாமி சொன்னார். எல்லாம் கடவுளின் செயல் என்று நினைத்தால் அமைதி ஏற்படும். அர்ஜுனனுக்குப் போர்க்களத்தில் செய்ய முடிந்தால் ஏன் நமக்குச் செய்ய முடியாது? நான் செய்பவன் அல்ல. செய்யப்படுபவனே என்று விளங்க வேண்டும்.

கேள்வி:
எமது ஆன்மீக வளர்ச்சியை எவ்வாறு மதிப்பிடலாம்?

பதில்:
பக்தை சுவாமியிடம் கடவுள் அனுபூதி கிடைத்துவிட்டதென எப்படி அறியலாம்? ஞான நிலை ஏற்பட்டு விட்டால் கேள்விகளே எழாது. கடவுள் எவ்வளவு தூரத்தில் இருக்கிறார். உனக்கும் உனக்கும் இடையேயுள்ள தூரம்தான் என்று சொன்னார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதன் செல்வம், அதிகாரம் , பதவி அந்தஸ்து ஆகியவற்றையே மையமாக வைத்து வாழ்கிறான். நாம் எல்லோரும் அதி உச்சத்தை அடைய வேண்டும் என்று விரும்புகின்றோம். மற்றையவர்கள் என்னைப் பற்றி என்ன நினைக்கிறார்கள் என்று சிந்திக்கிறான். இதெல்லாம் தேகாபி மானத்தின் விளைவேயாகும். ஆத்மா பிமானமே சிறந்தது. இதுவே சரியான மனப் பாங்குமாகும். சுவாமி எங்களிலுள்ள குறைகளைப் பாராது ஆத்மாவையே பார்ப்பார்.

ஒரு நேர் காணலின் முடிவில். நான் சுவாமியிடம் "கெட்ட எண்ணங்கள் எழுகின்றதே என்னை மன்னிக்கவும்" என்று கேட்டேன். இதற்கு சுவாமி "அவை யெல்லாம் நகரும் மேகங்களே, எனக்கு அன்புடன் அர்ப்பணிக்கும் எண்ணங்களே என்னை வந்தடையும். உதாரணமாக அழுக்கு நிரம்பிய குழாயில் நல்ல தண்ணீரை விட்டால், முதலில் அழுக்குத் தானே வெளிவரும். சுத்திகரிப்பின் விளைவே. என்மீது கவனத்தை வை. கெட்ட எண்ணங்கள் கலைந்து போகட்டும். சுத்தமான நீர் வெளியே வரும்" என்று சொன்னார்.

கேள்வி:
எமது இதயம் தூய்மையடையும் போது தூய்மை அற்றவர்களைப் பார்க்கும் போது கோபம் வருகிறதே. இதை எப்படிக் கையாள வேண்டும்?
பதில்:
தூய்மையின்மை எங்கும் இருக்கும். மற்றவர்களின் மீது தீர்ப்பு வழங்குவது ஒரு முறிக்கும் செயலாகும். இப்படி தலையை யும் இதயத்தையும் பிரிக்க எத்தனிக்கும் செயலே மற்றவர்களின் மீது தீர்ப்பு அபிப் பிராயம் கொள்வது. இதைச் செய்ய வேண் டாம். மலை உச்சியை அடைவதற்கு 4

NATIONAL SAI YOUTH CONFERENCE
DIVINE LOVE
April 2016 Sri Lanka



பாதைகள் இருக்கலாம். ஒருவர் போகும் வழி குறுகியதாக இருக்கலாம். மற்றவரின் வழி நீண்டு வளைந்து இருக்கலாம். இதனால் ஒன்றைவிட ஒன்று மேன்மையானதல்ல. நாங்கள் எங்கே போகவேண்டுமென்பதில் நோக்காக இருக்க வேண்டும். கீழே இருப்பதையே நோக்கினால் நாமும் வழுக்கி விழுந்து விடுவோம். எல்லோருக்கும் கடவுள்தான் வழிகாட்டுகிறார். எப்போதும் மற்றவரை மதிப்பீடு செய்வதிலும் பார்க்க அவருக்கு உதவி செய்வதே மேன்மையானது.

புத்த பெருமான் முன் ஒரு பிறவியில் நாயாக இருந்தார். சுவாமியின் நண்பர்களான ரமேஸ், சுரேஸ் நாயாகப் பிறந்து சுவாமியின் அருகில் இருந்தார்கள். ஒரு முறை சுவாமி ஒரு விடுதியில் இருக்கும் பொழுது "வருகிறார்கள் வருகிறார்கள் சப்பாத்தி கொண்டு வாருங்கள்" என்று சத்தமிட்டார். அருகிலிருந்த காட்டிலிருந்து 7 பயங்கரமான நாய்கள் ஓடி வந்தன. அவை சுவாமி கொடுத்த சப்பாத்தியை உண்ட பின்பு போய் விட்டன. இதனின் விளக்கத்தைக் கேட்ட பொழுது அந்த 7 உம் சப்த ரிஷிகள். எனது தரிசனத்திற்காக வந்தார்கள் என்று கூறினார்

நாங்கள் முழுமையாகத் தூய்மையடைந்தால், மற்றையவரை மதிப்பிடலாம்.

கேள்வி:
மனதைக் கட்டுப்படுத்துவது எப்படி?
பதில்:
கடவுள் தந்த சூத்திரம் ஒவ்வொரு நாளும் கடவுள் மீது மேலும் மேலும் அன்பு வை இதனால் உலகத்தின் மேலுள்ள ஆசை குறைந்து விடும். இதயத்தில் அமைதியும் ஆனந்தமும்கூட மனமும் இதயத்தைப் பின் தொடரும்.

கேள்வி:
உள்ளிருந்து எழும் குரல் தெய்வத்தினுடையதா? எனது அடிமனத்தினுடையதா? அல்லது ஆவிகளின் குரலா?

பதில்:
மௌனத்தின் ஆழத்தில் தான் தெய்வக் குரல் கேட்கும். எமது சிந்தனைகள் மூலம் எவ்வளவோ சக்தி விரயமாகிறது. ஆழமான மௌன நிலைக்கும் போவதற்குத்தான், பஜனை, நாமஸ்மரணை, தியானம் ஆகிய சாதனைகள் செய்ய வேண்டும். காலை பிரம்ம முகூர்த்த வேளையில் பூஜை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறையில் மௌன நிலையில் சுவாமியுடன் கதைக்கலாம். மனச்சாட்சியின் குரல் தெளிவாகவும் மேன்மையானதாகவும் இருக்கும்.

கேள்வி:
ஆன்மீகப் பாதையில் எவ்வளவோ முயற்சித்தும் முன்னேற்றத் தைக் காண முடியவில்லை உதவுவீர்களா?

பதில்:
பல பிறப்புக்களில் சேர்த்த வாசனைகளை ஒரு நாளில் அழிக்க முடியாது. சீரடி பகவான் சொன்ன சிரத்தை சபூரி ஆகிய இரண்டையும் கடைப்பிடிக்க வேண்டும். எங்களுடைய முன்னேற்றத்தை எம்மால் புரிந்து கொள்ள முடியாது. உதாரணமாக விமானம் மேலே போவது தெரியும். உயரத்தை அடைந்ததும் நிலையாக நிற்பது போலத் தெரியும். பின்பு தரையிறங்கியதும் நிலையாக நிற்கின்றது தெரிகிறது. இதே போல நிலையாக நிற்பது போலத் தெரிந்தாலும் உயரத்தில் பறந்து கொண்டிருப்போம். அசையாத நம்பிக்கையும் அளவிலா அன்பும் பகவானிடத்தில் கொண்டால் வெற்றி நிச்சயம். சுவாமியை எங்கும் பார்க்கத் தெரிய வேண்டும்.

கேள்வி:
ஆறு உள் எதிரிகளை எவ்வாறு வெல்லலாம்?

பதில்:
எல்லா உள்ளெதிரிகளுக்கும் அத்திவாரம் ஆசையேயாகும். புத்த பெருமானும் ஆசைதான் இவ்வுலகிலுள்ள துக்கம் அனைத்திற்கும் காரணமெனக் கூறியுள்ளார். ஆசை நிறை வேற்றப்பட்டால் மகிழ்ச்சி, அல்லாவிடில் கோபம் எழும். ஆசை அளவுக்கு மீறினால் மதமாகும். மற்றவரின் பொருளுக்கு ஆசைப்பட்டால் லோபம் ஆகும். பொருட்களைப் பாவிக்காது தன் வசம் வைத்திருந்தால் மோகம் ஆகிறது. மற்றவர்களிட மிருக்கும் செல்வம், திறன் ஆகியவற்றில் ஆசை கொண்டால் பொறாமையாக மாறும். ஆண்டவன் மீது மோகம் கூடக் கூட உலகத்தில் இருக்கும் மோகம் குறைந்து விடும்.

கேள்வி:
குடும்ப அங்கத்தவர்களை எவ்வாறு சுவாமியின் பாதைக்கு கொண்டு வரலாம்?

பதில்:
அவர்களை வற்புறுத்த வேண்டாம். எங்களின் நடத்தை மூலம் அவர்கள் பகவான் மீது ஆர்வம் காட்டுவார்கள். பகவானின் போதனையைப் பின்பற்றி, அன்பு காட்டி எந்நேரமும் உதவி செய்தால், தாமாகவே மாறுவார்கள். எங்களில் குறைபாடுகள் இருந்தால், நாம் செய்வதைக் கேட்க மாட்டார்கள். நாங்கள் முன்மாதிரியாக நடக்க வேண்டும். ஆனால் அவை எப்படி யென்றாலும் நாம் சுவாமியைக் கைவிட முடியாது.

எனது அம்மாவை பஜனைக்குக் கூட்டிக் கொண்டு போய் சில காலத்திற்கு பின்பே சுவாமியைப் பிடித்தேன்.

கேள்வி:
பிரேம சாயியைப் பற்றி தகவல்கள் வருகின்றன. நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

பதில்:
பிரேம சாய் மண்டிய மாவட்டத்தில் கன்னட மாநிலத்தில் பிறப்பார் என்று சுவாமி சொல்லியுள்ளார். சத்திய சாயியே சீரடி சாயியும், பிரேம சாயியுமாவார். எனக்கு பிரேம சாயியைப் பற்றி அறிவதில் ஆர்வமில்லை. கொழும்பிலே சமுத் திரத்தை ருசித்த பின் மட்டக்களப்பிலும் ருசி பார்க்க வேண்டுமா? நாம் சத்திய சாயி பகவானின் போதனைகளைப் பின்பற்று வோம். இதயபூர்வமாகப் பின்பற்றினால் பிரேமசாயியையும் அடையலாம். எல்லாம் அன்பின் அவதாரங்களேயாகும்.

கேள்வி:
பாலவிகாஸ் நிகழ்வும், பாடசாலை நிகழ்வும் ஒரே நேரத்தில் ஏற்பாடாகி யிருந்தால் எதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும்?

பதில்:
உதாரணமாக பாடசாலை பரீட்சை அடுத்த நாள் என்றால் அதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும். சந்தர்ப்பம் தேவை யைப் பொறுத்தது. பிள்ளையும் பெற்றோ ரும் ஆசிரியரும் சேர்ந்து முடிவெடுக்க லாம்.

கேள்வி:
எமது சத்திய சாயி பாடசாலை மாணவர் களுக்கு சுவாமியின் கல்வி நிறுவனத்தில் அனுமதி கிடைக்குமா?

பதில்:
டிசெம்பர் மாத சனாதன சாரதியில் விண்ணப்பம் கோரப்படும். விண்ணப் பித்துப் பார்க்கலாம். நான் எனது வாழ்த்துக் களைத் தவிர வேறொன்றும் செய்ய முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்வி:
தியானத்தைப் பற்றிச் சொல்லவும்?

பதில்:
ஜோதி தியானம் மிகவும் உகந்தது. முதலில் உருவகத்தில் மனதைக் குவிக்க வேண்டும். பின்பு கண்களை மூடி புருவ மத்தியில் குவிக்க வேண்டும். உருவம் ஜோதியாக மாறிப் பின் ஜோதியில் உருவம் தெரியும். உருவம் உயிர்க்கும் அப்போது அத்துடன் உரையாடலாம். மனக்குவிப்பு, ஆழ்ந்த சிந்தனை, தியானம் என்ற மூன்று நிலைகள் உள்ளன. சுவாமியின் உருவத்தை எல்லோரிலும், எல்லா வற்றிலும் காண்பதே உயர்ந்த நிலை யாகும்.

கேள்வி:
சாயி நிலையத்தில் இருக்கும் பொழுது சுவாமியின் போதனையைப் பின்பற்று கிறோம். வெளியே போனதும் கைவிட்டு விடுகிறோம். எப்படி இதைத் தவிர்ப்பது?

பதில்:
சுவாமி எம்முடன் எப்போதுமே இருக்கிறார் என்பதை மனதில் பதிக்க வேண்டும். அவர் எனது எண்ணங்கள் சொல், செயல் பற்றி என்ன நினைப்பாரென சில விநாடிகள் சிந்தனை செய்ய வேண்டும். நாம் என்ன வேலையைச் செய்தாலும் சுவாமிக்கே செய்கிறோம் என்ற மனப்பாங்குடன் செய்ய வேண்டும். சுவாமி எப்போதும் சாட்சியாக எம்மைக் கவனித்துக் கொள்கிறார்.

கேள்வி:
சுவாமியின் நிறுவனத்தில் உயர் பதவி வகிப்பவர்கள் சொல்வதை நாங்கள் கேட்காது போனால் பழிவாங்குகிறார்கள். நாம் என்ன செய்யலாம்?

பதில்:
வேலை நிறுவனங்களில் பலருக்கு சுவாமியென்றால் பிடிக்காது. எனது கந்தோர் மேசையில் சுவாமியின் படம் வைத்துள்ளேன். எனது உயர் அதிகாரி என்னைப் பார்த்து, இவரிடம் கூடாத வேலைகள் கொடுக்கப்படாது அவர் மகாத்மா என்று சொல்லிப் பகிடி பண்ணுவார். பின்னேரங்களில் கிளப்பிற்குப் போவார்கள். என்னையும் வரும்படி பலமுறை கேட்டார். நான் வீட்டு பஜனைக்குப் போகவேண்டுமென்று சொல்லி மறுப்பேன். பின்பு நான் அவரை முதலில் பஜனைக்கு வருமாறு அழைத்தேன். அவர் மறுத்தார். நானும் கிளப்பிற்குப் போக மறுத்தேன். நாம் எதையும் பிழையாகச் செய்ய மாட்டோம் என்று திட்டவட்டமாகச் சொன்னால் அவர்கள் எம்மை வற்புறுத்த மாட்டார்கள். நான் வீபூதிப் பொட்டும் அணிந்து கொள்வேன். காலப்போக்கில் எனக்கும் பொறுப்பும், பதவி உயர்வும் தந்தார்கள். சுவாமியைக் கெட்டியாகப் பிடித்தால் சுவாமி பரிசைத் தருவார்.

கேள்வி:
தன்னம்பிக்கை என்றால் என்ன?

பதில்:
முதலில் உன்னில் நம்பிக்கை வை
கடவுளில் நம்பிக்கை வை
நாலு படிகள் உள்ளன. சுயநம்பிக்கை, சுயதிருப்தி, சுயதியாகம், சுயஉணர்வு ஆகியவையேயாகும். விதை தன்னைத் தியாகம் செய்தால் தான் பெரிய மரமாக வளர முடியும். அதே போல் நாமும் விலங்கு நிலையிலிருந்து மனித நிலைக்கு அடைந்து தெய்வீக நிலையை அடைய வேண்டும்.

கேள்வி:
ஏன் சுவாமி பக்தர்களுக்கு துன்பங்களைக் கொடுக்கிறார்?

பதில்:
துன்பங்கள் என்று நாம் நினைப்பவை எல்லாம் அவரின் ஆசீர்வாதமேயாகும். நாம் பிறப்பு எடுத்து எம்மைப் பூரண மாக்குவதற்கேயாகும். உதாரணமாக எனது முக்கிய பிரச்சினை கோபம் என்றால், இப்பிறப்பில் கோபம் ஊட்டக்கூடிய மனைவி கிடைப்பாள், அவளின் உதவியுடன் கோபத்தை விடக் கற்றுக் கொள்வேன். சிலவேளை மிகவும் ஊனத்துடன் பிறப்பெடுத்து 2 - 3 பிறவிகளின் கர்மத்தை விலக்குவார்கள். நான் ஒரு ஊனமுற்ற மூளை வளர்ச்சி இல்லாத பிள்ளைக்குச் சேவை செய்தேன். அப்பிள்ளை தான் சுவாமியுடன் கதைப்பதாகச் சொன்னான். சுவாமி தன் இதயத்தில் இருப்பதாகவும் சொன்னான்.

நானும் அம்மாவும் உங்களிடமிருந்து நிறைய அன்பைப் பெற்றுள்ளோம். நீங்கள் எல்லோரும் இப் பிறப் பிலேயே ஆண்டவனுடன் சேரவேண்டுமென்று பிரார்த்திக் கிறேன்.

ஜெய் சாயிராம்.





Digitized by Noolaham Foundation.

# டாக்டர்.தீபக் ஆனந் அவர்கள் மானிப்பாய் சத்திய சாயி பாடசாலையில் ஆற்றிய உரை

எங்களின் அன்பிற்குரிய பகவானின் பொற்கமலப் பாதங்களை வணங்குகிறேன். இந்த சாயி மாணவர்களுக்கு உரையாற்றக் கிடைத்த சந்தர்ப்பத்திற்காக அனைவருக்கும் நன்றி கூறுகின்றேன்.

ஒருமுறை கணவன் மனைவிக்கிடையில் ஒரு விவாதம் நடைபெற்றது. மனைவி கூறினார் தனது பிள்ளை வைத்தியராக வருவான் என்று. கணவன் கூறினார் இல்லை எமது பிள்ளை பொறியியலாளராக வருவார் என்று. இச் சந்தர்ப்பத்தில் அவருடைய நண்பர் அங்கே வந்தார். இவர்களின் விவாதத்தை அவதானித்து விட்டு எங்கே உங்கள் பிள்ளை எனக் கேட்டார். அப்போது அவர்கள் பிள்ளை இன்னும் பிறக்கவில்லை என்று கூறினார்கள். இவ்வாறு தான் பெற்றோரின் எதிர்பார்ப்புக்கள் உள்ளன.

எல்லாப் பிள்ளைகளும் பலவிதமான ஆற்றல்களைக் கொண்டு பிறக்கின்றனர். ஆனால் அவர்களின் ஆற்றல் அவர்களுக்கு தெரியவில்லை. இதற்கு ஒரு சம்பவம் சுவாமி புட்டபர்த்தியில் இருந்தால் போல் என்னை உரையாற்ற அழைப்பார். ஆனால் உரையாற்றும் திறமை எனக்குத் தெரிவதில்லை. ஆனால் சுவாமிக்குத் தெரியும் அதேபோல் பெற்றோர் இவைனைப் போல் இருந்து பிள்ளையின் ஆற்றலைத் தெரிய வேண்டும்.

1. பௌதிக ஆற்றல்

பௌதிக ஆற்றல் வளர்ப்பதற்கு கட்டுப்பாடு வேண்டும். சரியான உணவு வேண்டும். வாழ்க்கை நடாத்தும் முறை அவசியம். ஒன்று தொடக்கம் ஐந்து வயது வரை நிபந்தனையற்ற அன்பு தேவை. 6-15 வரை கட்டுப்பாடு வேண்டும். மனித விழுமியங்களை அவர்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும். பிள்ளைகளை வழிபாட்டுத் தலங்களுக்கும் சமய உரையாற்றும் இடங்களுக்கும் அழைத்துச் செல்ல வேண்டும். வேதம் காயத்ரீ ஓதும் இடங்களிற்கு அழைத்துச் செல்ல வேண்டும். இது பிள்ளை விளங்காவிட்டாலும் பிள்ளையின் ஆத்மாவிற்குத் தெரியும். கடவுளை அடையும் வழி மாதா, பிதா, குரு , தெய்வம் ஆகியோரை மதித்தல் போற்றுதல் ஆகும். இதனால் மாணவர்களை வழிநடத்தும் பங்கு தாய் தந்தையரிடம் உண்டு.

சுவாமி மாணவனாக இருந்த போது ஒரு நாடகத்தை எழுதினார். சொன்னபடி செய்கிறாயா? நாம் பசியோடு இருப்போரை அனுசரிக்க வேண்டும் என்று சாத்திரங்கள் கூறுகின்றன. நாடகத்தைப் பற்றிச் சொல்லப் போனால் பிச்சைக்காரன் வரும் போது துரத்தி விடுகிறார்கள். ஆசாமிகளுக்கு உதவி அளிக்கிறார்கள். அப்போது பிள்ளை குழம்பிய நிலையில் உள்ளது. ஏனெனில் பெற்றோர் பிள்ளையிடம் எப்போதும் உண்மை பேச வேண்டும். இல்லை என்று வருபவர்களுக்கு உதவி அளிக்க வேண்டும். நாடகத்தில் அவ்வாறு நடைபெறவில்லை. அவ்வாறு நடைபெறாமையைக் கண்ட பிள்ளை பெற்றோரிடம் கேட்கிறது நீங்கள் சொன்னபடி நடக்கின்றீர்களா? அடுத்து தந்தைக்கு தொலைபேசி அழைப்பு



வருகின்றது. நான் வீட்டில் இல்லை என்று கூறுமாறு தந்தை கூறுகின்றார். கலக்க முற்ற பிள்ளை உண்மை பேச வேண்டு மென்று சொல்கிறீர்கள். பின்பு பொய்யும் சொல்லச் சொல்கிறீர்கள் என அங்கலாய்க் கின்றது. பெற்றோர் சொன்னபடி நடந்தாலே பிள்ளைகளும் அவ்வாறு நடப்பார்கள்.

தாயானவள் பிள்ளை கர்ப்பத்தில் இருக்கும் போது நல்ல சிந்தனைகள், எண்ணங்களையும் வளர்த்து இதிகாச புராணங்களையும் வாசிக்க வேண்டும். இதனால் பிள்ளை நல்ல நிலையை அடைகின்றது. அடுத்து மகாத்மா காந்தி சிறுவனாக இருந்த போது நடந்த கதை ஒன்றைக் கூறினார் (குயில் கூவியது) தாயின் கட்டுப்பாடான வார்த்தைகளைக் கேட்ட மகாத்மா காந்தி அன்றிலிருந்து தன் வாழ்வில் சத்தியத்தைக் கடைப்பிடித்தார். இவ்வாறு தான் ஒவ்வொரு பெற்றோரும் இருக்க வேண்டும்.

ஐன்ஸ்டீன் பெரிய விஞ்ஞானி ஆனால் அவர் கற்கும் பருவத்தில் மந்தமான நிலையில் இருந்தார். இதனை

NATIONAL SAI YOUTH CONFERENCE
DIVINE LOVE
April 2016 Sri Lanka



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவதானித்த ஆசிரியர் பிள்ளையை மந்தமான பிள்ளை எனக்கூறி அனுப்பு கின்றார். அதனைக் கேட்ட தாய். எனது பிள்ளை மந்தமானது அல்ல. எனது பிள்ளைக்கு ஒரு பாடசாலையும் தேவை யில்லை. நானே கல்வி கற்பிப்பேன் என்று கற்பிக்கின்றார். தாயின் கூற்றின்படி அவர் பெரிய விஞ்ஞானியாக வந்தார். இதன் மூலம் பாடசாலைகள் பிள்ளைகளைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க வேண்டும். பெற்றோரும் ஆசிரியர்களும் தமது கடமைகளைச் சரியாகச் செய்யும் போது தான் பிள்ளைகள் நற்பிரஜைகளாக வருவார்கள்.

பிள்ளைகளுக்கு சக்தி மிகவும் அபாரம். பிள்ளைகள் சத்திய சாயி பாடசாலை நிகழ்வுகளிலே பங்கு பற்ற வேண்டும். அவர்களுடைய ஆக்கத்திற்கு முக்கியத்துவம் கொடுக்காவிட்டால் எதிரிகள் வளர்ந்து விடுவார்கள். இதனால் தான் வேதம் காயத்ரீ ஓதுவது மிகவும் முக்கியமாக கருதப்படுகின்றது. இந்த நேர்மறையான செயற்பாடுகள் மூலம் நாங்கள் பிள்ளைகளுக்கு வாழ்க்கையின் உயர்ந்த தத்துவத்தை அறிய வைக்க முடியும். அதன் போது ஞானியினதும் சீடர்களினதும் சம்பாஷணையைக் கூறினார். வாழ்க்கையில் எது உயர்ந்தது என்பதற்கு..

பூமிதான் முக்கியம் என்று கூறினார்கள்.
பூமியிலும் பார்க்க நீர் பெரியது
நீரைவிட அகத்தியர் பெரியவர்
அகத்தியர் நட்சத்திரத்திற்கு சமன்
கடவுள் தான் முக்கியம்.
கடவுள் மனிதனின் இதயத்தில் ஆகவே மனிதன் பெரிது. பக்தியைவிட வேறொன்றும் பெரிதில்லை என்றார் ஞானியர்.

அடுத்தது, எங்களது தேவையும், தேவைக்கு மேலான ஆசையும். சுவாமி பிள்ளைகளுக்கு ஐஸ்கிறீம் கொடுத்தார். ஒரு பிள்ளை இரண்டாவது முறை ஐஸ்கிறீம் கேட்டது. அப்போது இது உனக்கு தேவைதானா? என்று கேட்டார். வனிலா ஐஸ்கிறீம் வெண்மையானது. கடவுளும் இதுபோல வெண்மையானவர். வனிலா ஐஸ்கிறீம் இனிமையானது இதுபோல கடவுளும் இனிமையானவர். நாங்கள் எல்லோரும் எப்போதும் இனிமையானவர்களாக இருக்க வேண்டும். நாம் ஒருவொருக்கொருவர் கோபம் கொண்டு சண்டையிட்டுக் கொண்டிருந்தால் இனிமையான வர்களாக இருக்க முடியுமா? பிள்ளைகள் பெற்றோர், ஆசிரியர்கள் சொல்லைக் கேட்டால் தான் இனிமையானவர் களாக இருக்க முடியும். வனிலா ஐஸ்கிறீம் குளிர்மையானது இது பணிவாக இருக்க வேண்டு மென்று கூறுகின்றது. கோபம் கொண்டால் அது கொதித்துக் கொண்டிருக்கும். இது குளிர்மைக்கு எதிரானது. வெண்மை நிறம் தூய்மையானது. எமது கலாச்சாரம் தூய்மையில்தான் இருக்கிறது. கடவுளிடம் குழந்தையைக் கூட்டிச் சென்று கடவுளின் தன்மையை எடுத்துக்கூற வேண்டும். பிள்ளைகள் பெற்றோரின் பாதங்களைத் தொட்டு வணங்குவதைக் கற்றுக் கொடுக்க வேண்டும். ஐம்பூதங்களிலும் ஆண்டவன் இருக்கிறார். எமது கர்மவினைகள் யாவும் அழிந்து போகும். இதனைப் பிள்ளைக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும்.

பெற்றோர் பிள்ளையில் பற்று வைத்திருக்கிறார்கள். அப்பிள்ளை எமக்கு பராமரிப்பதற்காகவே கடவுளால் தரப்பட்டது. ஆதிசங்கராச்சாரியார் தாய்க்குப் பணிவிடை செய்ய துறவி வேடத்தில் வருகிறார். அவ்வேடத்தைக் காண அம்மாவிற்கு பிடிக்கவில்லை. இதனை அறிந்த ஆதிசங்கரர் அன்னையைப் பார்த்து அம்மா இந்த உடலை மட்டுமே நீங்கள் பெற்றீர்களே ஒளிய ஆத்மாவை அல்ல என்று கூறி, ஆத்மாவின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறார்.

கணவனுக்கும் மனைவிக்கும் இரண்டு பிள்ளைகள் இருந்தனர். கணவன் வெளியூர் சென்ற சமயத்தில் இங்கே இரண்டு பிள்ளைகளும் நோய்வாய்ப்பட்டு மரணித்து விட்டனர். கணவன் பலமாதங்களுக்கு பின் திரும்பி வந்து மனைவியிடம் பிள்ளைகள் எங்கே என்று கேட்டார், அதற்கு மனைவி எனக்கு ஞானி இரண்டு முத்துக்களைத் தந்தார் பின்பு அதைத் தரும்படி கேட்டார். அதற்கு கணவன் ஏன் கொடுக்கவில்லை என்று கேட்டார். மனைவி கூறினார் கடவுள் இரண்டு பிள்ளைகளைத் தந்தார் அதை அவரே எடுத்து விட்டார். நாங்கள் முன் மாதிரியாக நடக்க வேண்டும் அப்போது தான் பிள்ளைகள் நல்லவர்களாக இருப்பார்கள். பிள்ளைகள் பெற்றோர் ஆசிரியர் ஆசீர்வாதம் பெறாமல் இறைவனை அடைய முடியாது.

கணேச உருவத்திற்கு ஏன் தும்பிக்கை நீண்ட மூக்கு? மிகவும் சக்தி வாய்ந்தது. தும்பிக்கையை பாவித்து ஆபத்து சூழலை அறிந்து கொண்டு சீரான பாதையில் செல்கிறது. அதே போல நாமும் நல்ல பாதை கெட்ட பாதை என்பதை அறிய வேண்டும். யானையின் சிறந்த குணம் என்ன? பெரிய காதுகள். நாம் பெற்றோர் ஆசிரியர் கூறுவதை கவவனமாகக் கேட்க வேண்டும். எல்லாம் எமது நன்மைக்காகவே என்பதை உணர வேண்டும். கேட்பது மட்டுமல்லாமல் வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டும்.

ஒரு வேளை முருகனுக்கும் பிள்ளையாருக்கும்

NATIONAL SAI YOUTH CONFERENCE
DIVINE LOVE
April 2016 Sri Lanka



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இடையில் இடம்பெற்ற மாம்பழக் கதையைக் கூறினார். (பிள்ளைகளுக்கு பெற்றோரே உலகம்) இதிலிருந்து பிள்ளையார் எப்படி கணங்களுக்கு அதிபதியாய் வந்தார் என்பதை விளக்கினார். எலி இருட்டில் அகப்பட்ட பண்டங்களை உண்கிறது. எனவே நாம் நேர் மறை எண்ணங்களை தவிர்ப்பதற்கு எலியை வாகனமாக்கினார். மயில் விசப்பாம்பைக் கொல்லுதல் எமக்கு ஆசை போன்ற எண்ணங்கள் நிறைய உண்டு அதை அழித்தால் நாங்களும் முருகனைப் போல பிரகாசமாய் இருக்க முடியும்.

பிள்ளையாரின் பெரிய வயிறு மனிதர்களுடைய துன்பங்களை எல்லாம் தனது வயிற்றில் போட்டு பக்தர்களுக்கு அன்பைச் சொரிகிறார். அதே போல் நாமும் மற்றவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். இக்காலப் பெற்றோர் பிள்ளைகளின் எதிர்காலம் பற்றி சதா சிந்தித்து கவலைப்படுகின்றனர். பிள்ளையையும் சந்தோசமாக வாழ விடாது நாமும் துன்பப்படுகின்றனர். இதனால்தான் பெற்றோர் பிள்ளைகளுக் கிடையில் அன்பின்மை ஏற்பட்டு முதியோர் இல்லங்கள் பெருகி வருகின்றது. இதற்கு நன்றியுணர்வு இன்மையே காரணம். நன்றியுணர்வும் அன்பும் மிகவும் முக்கியம். பிள்ளைகளுக்கு தண்டனை வழங்காமல் அன்புடன் கல்வி கற்பிக்க வேண்டும். பிள்ளை வகுப்பறையில் குறைந்த புள்ளிகளைப் பெற்றால் பேசுவோம், அடிப்போம். பிள்ளைகள் நினைப்பார்கள் பாடசாலை என்றால் அடிதான் என்று. கற்பித்தலில் பொறுமையும் அன்பும் அர்ப்பணிப்பும் இருக்க வேண்டும்.

பெற்றோருக்கு பிள்ளைகளைப் பற்றி விளங்கு வதில்லை. தேவகிக்கு கிருஸ்ணரைப்பற்றி விளங்கவில்லை. கோசலைக்கு இராமரைப் பற்றி விளங்கவில்லை. ஈஸ்வரம்மாவிற்கு சாயியைப் பற்றி விளங்கவில்லை. பிள்ளைகளிடம் அபார சக்தி உண்டு. அதனைப் பெற்றோர் அறிந்திருக்க வேண்டும். விழுமியங்களில் முதலாவது சத்யம் ஆகும். எப்போதும் உண்மையே பேசச் சொல்ல வேண்டும். உண்மை பேசும் போது பாராட்டி வெகுமதி கொடுக்க வேண்டும். பொய் பேசும் போது மன்னித்து உண்மை பேச தூண்ட வேண்டும்.

இரண்டாவது தர்மம் ஒவ்வொரு வரும் தமது கடமையைச் செவ்வனே செய்ய வேண்டும். பெற்றோர் சொல்வதைக் கேட்டு அதைக் கடைப்பிடிக்க வேண்டும்.

மூன்றாவது சாந்தி இது மத்திய விழுமியம். நாம் சாந்தி என்னும் அமைதியைப் பேணினால் மற்ற விழுமியங்கள் தானாக வரும். நான்காவது அன்பு சுவாமி சொல்கிறார் நான் என்னில் இருந்து பலவாகப் பிரிந்து கொண்டேன் அடிப்படை உணர்வு பெற்றோர் அன்புதான். ஆகவே எப்படி தண்டிக்கலாம்? பிள்ளையிடம் பெற்றோர் அளவு கடந்த அன்பு செலுத்தி விட்டு பிழை செய்யும் போது அன்பைத் தளர்த்தினால் அது பிள்ளையைத் துன்பப் படுத்தும் அதனா லேயே பிள்ளை திருந்தும் சந்தர்ப்பம் உண்டு.

அடுத்ததாக அகிம்சை. நாம் பிள்ளையைப் பற்றி அனாவசியமாகச் சிந்திப்பதால் கிம்சை உண்டாகின்றது. சுவாமி சொல்கிறார் நாம் மாமிசம் சாப்பிடக் கூடாது எல்லாவற்றிலும் பரந்திருப்பது இந்தப் பேர் உணர்வுதான். சமுத்திரத்தில் அலை எழுவது போல சூரியனின் விம்பம் தோன்றுவது போல ஒன்று பலவாகத் தெரியும். மற்றவர்களுக்கு துன்பம் விளைவித்துக் கொண்டு நாம் மகிழ்ச்சியாக இருக்க முடியாது. நாம் மாமிச உணவைச் சாப்பிடும் போது

NATIONAL SAI YOUTH CONFERENCE
DIVINE LOVE
April 2016 Sri Lanka

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனால் மிருகங்களுக்கு ஏற்படும் துன்பங்களை உணர வேண்டும். மாமிச உணவு பலவித வியாதியை உண்டாக்கு கிறது. இதனை தவிர்க்க வேண்டுமானால் மாமிசம் உண்பதைத் தவிர்க்க வேண்டும்.

நாம் சுவாமிக்கு முன்னால் தீபம், பழங்கள், பூக்கள் வைக்கின்றோம். இதில் தீபம் ஊற்றெடுக்கும் அன்பைக் குறிக்கிறது. மலர் இதயத்தைக் குறிக்கிறது. பழங்கள் நாம் செய்யும் செயலின் பலனைக் குறிக்கிறது.

நாம் பிள்ளைகள் பற்றிய எதிர் மறையான எண்ணங்களைத் தவிர்க்க வேண்டும். பிள்ளைகளின் திறமை உடனடியாக வெளிப்படுவதில்லை. எனவே அவர்களின் திறமைகளை உடனடியாக மதிப்பிட முடியாது.

உதாரணமாக எடிசன் மின்சார பல்ப்பை கண்டுபிடிக்க முன்பு 1000 தடவைகள் பின்வாங்கினார். அவர் அச் செயற்பாட்டில் பின்வாங்காமல் முயன்று முயன்று செயற்பட்டார். தன்னம்பிக்கை யுடன் விடாமுயற்சியுமே அவரின் கண்டு பிடிப்புக்கு காரணமாகியது.

புட்டபர்த்தியில் விடுதியில் இருந்து கல்வி கற்கும் மாணவர்களின் நேர ஒழுங்கு

| | |
|---|---|
| காலை 5.00 | ஓம்காரம் |
| | தேநீர் |
| | யோகாசனம் |
| | குளித்து ஆடை அணிதல் |
| 7.00 | காலை உணவு |
| 8.00 | கல்லூரியில் கற்றல் |
| 12.00 | மதிய உணவு |
| 12.30 | வகுப்பு தொடரும் |
| 4.00 | தேநீர் |
| 4.15 | மைதானத்திற்கு செல்லல் |
| 4.45 | மந்திர் சென்று வேதம் ஓதுதல், பஜனை |
| 6.45 | இரவு உணவு |
| 7.30 | கதவு மூடப்படும் |
| 8.00 | படிக்கும் நேரம் |
| 10.00 | பால் குடித்தல் |
| 10.10 | இரவுப் பிரார்த்தனை |

இவ்வாறு நேர ஒழுங்கின்படி செயற்பாடுகள் இடம் பெறுகின்றன. இறைவனை நினைக்க நேரம் இல்லை என்று கூறக் கூடாது. எழும்பியவுடன் கைகளைப் பார்த்து கராக்தே..... என்ற சுலோகத்தை உச்சரிக்க வேண்டும். இந்த இனிய நாளைத் தந்துள்ள இறைவனை இதயபூர்வமாக சிந்திக்க வேண்டும். விளையாடும் போது சுவாமியின் மைதானத்தில் விளையாடுகிறோம் என்ற எண்ணம் இருக்க வேண்டும். வகுப்பறையில் ஆசிரியர் இறைவனின் வடிவம் என்ற எண்ணம் வேண்டும். துயில் கொள்ளும் போது ஆண்டவனின் மடியில் துயில் கொள்கின்றோம் என்ற எண்ணம் வேண்டும். எனவே நாம் அனைத்துச் செயற்பாடுகளையும் ஆண்டவனுக்கு அர்ப்பணித்துச் செய்ய வேண்டும். பெற்றோர், ஆசிரியர்கள் 24 மணிநேரமும் பிள்ளைகளைச் சுற்றி இருக்க முடியாது. எனவே பிள்ளைகளுக்கு ஆண்டவனிடம் அசையாத நம்பிக்கையை விதைக்க வேண்டும்.

5-6 வயது சிறு பிள்ளைகள் சுவாமியின் நேர்காணல் அறைக்கு முன்னால் அமர்ந்திருப்பர். அப்பொழுது சுவாமி ஒவ்வொரு அப்பிள் கொடுத்தார். சுவாமி ஒரு பிள்ளையிடம் உனக்கு எத்தனை வயது என்று கேட்டார். அவன் 6 வயது என்று கூறினார். சுவாமி கூறினார் இல்லை 21 நாட்கள் மட்டுமே என்று. எல்லோரும் சிரித்தார்கள் பின்பு சுவாமியை அணுகிக் கேட்ட போது தான் அதன் உண்மை தெரிந்தது. அந்தச் சிறுவன் டிசம்பர் சரியான நோய்வாய்ப் பட்டு இருந்தான். மருந்துக்கும் குணப்படவில்லை. பொது வைத்தியசாலையில் அனுமதித் தனர். அவர்கள் சுவாமியைப் பிரார்த்தனை செய்தனர். சுவாமி கனவில் தோன்றி ஆறுதல் கூறினார். அவனது கட்டிலிலே இருந்து விபூதி திருஸ்டித்துக் கொடுத்தார். இதன் மூலம் 21 நாட்களுக்கு முன்னரே சுவாமி அப்பிள்ளைக்கு புத்துயிர் அளித்தார்.

கல்லூரி மாணவன் ஒருவன் சுவாமியிடம் ஆசீர்வாதம் பெற சென்ற போது உன் மூத்த அண்ணாவை நான் தப்ப வைத்துள்ளேன் எனக் கூறினார். அந்த மாணவன் அண்ணாவிற்கு தொலைபேசி அழைப்பினை ஏற்படுத்திக் கேட்ட போது அவர் கூறினார். சுவாமி சொன்னதை மீறி வந்தேன் எனது நண்பனின் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்தேன் விபத்தில் இருந்து சுவாமி என்னைக் காப்பாற்றினார்.

எனவே சந்தேகம் இல்லாமல் ஆண்டவனிடம் நம்பிக்கை வைத்திருக்க வேண்டும். உங்கள் கடமைகளைச் சரியாகச் செய்யுங்கள் சோம்பேறியாக இருக்க வேண்டாம் கடவுளை ஏற்றுக் கொண்டு அவர் வழி நடத்தல் சாலச் சிறந்ததாகும்.

ஜெய்சாயிராம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமதி ஊர்மில் ஆனந் (தீபக் ஆனந்த் அவர்களின் தாயார்) அவர்கள் 6.5.2016 இல் ஆற்றிய உரையின் சாராம்சம்



நான் சத்திய சாயி நிறுவனத்தில் பேசும் முதலாவது பேச்சாகும். நான் எப்படி சாயி பகவானிடம் வந்தேன்? எனது அயலவர் வீட்டில் பஜனைக்குப் போகத் தொடங்கினேன் அங்கு சுவாமியின் படத்தைக் காண்பித்து இவர் தான் சாயி பாபா. இவர் இராமா, கிருஸ்ணர், சிவா எல்லாமே என்று சொன்னார்கள். இது எப்படி முடியும். நான் வணங்கும் கிருஸ்ணர் நகைகள் போட்டு என்ன அழகாக இருப்பார். நான் படத்தைப் பார்த்து, நீர் பகவானா? என்று கேட்டேன். படம் உயிர் பெற்று சிரித்து முகமும் சிவந்தது. எனக்குப் பைத்தியமா? நீர் பகவானாயிருந்தால் எனக்குக் கனவில் தோன்றி அனுபவம் தரவேண்டு மென்று பிரார்த்தித்தேன். அவர் எனது பிரார்த்தனைக்கு வசமானார். இரவு கனவில் தோன்றினார். எனது உடம்பை விட்டு வெளியே சென்ற அனுபவம் கிடைத்தது. கோவிந்தா! கோவிந்தா! என்றழைத்தேன். நான் எல்லாவற்றையும் விட்டு அவருடன் இருக்கவே விரும்பினேன். 1992 ஆம் ஆண்டு சேவதாளாக பிரசாந்தி நிலையத்திற்குச் சென்றேன். நான் சுவாமியின் பாதத்திற்குக் கீழ் கைக்குட்டையை விரித்து பாதநமஸ்காரம் எடுத்தேன். நான் மகன் தீபக்குக்கு பல்கலைக்கழகத்தில் அனுமதி கொடுக்கும்படி வேண்டினேன். அவர் மனம் நெகிழ்ந்து மகனுக்கு அனுமதி கொடுத்தார். எம்.பி.ஏ படிப்பும் படித்தார். கணவரையும் அழைத்து சனாதன சாரதி (ஆங்கிலம்) இதழுக்கு ஆசிரியராகப் பதவி கொடுத்தார். இருவரும் வந்து விட்டபின். நான் டில்லியில் தனியே இருந்தேன். நான் அரசாங்கத்தில் ஆசிரியராகப் பணி புரிந்ததால் உடனே விட்டு வர முடியவில்லை. எனக்கு நேர் காணல் கிடைக்க வேண்டுமென்று மகனிடமும், கணவரிடமும் காகிதம் கொடுக்கச் சொன்னேன். அவர்கள் அருகாமையில் இருந்தாலும் சுவாமியிடம் காகிதம் கொடுக்க முடியவில்லை.

நான் இதய பூர்வமாக அழுது அழுது பிரார்த்தித்தேன். காலையில் தரிசனத்தின் போது மகனிடம் நான் நேர்காணலுக்காக வேண்டுகிறேன் என்று சொல்லி அடுத்த நாள் கூப்பிடுவதாகச் சொன்னார். நேர்காணலில் மகனுக்கு கலியாணம் செய்து வைக்கும் படியும் தான் சகல சாமான்களும் தருவதாகச் சொன்னார். நாங்கள் இங்கே முக்தி பெற வந்துள்ளோம். கலியாணம் திரும்பவும் பந்தத்தில் இறக்கி விடும் என்று அடம் பிடித்தேன். கணவருக்கு கல்யாணம் செய்து கொடுக்க விருப்பம் நான் மிகவும் இறுக்கமாக முடியாதென்று சொன்னேன்.

அவர் மகனிடம் "நான் எவ்வளவு தூண்டியும் அம்மா அசையவில்லை" என்று சொன்னார். அவரைக் கிருஸ்ணராகவும் என்னை கோபிகையாகவும் ஏற்றுக் கொண்டேன். இதன் பின்பு பல ஆன்மீக அனுபவங்களைத் தந்தார். அவரால் தர முடியாதது ஒன்றுமில்லை. அவர் எனக்கு புருவ மத்தியில் தரிசனம் தந்தார். நான் அப்போது எழும்பி ஆடினேன், பாடினேன் எனக்குக் குண்டலினி எழும்பும் அனுபவத் தையும் தந்தார். அவரிடம் எத்தனையோ வேண்டினேன். குருநானக் சொன்னது போல் பல உலகங்கள் இருந்தால் காட்டும்படி கேட்டேன். சந்திரலோகம் வேறு பல லோகங்களையும் காட்டினார். நான் நாமஸ் மரணையில் மிகவும் ஈடுபாடு கொண்டேன். ஒரு கோடி நாமஸ்மரணை செய்யத் தொடங்கினான். இதன் பிற்பாடு ஏனைய சாதனைகளை விட்டு விட்டேன். இது முடிய முன்பு ஒரு கடற்கரையோரத்திலுள்ள இயற்கைச் சிகிச்சை நிலையத்திற்கு சிகிச்சைக்காகப் போயிருந்தேன். நானும் கணவரும் கடற்கரையில் கொஞ்சம் தூரவே இருந்தோம். இருந்தாப் போல் பெரிய அலை வைத்து என்னை இழுத்துக் கொண்டு போய் விட்டது. கணவரும் அழத் தொடங்கி விட்டார். அதே அலை திரும்பவும் இருந்த இடத்தில் தள்ளி விட்டது. நான் மிகுதி நாமஸ்மரணை எண்ணிக்கையை முடிப்பதற்காகவும், ஸ்ரீலங்கா வருவதற்காகவும் எனக்கு உயிர் தரப்பட்டதென நினைக்கிறேன்.

நான் இப்பொழுது எண்ணிக் கையை முடித்து விட்டாலும் நாமஸ் மரணைக்கு அடிமையாகி விட்டேன்.

இங்கிருக்கும் சாயி குடும்பத்தின ருக்கும் பகவானுக்கும் நன்றி கூறுகிறேன்.

ஜெய் சாயிராம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றம் - மன்னிப்பு - சோதனை - ஆட்கொள்ளல்



இவ் நான்கையும் திருநாவுக்கரசு நாயனாரின் வாழ்க்கை மூலம் ஓரளவு விளங்கிக் கொள்ளலாம்.

திருமுனைப்பாடி நாட்டில் திருவாரூரில் புகழனார் , மாதினியார் என்ற தம்பபதிகளுக்கு திலகவதியார் என்ற மகளும், மருள் நீக்கியார் என்ற புதல்வனும் பிறந்தார்கள். திலகவதியார் 12 வயதை அடைந்ததும் பெற்றோரும் பெரியோரும், சிவதொண்டனும் போர் வீருனுமாகிய ...கையார் என்பவருக்கு திருமணம் செய்யத் ...ார்கள். திருமணம் நடைபெறமுன்பு, ...ல் போர் முனைக்கு அனுப்பப்பட்டார். ...னார். இந்நிகழ்விற்கு முன்பே, ... கொடிய வியாதியால் ...க முடியாது தாயாரும் ...யார் துன்பம் தாங்காமல் ...இதை அறிந்து சகோதரி ...முன்னமே சாவேன் என்று கூற, ... மானத்தை மாற்றினார். ...கவதியார் ... வாழ்வில் முழமையாக இணைத்துக் கொண்டார்.

...ம்பியாராகிய மருணிக்கியர் ...க்கை நிலையாமை, செல்வம் நிலையாமை, மனித வாழ... ...ிச்சயமற்றதென்பபதை உணர்ந்தது. உலக வாழ்க்கையில் புகாமல், தான தர்மங்கள் செ...தார். எது உண்மையென்று ஆராயத் தொடங்கினார். இந்நிலையில் பாடவிபுரம் சென்று சமணர்களின் பள்ளியில் வாழ்ந்தார். அங்கே ஆரகத சமயமே முக்தியடைவதற்குத் தகுந்த சமயம் என்று எண்ணி அதில் பாண்டித்தியம் பெற்றார். உபதேச்கள் செய்தார். சமணர்கள் இவரைக் குரவாகவும் ஏற்றுக் கொண்டார்கள். புத்மனை வாதில் வென்று புகழ் ...டைந்தார்.

திருவாரூரில் வாழ்ந்த திலகவதிர் பரமசிவனிடத்தில் பக்தி பூண்டு சிவதொண்டுகள் செய்து வ... ...ணிக்கியார் சமண சமயத்தை தழுவியது மிகுந்த துக்கத்தைக் கொடுத்தது. தம்பியாரைக் காப்பாற்ற வேண்டுமென்று சிவபெருமானிடம் உருக்கமாகப் பிரார்த்தித்தார். சிவபெருமான் கனவில் தோன்றி 'தபொதினியே உள் மனக் கவலையை ஒழி. தம்பி துறவியாகிய பூர்வ ஜன்மத்தில் தவம் செய்துள்ளான். அப்போது ஏற்பட்ட சிறு வழுவுற்றறால் இப்போது அன்னிய மதத்தில் பிரவேசித்துள்ளான். அவனைச் சூலநோயினால் வருத்தி ஆட்கொள்வேன்' என்று சொல்லி மறைந்தார்.

பரமசிவன் ற்றின்படி தருமசனருகக்கு (மரூணிக்கியர்) சூலை நோய் தொடங்கியது. நோய் மிகவும் வலுவடைந்தது. சமணர்கள் சகல சிகிச்சைகளளித்தும் பலனளிக்கவில்லை. நோயை மாற்றற முடியாது. சமணர்கள் கைவிட்டு நழுவி விட்டார்கள். முடிவில் சகோதரியான திலகவதியாருக்கு செய்தி அனுப்பினார். இந்தத் துதன் வீரட்டாணத்தில் திலகவதியாரைச் சந்தித்து நடந்ததைக் கூறினார். தான் சமணர்களுடைய பள்ளிக்கு வரமாட்டேன் என்றும் தன்னை வந்து சந்திக்கும்படி கூறியனுப்பினார். தருமசேனர் ஆரகத சமயத்தை விட்டு சகோதரியை வந்தடைந்தார். அவரை வணங்கி அவரே கதியென்று சரணடைந்தார். திலகவதியார் சிவனை வணங்கி கஸ்டங்கள் வருவது நன்மைக்கே என்று கூறி ஆசீர்வதித்தார். சிவபெருமானுக்கே தொண்டு செய்யும்படியும் கூறினார். உடலெங்கும் திருநீறு பூசி திருக்கோவிலை வலம் வந்து

NATIONAL SAI YOUTH CONFERENCE
DIVINE LOVE
April 2016 Sri Lanka



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரைமீது வீழ்ந்து வணங்கினார். இறை அருளால் தமிழ்ப்பாமாலை சாத்தும் மெய்யுணர்வு அவருக்குத் தோன்றியது. இறைவன் சந்நிதியில் நின்று பின்வரும் திருப்பதிகத்தை பாடலானார்.

'கூற்றாயினனவாறு விலக்ககிவீர்
கொடுமை பல செய்தன நானறியேன்
ஒன்றாயடிக்கே இரவும் பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாதெ் வயிற்றின் அகம்படியே
முடரோடு தொடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டானத்துறை அம்மானே'

அவர் மெய்யுணர்வு அடைந்து பரவசநிலை அடந்தார். 'பெருமனே என் தவறினால் உமது அருளைப் பெறும் பேறு பெற்றேன். உமது திருவடிகளை அடையும் பொருட்டு சூலரோயைத் தந்து பெருவாழ்வு தந்ததற்கு நான் என்ன கைம்மாறு செய்வேன்' என்று கூற

அசரீர வாக்கு:
'நீ மொழிக்கு மொழி தித்திக்கும் தீந்தமிழ்
திருப்பதிகப் பாமாலையைப்
பாடிய படியால், உனக்கு ாவுக்கரசு என்னும்
நாமத்தைச் சூடுகிறேன்.

திருநாவுக்கரசரின் மகிமையை அறிநந்த சமணர் தங்களுக்குக் கேடு வந்து விட்டதென்றெண்ணி பல்லவர் அரசனனிடம் இவரைக் கொல்லுமாறு வேண்டினார்கள்.
அரசரின் ஆணையைக் கேட்டதுமட் 'நாமார்க்கும் குடியல்லோம் என்ற திருத்தாண்டகத்தைப் பாடினார். அரசன் சுண்ணாம்பறையில் அடைக்குமாறு பணித்தான். அங்கே 'மாசில் வீணையும்' என்ற திருக்குறுந்தொகையைப் பாடி குளிர்மையாக இருந்தார். பின்பு நஞ்சூட்டிய அமுதைக் கொடுத்தார்கள். அதுவும் ஒரு தீங்கிழைக்கவில்லை. பின்பு யானையை ஏ... அதுவும் பலிக்கவில்லை. பின்பு கல்லுடன் கட்டி க... வீசுமாறு பணித்தான். அப்போது 'சொற்றுணை ...திய' என்னும் மச்சிவாயப் பதிகத்தைப் பாடினார். கல்... கப்பல் போல் மிதந்து சென்றது. அரசனம் தன்பிழையை உணர்ந்து சிவாலயமும் கட்டினான்.

திருத்தூல்கானை மாடன் என்னும் கோயிலில் 'நாகனே' அடியேன் உடல் ஆருக்த சமத் தொடக்குண்டது. இவ்வுடலே யான் உயிர் வாழ்வேன். உயிர் வாழ்வதற்குச் சூலத்தையும் இடபத்தையும் என்மீது பொறித்தருளல் வேண்டும்' என்று வேண்டி 'பொன்னர் திருவடிக் கொன்றுண்டு' என்னும் திருவருட் பதிகம் பாடினார். இக்குறிகள் இரு தோள்களிலும் குறிக்கப்பட்டன. என்ன அற்புதம்? இதன் பின்பு பல பதிகங்கள் பாடியுள்ளார்.

சீர்காழி சென்று திருஞானசம்பந்தரைச் சந்தித்தார். இருவரும் ஒருவரை ஒருவர் வணங்கி ஆனந்தம் கொண்டனர். அப்பூதி அடிகளாரைசச் சந்தித்து அமுதுண்டு இறந்த மகனை உயிர்பித்த நிகழ்வும் நடந்தது. ஓர் ஊரில் பஞ்சத்தையும் போக்கியுள்ளார். திருமறைக்காட்டில் பாடி கதவைத் திறக்கச் செய்தார்கள்.

ஞான சம்பந்தர் அப்பரைக் காணப் பல்லக்கில் வந்தார். ஒருவருமறியாதபடி அப்பர் பல்லக்கைக் காவி வந்தார். ஞானசம்பந்தர் இதை அிந்து திடுக்கிட்டு இறங்கி இருவரும் ஒருவரை ஒருவர் வணங்கினார்கள்.

இவர் பூம்புகலூர் ஈஸ்வரனுக்கு நாள் தோறும் தொழுது உளவாரத் தொண்டு செய்தார். அப்பர் சுவாமிகளின் நன்னிலைமையை உலகத்திற்குக் காட்ட பல சோதனை கொடுத்தார். உழவாரம் செதுக்கும் பொழுது நவமணியும் பொலிந்து கிடந்தாலும் எல்லாம் கற்கள் என்றே எண்ணி தேவதாசிகள் பாட்டாலும் முயன்றும் அப்பர் சுவாமி ...

புகலூர்ப் பெருமானை சேர்க்குமாறு 'புண்ணியா ... ஓதி சிவன் சேவடியில் அம...

இவ் வாழ்வில் நாம் குற்றமி... ...யும், (அதுவும் முன்னைவ) ஒரு பக்தரின் பிரார்த்தனையால் ஆண்டவன் இவருக்குத் தாங்கமுடியாத நோயைக் கொடுத்து ஆட்கொண்டார். பின்னர் ஆலயத்தொண்டிற்கு மகிமை கொடுத்தார். பொன்னாலும், பெண்ணாலும் தன்னிலை தளரவில்லை. பின்னர் இறைவனுடன் ஒன்றானார். பக்தி மார்க்கத்தின் உச்சகட்டம்.

ஜெய்சாயிராம்.

மு.குமாரசுவாமி
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோதனை மேல் சோதனை - ஆனால் சாயி கைவிடமாட்டார்

சாய் பஜனை 1972 ஆம் ஆண்டு முந்நாள் ஹைலன்ஸ் பாடசாலை ஆசிரியரால் தொடங்கப்பட்டது. தலைமை ஆசிரியர் திருமதி.சிவசிதம்பரம் அஞ்சல் அதிபர் செல்லையா வாமதேவன் ஆசிரியர்களால் பாடசாலையில் வியாழன் மாலையில் பஜனை தொடங்கியது. சிறிது காலமே நடைபெற்றது. அதன் பின்னர் திருமதி.சிவசிதம்பரம் வீட்டில் நடக்க ஏற்பாடாகியிருந்தது. அதுவும் வன் செயலால் வீட்டுக்கு தீ வைத்தார்கள், அதிலும் புதுமை வீட்டிலுள்ள பொருட்கள் எரிந்து வீணாகியது. ஆனால் சுவாமியின் படம் மட்டும் கண்ணாடிகூட உடையாமல் இருந்தது. ஆனால் வேறு படங்கள் , பாய், விளக்கு, ஆராத்தி கூட களவு போய் விட்டது. காவல்துறையில் இது பற்றி அறிவித்தவுடன் தலைமை அலுவலர் அவர்கள் சிரித்து இது கிடைக்காது எடுத்தவர்கள் விற்று இருப்பார்கள் என்றார். இதுவும் சுவாமி அற்புதம். சுமார் 10 நாட்களில் கண்டியில் ஒருவர் இப்பொருட் களை விற்றுக் கொண்டு செல்லும் போது அகப்பட்டு ஹற்றன் பொலிஸ் நிலையத் திற்கு கொண்டு வந்து கொடுத்தார்கள். படங்களை வைத்து சனிக்கிழமை பஜனை வைத்தோம். பின்பு சாய் சமித்திக்கு சாயி நிலையம் என்று தரம் உயர்த்தி, தற்போதும் தொடர்ந்து இயங்கி வருகிறது.

சென்ற வருடத்தில் இங்கு இலவசமாக கணனி , ஆங்கில, சிங்கள வகுப்புக்கள் நடத்தினோம். தோட்டத் திலுள்ள கர்ப்பிணி தாய்மாருக்கு "சாய் போசா" சத்துமா ஒவ்வொரு போயா தினமும் கொடுத்தோம். பகவானின் ஆசீர்வாதத்தால் கண்பார்வை குன்றிய 21 பேருக்கு கண்டி வைத்தியசாலையில் சத்திரசிகிச்சை செய்வித்தோம். சுவாமியின் ஆசீர்வாதத்தால் புட்டபர்த்தியில் உள்ள வைத்தியசாலையை பார்வையிட்ட பின் அதே போல் சகல வசதியுடன் உள்ளதாக வைத்தியசாலை ஒன்றை தருமாறு கேட்டதற்கு கிளங்கன் டிக்கோயா 120 கட்டில் கொண்ட சகல வசதியுடன் கொண்ட வைத்தியசாலையை இந்திய அரசாங்கம் கட்டிக் கொடுத்துள்ளது. 'மகாத்மா காந்தி' எனப் பெயரிடவுள்ளோம்.

மேலும் சுவாமியின் 90 ஆவது பிறந்ததினத்தை முன்னிட்டு வீடுகளிலும், பாடசாலைகளிலும் "காயத்ரீ மந்திரம்" சொல்லப்பட்டது. 90 காயத்ரீ பூசையில் படங்களும் கொடுத்துள்ளோம். சிங்கள மொழியிலும் மந்திரங்கள் எடுத்துக் கொடுத்துள்ளோம். சுவாமியின் பிறந்த தினத்தை யொட்டி டிக்கோவில் சமரவில் பாடசாலைக்கு கொப்பி, பென்சில்கள் கொடுத்துள்ளோம். இப் பாடசாலை மாணவர்கள் வசதி குறைந்தவர்கள் ஆகையால் அனைத்து மாணவர்களுக்கும் கொப்பி பென்சில்கள் கொடுக்கப்பட்டது.

13.2.2016 இல் சுவாமியின் நினைவாக கிளிங்கன் வைத்தியசாலையில் குழந்தை கிடைக்க இருப்பவர்களுக்கு, குழந்தை கிடைத்தவர்களுக்கு, சிறுவர்களுக்கு என 32 பேருக்கு கொடுக்க ஏற்பாடாகி இருந்தது. (தாய்மாருக்கும் குழந்தைகளுக்கும் கூடிய துணிவகைகள், கம்பளி போர்வைகள்) ஆனால் பகவானின் ஆசீர்வாதத்தால் 52 பேருக்கு கொடுக்கப்பட்டது. சாய் சமித்தி மகளிர்கள் இச் சேவைகளை செய்துள்ளார்கள்.

இலங்கையில் எங்கும் இல்லாத வகையில் ஸ்ரீ சத்திய சாயி பாபா மாவத்தை என்ற பெயரில் சாய் நிலையத்திற்கு வரும் தெருவை கூட சுவாமி அமைத்து விட்டார். பக்தர்கள் இடத்தை தேடி அலையக்கூடாது என்பதற்காகவே சுவாமி இம்மார்க்கத்தை தேர்ந்து எடுத்துள்ளார். பாலவிகாஸ் ஆண்கள் பிரிவுக்கும், பெண்கள் பிரிவுக்கும் உள்ளவர்களில் ஒவ்வொருவருக்கும் வயலின் கொடுத்துள்ளோம்.

வன்செயலுக்கு பின் சிவசிதம்பரம் வீட்டில் இருந்து தற்சமயம் நடக்கும் இடத்தில் பஜனை நடைபெற்றது. திரும்பவும் சோதனை நடந்தது. வீடு ஏலத்தில் போவதற்கு வங்கி ஏற்பாடு செய்தது. உடனடியாக நாங்கள் முருகன் கோவிலுக்கு எல்லாவற்றையும் கொண்டு சென்று அங்கு பஜனை செய்தோம். இது ஒவ்வொரு சனிக்கிழமையும் நடைபெற்றது.

வீடு ஏலத்தில் போக திகதியும் குறிப்பிட்டாகி விட்டது. அன்று காலை 9 மணிக்கு ஏலம் தொடங்க மணி அடித்தார்கள். ஆனால் சுவாமியின் அற்புதம் வங்கி ஊழியர்கள் மட்டும் தான் நின்றார்கள். மற்ற ஒருவரும் வரவில்லை. வங்கியே 1000.00 க்கு வாங்குவதாக ஏலத்தார் குறிப்பிட்டார்கள். ஏலம் முடிவுற்றப்பின் 30 நிமிடம் கழித்து மூவர் வரும் வழியில் வாகனத்தின் சில்லு காற்றுப் போய் வழியில் நின்றதாக ஏலத்தாரிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொன்னார்கள். ஏலம் முடிந்த படியால் ஒன்றும் செய்ய முடியாது என்று கூறிவிட்டார்கள்.


வீடு வங்கியின் பாதுகாப்பாளரிடம் பொறுப்பு கொடுத்து 5 நாள்கள் இருக்கும் போது இரவில் தொடர்ந்து பாம்பின் நடமாட்டம், பக்தி வாசனை, இரவில் பயங்கரமான நிலைமை, சூடம் எரிவது போன்ற நிலைமை இருந்தபடியால், காவலுக்கு நின்றவர்கள் வங்கிக்கு அறிவித்து நிற்க மறுத்து விட்டார்கள். பின்பு முகாமையாளர் கொழும்பிலிருந்து நேராக என்னிடம் வந்து வீட்டு சாவியையும் கொடுத்துவிட்டு நீங்களே வீட்டை பொறுப்பெடுக்கவும் என்று கூறினார்.

நடந்த சம்பவத்தையும் கூறி, தொடர்ந்து என்னை இருக்கும்படியும் பணத்தை பகுதியாக கட்டும்படியும் சொன்னார்கள். நான் வீட்டை பொறுப்பெடுப்பதாகவும், ஆனால் முழு பணமும் செலுத்தியபின் பழையபடி வீட்டுக்கு செல்வதாகவும் தெரிவித்தேன். ஏன் என்றால் அநேகர் குறைகூறினார்கள். இவர் வீட்டில் பகவான் படத்தை வைத்து பூசை செய்தபடியால்தான் இது நடந்தது என்று எல்லாம் வாய்க்கு வந்தபடி சொன்னார்கள். நானோ முழு பாரத்தையும் பகவானின் பாதத்தில் தபால் எழுதி வைத்து விட்டேன். என்ன அற்புதம்! சில நிலங்களை உடனடியாக விற்க பகவானே ஏற்பாடு செய்து 5 நாட்களில் முழு பணமும் வங்கிக்கு செலுத்தி விட்டு பழையபடி வீட்டில் குடியமர்ந்தோம். வங்கி பொது முகாமையாளருக்கும் சுவாமியின் அற்புதம் தெரிந்து என்னிடம் நடந்த வற்றுக்கு மன்னிக்குமாறு கேட்டார். நான் கூறியது ஒன்றே, பகவானிடம் சொல்லுங்கள்.

இதன் பின்னர் முருகன் கோவில் பஜனை நடக்கும் இடத்தில் மழை பெய்தது. இருந்து பஜனை நடப்பதற்கே சிரமமாக இருந்தபடியால் பழையபடியே திரும்பவும் இதே இடத்திற்கு சுவாமி வந்து அமர்ந்து விட்டார். என்ன அற்புதம்! இங்கு தொடர்ந்து சுவாமியின் பிறந்தநாள் தின விழா எல்லாவற்றையும் நடாத்த எல்லாம் வல்ல பகவான் ஆசீர்வதித்து விட்டார். இதில் இருந்து படிக்க வேண்டிய பாடம், சுவாமி சோதனைக்கு மேல் சோதனை செய்வார். ஆனால் கட்டாயம் கைவிடவே மாட்டார். சுவாமி பிள்ளைகளுக்கு சொல்வார் பாடசாலை யில் சோதனை நடந்தால் தான் அடுத்த வகுப்புக்கு செல்ல முடியும் என்று எவ்வளவு சோதனை வந்தாலும் சுவாமியை இறுக்க பிடிக்க வேண்டும்.

ஜெய் சாயிராம்

பொன். தங்கநாயகம்
தலைவர்
ஹற்றன் சாயி நிலையம்.



பகவான் 2.10.1981 அன்று அருளிய உரையிலிருந்து எடுக்கப்பட்ட நற்சிந்தனை

மனிதனுக்கு 5 விதமான யக்ஞாக்கள் கட்டாயம் செய்ய வேண்டு மென்று சொல்லப்பட்டுள்ளது.

1. மத நூல்கள் ஆர்வத்துடன் படிப்பது (ரிஷி யக்ஞ)
2. எங்களைப் பெற்று வளர்த்து வழிகாட்டும் பெற்றோர்களுக்கு செய்யும் செயல்கள் (பிதிர் யக்ஞ)
3. மனம் புத்தி, சித்தம், உணர்வு நிலையைத் தந்ததற்கும் ஒவ்வொரு கலத்திலும் ரசமாக இருக்கும். தெய்வத்தை பய பக்தியுடன் நோக்குவதும், அவர் தந்த உபகரணங்களைச் செவ்வனே உபயோகிக்கும் செயல்கள் (தேவ யக்ஞ)
4. விருந்தாளிகளை செவ்வனே உபசரிப்பது இது (அதிதி யக்ஞ)
5. மரங்கள், தாவரங்கள், விலங்குகள், பறவைகள், வீட்டுப் பூனை, நாய் இவற்றிற்குச் செய்யும் செயல்கள் (பூத யக்ஞ)

சூரிய உதயம் தொடங்கி துயிலாகும் வரை செய்யும் செயல்கள் அனைத்தையும் யக்ஞாவாக ஏற்றுக் கொள்ளுதல்


(பிரசாந்தி சிந்தனை 16.10.2015)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாமும் சாயி வழி வாழ்வோம்

பல ஆயிரம் வருடங்களுக்கு ஒரு முறைதான் அவதாரம் இவ்வுலகிற்கு வருகிறது. நமக்காக நம்மை நல் வழிப்படுத்தி மனிதனை காப்பாற்றுவதற்கு தமது நிலையிலிருந்து கீழ் இறங்கி மனித உருக் கொள்கின்றது. கடவுள் மனிதனாக மட்டுமல்ல விரும்பினால் மிருக உருவிலும் வருவார். தாயை இழந்த பன்றிக் குட்டிகளைக் காப்பாற்ற பன்றி உருவில் வந்து பால் கொடுத்தார்.

இவ்வகையில் சாயி அவதாரமான ஆதிபகவானாம் பரமசிவன் பரத்வாச ரிஷிக்கு வழங்கிய வாக்குறுதிக்கு அமைவாக கலியுகத்தில் மனித உருவில் மூன்று முறை வருவேன் என்றார். அதன்படி சீரடி சாயியாகவும், சத்திய சாயியாகவும் அவதரித்து பிரேமசாயியாக அவதரிக்க வுள்ளார். இவ் வகையில் பகவான் ஸ்ரீ சத்திய சாயி அவதாரமானது சிவனும் சக்தியும் ஒருங்கிணைந்த அர்த்த நாதீஸ்வர வடிவத்தை சொரூபமாக கொண்டதாகும். இதனை சுவாமி சத்திய சாயியே பலமுறை நானே சிவசக்தி சொரூபன் என திருவாயால் மலர்ந்தருளி உள்ளதுடன் அவரது தாமரை பொற்பாதங்களை வணங்கும் பாக்கியம் பெற்ற பல பக்தர்களுக்கு தானே உவந்து ஒரு பாதம் ஆணாகவும் ஒரு பாதம் பெண்ணாகவும் காட்டி அருளியுள்ளார். இதற்கு மேலாக தனது வாழ்க்கை வரலாற்றை எழுதிய பெரியவர் கஸ்தூரிக்கு அர்த்தநாதீஸ்வர தோற்றத்தை வெளிப்படுத்தி அருள் பாலித்தார்.






பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் அவதார கால கட்டத்தை மூன்று பிரதான கூறுகளாக நாம் கூறலாம்.

1) 1926 அவதாரம் முதல் 1970 வரையான காலம்
2) 1970 களில் இறுதி காலம் முதல் 2010 வரையான காலம்
3) 2011 இல் மகா சமாதியின் பின்னரான இன்றைய சமகாலம்

இங்கு முதல் காலப்பகுதிகளிலே தனது அற்புதங்கள், மகிமைகள் மூலமாக மானுட வர்க்கத்தை ஆத்மீகத்தின் பால் ஈர்த்தெடுத்த காலப்பகுதியாக அமைய, இரண்டாம் காலப்பகுதி தனது போதனைகளின் மூலம் மானிட வர்க்கத்தை நல்வழிப்படுத்திய காலப்பகுதியாக அமைய, 2011 காலத்திலிருந்து இன்றைய வரையான காலப்பகுதி மனிதன் தனது உயர் மனமாற்றத்தின் ஊடாக எங்கிருந்து வந்தோம் அங்கே சென்றடைய முயற்சிக்கும் காலப்பகுதியாகும். (தனி மனித உயர் மாற்றம்)

இன்றைய நிலையில் உயர் மாற்றத்தையடைவதற்கு முயற்சிக்கும் போது பல சஞ்சலங்களை பல மனிதர்களும் ஆத்மீக வழியைத் தேடும் எமக்கும் ஏற்படுகிறது. குறிப்பாக மனித வாழ்வில் மேடு பள்ளமும், கஸ்டங்களும் எமக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுகின்றன. இறைவனை ஏற்று வழிபடும் போது இவ்வாறான நிலை ஏன்? என்று ஒரு சாரார் ஏங்க மற்றொரு சாராரோ சாயி காட்டிய ஆத்மீக தேடலில் சட்டங்களும் கட்டுப்பாடுகளும் அவசியம் தானா? என அங்கலாய்க் கின்றனர்.

இவற்றுக்கான தக்க வழியை சத்திய சாயி அவதாரம் மிக தெளிவாக தனது அருளுரைகளில் ஊடாக எடுத்தியம்பியுள்ளது. குறிப்பாக வாழ்வின் துன்ப துயரங்களுக்கு நாமே காரணம் என்று இதற்கு இறைவன் எவ்வகையிலும் காரணம் அல்ல. இத்துன்பங்கள் எமது வினைப்பயன் என்றும் எனினும் இறைவனின் கரங்களை இறுகப் பற்றிக் கொண்டால் கடும் வெயிலில் தவிக்கும் ஒருவனுக்கு குடையை அளித்து பாதுகாப்பேன், மேலும் என்னிடம் பூரண சரணாகதி அடைந்தால் நானே வந்து குடையை விரித்து அழைத்துச் செல்வேன் என்கின்றார்.

அது போலவே ஆத்மீகம் என்னும் செடியை வளர்க்கும் போது சட்டங்களும், கட்டுப்பாடுகளும் அவசியம் என்றும், இல்லா விட்டால் வேலி இல்லாத பயிரை ஆடு, மாடு, எருமைகள் அழித்து விடுவது போல, ஆத்மீகம் என்னும் பயிரை பொறாமை, வெகுளி, கீழ்ப்படியாமை போன்ற துர்க்குணங்கள் வளராமல் செய்து விடும். ஆகவே கட்டுப்பாடு என்ற வேலி அத்தியாவசியமானது என அழாகாக தக்க உவமை மூலம் எடுத்துக் கூறியுள்ளார்.

ஆகவே சாயி அவதாரத்தின் வழியை பின்பற்ற முயற்சிக்கும் நாம் சாயி ஆத்மீக இலக்கியங்களை ஆழமாகவும் அவசியமாகவும் கிரமமாகவும் கற்றுத் தெளிவதன் மூலம் நல்ல சத்சங்கங்களில் இணைவதன் மூலம் எமது சஞ்சலங்களை நீக்கி சாயி பகவான் எதிர்பார்க்கும் தனி மனித உயர் மாற்றத்தை அடைய படிப்படியாக முயற்சிக்க வேண்டும். அப்போதே நாம் இராம அவதாரத்தில் அணில்ப் பிள்ளையினது பங்கினைப் போல நாமும் சாயி அவதாரத்தின் பங்குதாரர் ஆவோம்.

அவதார புருஷர்களின் சக்தியும் ஆற்றலும் அளத்தற்கரியது. மக்களை இந்த யுகத்தில் மட்டும் அல்லாது பல யுகங்கள் கடந்த பின்பும் அவர்களை வழிநடாத்தும் ஆற்றல் அவர்களுக்கு உண்டு. தங்களது ஸ்தூல உடலை விட்டு நீங்கிய பின்பும் அவர்கள் பெருமை குறைவதில்லை. மாறாக நாட்கள் செல்லச் செல்ல அவர்களது பெருமையும், புகழும் மேலோங்குகிறது. இன்று சத்திய சாயி அவதாரத்தின் அளவற்ற ஆற்றலும் வல்லமையும் பன்மடங்கு அதிகரித்து வருவது கண்டு புட்டபர்த்தியில் இருக்கும் மகா சமாதியை தரிசிக்க அவர் அருள் பெற உலகில் எல்லா திக்குகளிலும் இருந்து மக்களை தினமும் சென்று கொண்டிருக்கிறார்கள். மாணிக்கவாசகர் சொன்ன "நிலத்தின் மேல் வந்தருளி நீழ்கழல்கள் காட்டி" என்ற வசாகத்தை நினைத்து உருகுகிறேன்.

ஜெய்சாயிராம்

டாக்டர்.ந.பிரேமதாசன் ஜே.பி
மண்டூர்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வானில் இருந்து குண்டுகள் பொழிந்தன பாபா அருளால் உயிர் தப்பினோம்.

பகவான் தன்னுடைய பக்தர்களின் மனவுறுதியை சோதிப்பது வழக்கம். அந்த வகையிலே, 1988ம் ஆண்டு தை மாதம் 27ம் திகதி பகல் 11 மணியளவில், நாங்கள் வசித்து வந்த யாழ்ப்பாணம் சண்டிலிப்பாய் வீட்டுக்கு அருகாமையில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி ஒருவர் மரணமானார். அதைத் தொடர்ந்து, சாதாரண சிவிலியன்கள் அமைதிப் படையினரால் தாக்கப்பட்டனர். அன்று நானும் எனது மகளும் வீட்டிலிருந்தோம். எமது வீட்டைச் சுற்றி வளைத்த அமைதிப்படையினர், சுடத் தொடங்கினார்கள். அன்று எமது வீட்டில் திருத்த வேலைகள் செய்து கொண்டிருந்த கட்டிடத் தொழிலாளர்கள் சிலர் காயமடைந்தனர். எனக்கு மரணம் கிட்டி விட்டதென்று உணர்ந்த நான், எனது பொக்கற்டயறியில் இருந்த பகவானின் படத்தை எடுத்து, "நான் இறப்பதனால் எனக்கு எதுவித வேதனையும் உணர்ச்சியுமின்றி இறந்து விடவேண்டும்" என பகவானிடம் இரந்து கேட்டேன்.

அச்சமயம் திடீரென்று அறைக் கதவைத் திறந்தவர்களில் ஒருவரின் தடியால் தாக்கப்பட்டு சுய நினைவிழந்தேன். தொடர்ந்து வந்த படையினர் என்னை சித்திரவதை செய்தனர் என்று எனது மனைவி மூலம் பின்னர் அறிந்தேன். எனது ஒரு விரலை முறித்த படையினர் சித்திரவதை செய்து கொல்ல நினைத்து செயல்பட்டுக் கொண்டிருந்தனர். துப்பாக்கி முனையில் வைக்கப்பட்டிருந்த எனது மனைவி இவற்றைப் பார்க்க சகிக்காது கடைசியில் "பகவானே" என்று பலத்த சத்தமிட்டார். பகவானின் நாமத்தை கேட்டதோ



தெரியவில்லை, உடனே படையினர் அனைவரும் வீட்டை விட்டு கலைந்து விட்டனர்.

பின்னர் நான் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு சுவாமியின் அருளால் குணமானேன். கர்மாவில் இருந்து யாரும் தப்ப முடியாது எனினும், சுவாமியின் அருளால் தண்டனை குறைக்கப்பட்டிருந்தது. அன்று முதல் ஒவ்வொரு வருடமும் ஜனவரி 27ல் எனக்கு திவசம் என நினைத்து பஜனை செய்து சுவாமியைப் பிரார்திக்கத் தவறுவதில்லை.

1992ம் ஆண்டு ஜூன் மாதம் 10ம் திகதி மூன்று குண்டு வீச்சு விமானங்கள் எங்கள் பகுதியில் வட்டமிட்டன. நாங்கள் எல்லோரும் வயல் பகுதிக்கு ஓடிவிட்டோம். குண்டுகள் பொழியப்பட்ட போது மக்கள் ஓலமிட்டனர். நாம் மாறாக "சாயிராம் சாயிராம்" என சுவாமியை கூவி அழைத்தோம். ஆறு குண்டுகள் பொழிந்தன. ஐந்து குண்டுகள் வெடித்து வீடுகள், கல்வளைப்பிள்ளையார் கோவிலின் மதில் என்பன

NATIONAL SAI YOUTH CONFERENCE
DIVINE LOVE
April 2016 Sri Lanka



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேதமாக்கப்பட்டதுடன் ஆறு பேர் அங்கு இறந்தனர். பகவானின் அற்புதத்தைப் பாருங்கள், எமது வீட்டுக்கருகில் விழுந்த குண்டு மட்டும் வெடிக்கவில்லை. வெடித்திருந்தால் எமது வீடு தரை மட்டமாகியிருக்கும். அங்கு நடந்ததைப் பற்றி கேட்டவர்களுக்கு "ஆபத்பாந்தவா" என்பதை விளக்கமாகக் கூறினோம்.

இறுதியாக, 11.06.94 ல் மருதடிவிநாயகர் ஆலய மான்மியத்தை மூன்றாவது பதிப்புடன் "வைட்பீல்டிலில்" இருந்த போது சுவாமியின் ஆசீர்வாதம் கிடைத்தது மறக்க முடியாத தொன்று. நான் "வைட்பில்ட்" பிருந்தாவன வளவுக்குள் சென்ற பொழுது, அங்குள்ள பாரிய மண்டபம் நிரம்பி விட்டது. வெளிநாட்டு பக்தர்கள் திரண்டிருந்தார்கள். உள்ளே போக முடியவில்லை. வெளிநாட்டு பக்தர்கள் திரண்டிருந்தார்கள். உள்ளே போக முடியவில்லை. நான் கவலைப்படாமல் வெளியிலே ஒரு தென்னை மரத்தின் அடியிலே உட்கார்ந்து கொண்டேன் பக்தர்களுக்கு தரிசனம் கொடுக்க வரும் பகவான், சாதாரணமாக வெளியே நான் இருந்த இடத்திற்கு வருவது வழக்கம் இல்லை.

ஆனால் அன்றுபகவான் மண்டபத்திற்கு வெளியே தரையில் நடந்து வந்தார். அங்கு என் முன்னால் வந்து நின்றார். என் தேகம் நடுங்க ஆரம்பித்து விட்டது. என்னால் பேச முடியவில்லை. மனம் பதகளித்தது. கண்களை மூடிக்கொண்டே அவர் பாதங்களைத் தொட எத்தனித்தேன். அவ்வளவுதான் என் ஞாபகத்தில் இருக்கிறது. நான் மெய் மறந்து பரவசமாகி விட்டேன் என்று நினைக்கிறேன்.

கண்களைத் திறந்து பார்த்த போது பகவான் இரண்டு அடிதள்ளி நின்றிருந்தார். அப்புறம் நடந்து சென்று விட்டார். மறு தினம் நான் "வைட்பீல்ட்டில்" உள்ள கடைகளில் பகவானின் படங்களைத் தேடித் தெரிந்து வாங்கிக் கொண்டிருந்தேன். அப்போது ஒருவர் என்னிடம் வந்து, "உங்களுடைய படம் என்னிடம் இருக்கிறது ஸ்ரூடியோவுக்கு வந்து வாங்கிக் கொள்ளுங்கள்" என்று கூறி விலாசக் காட்டையும் தந்தார். அங்கு நான் சென்று பார்த்த போது என் கண்களை நம்ப முடியவில்லை.

முதல் நாள் பகவானின் திருப்பாதங்களைத் தொட எத்தனித்த சமயம், அந்த "போட்டோகிராப்பர்" எங்கிருந்தோ பகவானையும் என்னையும் சேர்த்துப் படம் பிடித்திருந்தார்.

அந்தப் படத்தைக் கிடைத்தற்கரிய பொக்கிஷமாக மதித்து உடனே 15 ரூபா கொடுத்து வாங்கி வந்து விட்டேன். என்னே பகவானின் கருணை "தம்மை நினைத்தவரை என்றும் நினைத்திருக்க எப்படியெல்லாம் அருள் புரிகிறார். இந்த நடமாடும் தெய்வம்" என்று எண்ணும் போதெல்லாம் கண்ணீர் துளிக்கின்றதே

ஜெய் சாயிராம்

சுவாமிநாதன் தர்மசீலன்

**"பகவான் ஸ்ரீ சத்திய பாபா மனிதனாக உதித்த அவதார்"**


**18-01-98 வெளியிடப்பட்ட நற்சிந்தனைப் பகுதி**

சிறு காலத்திற்கு முன்பு பாராளுமன்ற அங்கத்தவர் சிலர் பகவானிடம் அவரைப் பற்றிக் கூறுமாறு கேட்டனர்.
அதற்குபகவான் கூறியது:
" மனிதர் மத்தியில் நான் ஒரு மனிதன்,
பெண்கள் மத்தியில் நான் ஒரு பெண்,
பிள்ளைகள் மத்தியில் நான் ஒரு பிள்ளை,
தனிமையின் போது நான் தெய்வம்"
இக் கூற்றைநாம் ஆழ்ந்து சிந்திப்பதால் தான் பகவான் யாரென்று ஓரளவு தெரியும்.
இன்னொரு தடவை:

"பகவான் யாரென்று விளங்க முனையாதே
அதில் நீ வெற்றியடைய மாட்டாய்.
என்னைப் பின்பற்றி, சொல்வதைச்செய்.
ஆத்ம எழுச்சிக்காக நான் சொல்வதைச் செய்ய வேண்டும்". என்று கூறினார்.
மேலும்:
"எல்லோரும் ஒரே மார்க்கம் அல்ல. மார்க்கம் ஒவ்வொருவருக்கும் வித்தியாசப் படும்".
"எனது அருகாமையிலும் அருமையிலும் நீ நெருங்கும் போது வெப்பத்தில் வெதும்பும் சந்தர்ப்பம் கூடிவிடும்" நன்றாக வெறுக்கப் பட்டால் இறைவனைஅடையலாம்.
கடவுளின் குரலைக் கேட்க வேண்டு மென்று கடவுள் விரும்பும் பொழுது, நம்மால் ஏன் கேட்க முடியவில்லை? மனிதன் தனது குரலை கேட்டுக் கொண்டேயிருந்தால் எப்படி கடவுளின் குரலைக் கேட்க்க முடியும். நாம் தூய்மையாக இருந்தால் நாம் கேட்க முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்வி பதில்



**ஹிஸ்லப்:**
சுவாமி சத்திய சாயி நிறுவனத்தின் நோக்கத்தைத் திருப்பிச் சொல்லுங்கள்

**சுவாமி:**
அமெரிக்கா நிறுவனத்திற்கு மாத்திரமல்ல உலகம் முழுவதற்குமே ஒரே நோக்கு. மனிதருக்குப் பரந்தளவில் தாங்கள் தெய்வீகமானவர்கள் என்பது தெரியாது. மனிதனாக என்ன இயல்புகளுடன் இருக்க வேண்டுமென்றே தெரியாது. அவர்களிடம் அகங்காரம், கோபம், பேராசை, பொறாமை, காமம், வெறுப்பு ஆகியன உள்ளன. இதெல்லாம் விலங்குத் தன்மைகளே. மனிதத் தன்மைகளாகா.

சாயி பக்தர்கள் விலங்குத் தன்மையிலிருந்து விடுபடாமல் ஏனையோருக்கு ஆன்மீகத்தைப் பற்றிக்கூற முடியும். சாயி நிலையங்களில் இரண்டு அல்லது மூன்று பக்தர்களாவது விலங்குத் தன்மையின்றி மனிதத் தன்மையுடன் வாழ்பவர்களாக இருக்க வேண்டும்.

தனிநபர் சமூகத்திலிருந்து வேறானவர் அல்ல. ஆகவே சமூகத்தை முன்னேற்றப் பாடுபட வேண்டும். விலங்குத் தன்மையிலிருந்து விடுபடுவது சகல படைப்புக்களுக்குமே நன்மையாயிருக்கும். இம் முயற்சி பகவான் மேலிருக்கும் அன்புக்காகவும், அவரின் கிருபையுடனும் நாமத்துடனும் எடுக்கப்பட வேண்டும்.

ஒவ்வொரு அங்கத்தவர்களும் தனது வாழ்வைத் தூய்மையாக்க வேண்டும். அவரது நோக்கு தூய்மையான பூரணமான வாழ்வும், பகவானின் போதனையை வாழ்வில் பின்பற்றுவதே இலட்சியமாகக் கொண்டிருக்க வேண்டும்.


சாயி பக்தனின் தூய்மையான வாழ்வை உலகம் எதிர்பார்த்து அதற்குரிய மாதிரி தன்னை உயர்த்திக் கொள்ளும். அப்படியான வாழ்வைப் பின்பற்றும்.

NATIONAL SAI YOUTH CONFERENCE DIVINE LOVE April 2016 Sri Lanka



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலரடி மலர்கள்



## இதய சுத்தி

மனத்தூய்மை பெற என்ன வழி?

மனத்தூய்மை மனதில் உள்ளது. அரிசியை உமி மூடியிருப்பது போல தூய்மையை அழுக்குகள் என்ற உமி மூடியுள்ளது. உமியினை நீக்கி அரிசியினை உணவாகக் கொள்ள வேண்டும். தோலினை அகற்றி வாழைப்பழத்தினை சாப்பிட வேண்டும். தோடம்பழத்தினைச் சுவைக்க அதன் கசப்பான தோலினை எடுத்து விட வேண்டும்.

இதயம் தூய்மையாகவே உள்ளது. ஆனால் அது ஆசைகளில் ஆழ்ந்துள்ளது. ஆசைகள் மனதை அசுத்தமாக்குகின்றன. தோடம்பழத்தின் கசப்பான தோல் போன்ற சுயநலமிக்க ஆசைகள் இதயத்தை மாசு படுத்துகின்றன. இதுவே தூய்மையற்ற நிலைக்கு காரணம். ஆசைகளை அகற்றியதும் மனம் தூய்மைபெறுகிறது.

ஒரு மாணவனைப் பார்த்து சுவாமி இவ்வாறு கூறுகிறார். விநாயகரை வணங்கும் போது "கணேசா நான் கணித பாடத்தில் அதி கூடிய புள்ளிகளைப் பெற வேண்டும். அப்பனே அருள் புரிய வேண்டும்". என்று வணங்காமல் "கணித பாடத்தில் அதி கூடிய புள்ளிகளை நாம் எல்லோரும் பெற அருள் புரியுங்கள் சுவாமி" என வணங்குதலே சிறப்பான தாகும்.

அனைவரது நலன் பற்றியும் பிரார்த்திக்கும் போது தூய்மைதானாகவே வந்து விடுகிறது. உங்கள் நலன் பற்றி மட்டுமே சிந்திக்கும் போது தூய்மை அற்ற நிலை உருவாகிறது.

## சிறுசேவை

"சமஸ்த லோகா சுகினோ பவந்து" சர்வ உலகிலுமுள்ள எல்லா உயிர்களும் ஆனந்தமும் சாந்தியும் பெற வேண்டும். மூன்று தடவை இவ்வாறு பிரார்த்திக்கின் றோம். நல்லது அப்படியா னால் நொடிப் பொழுதில் சர்வ உலக உயிர்களும் ஆனந்தமும் சாந்தியும் பெற்று விடுவதில்லையே. அது ஏன்? ஏனெனில் பிரார்த்தனையால் மட்டும் இது நிறை வேறுவதில்லை. நாமும் நம்மால் ஆன முயற்சிகளை எடுத்தாக வேண்டும்.

உங்களுக்கு ஒரு உதாரணம் கூறுகின்றேன். நீங்கள் அமைதியுடன் ஒரு இடத்தில் அமர்ந்து எனக்கு ஐஸ்கிறீம் வேண்டும். என்று வேட்கையோடு வேண்டினால் கடையிலுள்ள ஐஸ்கிறீம் உங்கள் வயிற்றினுள் வந்து விழுந்து விடாது. அதனை கடையிலிருந்து பெற்றுக் கொள்வதற்கான சிறிய சிரமத்தினை நீங்கள் எடுத்தே ஆக வேண்டும். அதனை நீங்கள் சுவைப்பதோடு செரிக்கவும் செய்ய வேண்டும். சமுதாய சேவையே உங்கள் நோக்கமாக இருக்கட்டும் நீங்கள் என்னை நினைத்து என்னுடனேயே இருங்கள். உங்களுக்கு நான் வழி காட்டுகின்றேன். மற்றவர்களுக்கு உதவ எத்தகைய முயற்சியினை மேற்கொள்ளவும் எவ்வளவு வலியைத் தாங்கவும் தயாராக இருங்கள்.

உங்கள் முயற்சி உளப்பூர்வ மானதாக இருக்கட்டும் உங்களது முயற்சி யுடன் பகவானின் கருணையும் இணைந்து கொள்ளும். கடவுளின் கருணையற்ற மனித முயற்சி மட்டும் பெரு வெற்றியினை பெற்றுத் தருவதில்லை. உலகத்தில் எல்லாப் பாகங்களிலும் எனது செயற் பாடுகள் விரிவடைந்து செல்ல இருக்கிற நான் பிறிதொரு புதிய சாய் அவதாரம் எடுத்துத் திரும்பவும் வருவேன்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மனோபலம்

சுவாமி, மனம் கூறுவதைக் கேட்காதீர். இதயம் கூறுவதைக் கேட்டு அவ்வாறே செயல்படுங்கள் என்று கூறுகின்றீர்கள். மனமா இதயமா எம்முடன் பேசுகிறது என்பதை எவ்வாறு தெரிந்து கொள்வது?

என்றைக்கும் இதயம் ஒன்றையே கூறும். இன்றல்ல நாளையல்ல பத்து வருடம் கழிந்தும் அதுமாறிக் கதைப்பதில்லை. உங்கள் நன்மையினை மட்டும் அது கூறுவதில்லை. எல்லோரும் நன்மை பெறும் விடயங்களையே அது கூறும்.

அமைதி மகிழ்ச்சி பெற இதயம் கூறுவதைக் கேட்டு அதன் வழி நடவுங்கள். மனதின் உபதேசங்கள் குழப்பத்தையும் குற்ற உணர்ச்சியையும் மட்டுமே கொடுக்கும்.
மனம் கூறுவதைத் தொடர்ந்து கேட்டு நடந்தால் மனதின் பலம் அதிகரிக்க அதன் ஆட்சியே நடைபெறும். இதயம் கூறும் வழி நடந்தால் இதயம் சக்தி பெறும். இதய மொழி கேட்டு அவ்வழி நடவுங்கள். இதற்கு அசாத்தியமான தைரியம் உங்களுக்கு வேண்டும்.

தைரியமானவர்கள் ஆன்மீக வழி செல்ல முடியும். தைரியமாய் இருங்கள். மன அமைதி பெறுங்கள். பயத்தை விடுங்கள் அமைதி காணுங்கள்.
இறை நம்பிக்கை இருப்பின்....
சீதாபிராட்டியாரை மீட்க வேண்டும். இராமபிரானும் அவரது படைகளும் இலங்கை செல்ல வேண்டும். சமுத்திரத்தைக் கடக்க வேண்டும். அதற்கு பிரமாண்டமான பாலம் அமைத்தல் வேண்டும். இதற்கு துணையாக இருந்தது அவரது சிறு குரங்குப் படைகள். பாலமும் கட்டப்பட்டது. எவ்வாறு பாலம் அமைக்க முடிந்தது. இது எவ்வாறு சாத்தியமாயிற்று, முழுமையான இறைநம்பிக்கை ஒன்றினால் மட்டுமே நடந்தேறிய காரியம் இது. இப்பொழுதுகூட பூரண இறைநம்பிக்கையால் இத்தகைய சம்பவங்கள் நடைபெறுகின்றன. இறைவன் மீது வைக்கும் நம்பிக்கை மற்றயதைவிட பலம் வாய்ந்தது.

கௌரவர் சபையில் திரௌபதிக்கு நடந்த அவமானத்தைக் காப்பாற்றியதும் அதே இறை நம்பிக்கை தான். பலம் பொருந்திய திரௌபதியின் ஐந்து கணவர்களும்கூட அந்த நேரத்தில் பயனற்றுப் போயினர். அவளின் இறை விசுவாசமே அவளைக் காப்பாற்றியது.

உங்கள் வசம் முழுமையான இறைநம்பிக்கை மட்டும் இருந்தால் உங்களால் எதையும் சாதிக்க முடியும். முழுமனதோடு பிரார்த்தனை செய்யுங்கள் உங்கள் பிரார்த்தனைகளை நான் நிறைவேற்றுவேன்.

தண்ணீர் பஞ்சம் தலைவிரித்தாடியது. மக்கள் மிகவும் அவதியுற்றனர், இதனைக் கண்ணுற்ற பகீரதன் ஆகாய கங்கையினை புவிக்குக் கொண்டு வருதல் ஒன்றே இதற்கான தீர்வு என உணர்ந்தான். தனித்து இதனை அவனால் நிறைவேற்ற இயலாது என உணர்ந்தான். சிவபெருமானை நோக்கித் தவமிருந்தான். ஜடாமுடியினூடாக சிவபெருமான் கங்கையை புவிக்கு கொண்டு வந்தார்.

இதுபோன்ற ஒரு மனப்பிரார்த்தனை உங்களுக்கு மிருந்தால் மிகுதியை நான் பார்த்துக் கொள்வேன். உங்கள் மூலமாக கருமங்களை நான் நிறைவேற்றித் தருகிறேன். இறுதி மூச்சு வரை உங்கள் சேவை தொடரட்டும்.

### சேவைக்கு பிரார்த்தனை

உங்கள் மீது கருணை பொழிய எனக்கு ஒரு காரணம் தேவைப்படுகிறது. சமூகசேவை செய்வதற்காக தூய மனம் கொண்டு நீங்கள் பிரார்த்திக்க வேண்டும். அத்தகு பிரார்த்தனை செய்த அந்தக் கணமே சமூகத்திற்கான பெரு நன்மையினை செய்வதற்கு நான் உங்களைப் பயன்படுத்திக் கொள்வேன். இத்தகைய உயர் குணம் கொண்ட குழந்தைகளை நான் தேடிய வண்ணம் உள்ளேன். அவ்வாறு பலரும் மாற்றமடைவார்கள் என நான் எதிர்பார்க்கின்றேன். இத்தகைய மனம் உடையவர்கள் பலர் உள்ளனர்.

ஒரு விளக்கினைக் கொண்டு பல தீபங்களை ஏற்ற இயலும். ஆனால் ஏற்றப்படும் தீபம் எண்ணெய் கொண்டதாக இருக்க வேண்டும். அதுதான் அன்பு எனும் எண்ணெய். உங்கள் இதயம் நிறைந்த அன்பு உள்ளவரை உங்களால் பல தீபங்களை ஏற்ற முடியும். இதுவெ உண்மையான வளர்ச்சியாகும்.


ஜெய் சாய்ராம்.

தொகுப்பு:
சி.சிறிஸ்கந்தராஜா
மந்திகை நிலையம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரசாந்தி சபைத் தலைவர் வைத்திய கலாநிதி நரேந்திரநாத்ரெட்டி அவர்கள் பகவானின் ரோதனா மஹோற்சவத்தினத்தன்று (24.4.2016) வெளியிட்ட செய்தி



சத் சித் ஆனந்தம், சத்தியம் சிவம் சுந்தரம் ஆன பகவானின் பொற்கமலப் பாதங்களில் எனது அன்பு நிறைந்த நன்றியுணர்வை சமர்ப்பிக்கின்றேன்.

சகல நாமங்களும் ரூபங்களும் அவரிடமே சேர்ந்தும், அவர் இவற்றிற்கு அப்பால் எங்கும் வியாபித்திருக்கும் தெய்வமேயாகும்.

அன்பர்களே! உங்கள் அனைவருக்கும் எனது அன்பான சாயிராம்!

இந்தப் புனித நாளில் எமக்கு பகவான் அளித்த அனைத்திற்கும், அவர் எங்களுக்காகச் செய்த தியாகத் திற்கும், எங்களை உய்விக்கும் நோக்குடன் செய்த செயல்கள் அனைத்திற்கும் நாம் நன்றிக்கடன் செலுத்துவோமாக.

பல நாடுகளிலுள்ள கோடிக்கணக்கான பக்தர்கள் 30 நாள் சாதனையை மேற் கொண்டுள்ளார்கள். செயல் மூலம், பிரார்த்தனை மூலம் போதனைகளை ஆழமாகப் படித்து அவற்றைப் பின்பற்றி சாதனை செய்துள்ளோம். எங்கும் வியாபித்துள்ள தெய்வீகம் எங்களுக்காக அழகான நாம ரூபத்தை தேர்ந்தெடுத்து எங்கள் மத்தியிலே செயற்பட்டது.

பகவான் யார்? அவரின் செய்தி என்ன? அவரின் செயல்கள் என்ன என்று நாம் சிந்திக்க வேண்டும். மனித உருவில் நடமாடும் அன்பே அவர். சந்திரனை சந்திர ஒளி மூலமே பார்க்க முடியும். அதே போல் இந்த தெய்வீக அன்பு உருவத்தை அன்பின் மூலமேயே உணர முடியும். 1968 ஆம் ஆண்டு மே மாதம் அருளிய உரையில், மனிதனால் சிந்திக்கக் கூடிய அத்தனை இயல்புகளும் தன்னிடம் அடங்கியுள்ளன. எவராலும் எந்த எந்த முயற்சியாலும் எவ்வளவு காலம் தெண்டித்தாலும் தனது முழுமையான தன்மையை ஒரு போதும் அறிய முடியாது என்று கூறியுள் ளார். நாங்கள் அவரின் போதனைகளைப் படித்துப் பின்பற்றினால் ஓரளவு இந்த அன்பை அனுபவிக்கலாம்.

மே 25 ஆம் திகதி 1947 இல் தமயனாருக்கு எழுதிய கடித மூலம் மனித குலத்திற்கே செய்தி வெளியிட்டுள்ளார். தனது அவதார நோக்கம் சகலருக்கும் பேரானந்தத்தை அளிப்பதும், மனிதரின் துன்பத்தை நீக்குவதுமேயாகும் என்று எழுதியுள்ளார். இதை நிறை வேற்று வதற்காக 123 நாடுகளில் சத்திய சாயி நிறுவனத்தை செயற்படுத்தியுள்ளார். இத்துடன் கல்வி நிறுவனங்களையும், வைத்திசாலைகளையும், குடிநீர்த்திட்ட ங்கள், கிராம சேவை ஆகியவற்றை நிறுவி யுள்ளார். கல்வியில் சத்திய சாயி பாடசா லைகளை ஸ்தாபித்தும், மனித மேம்பாட்டுக் கல்வியையும் தொடக்கி யுள்ளார். இதெல்லாம் எமக்குள் உள்ளு றையும் தெய்வீகத்தை வெளிக் கொணர் வதற்கேயாகும்.

24.4.2011 அன்று உடலை நீக்கியதும் பலர் துயரத்தில் ஆழ்ந்தார்கள். அவர் உடலை நீத்தாலும் எங்கும் போக வில்லை. எங்களுக்கு உள்ளேயும் வெளி யேயும் மேலும் கீழும் சுற்றியும் எங்கும் உள்ளார். நடக்கப்போகும் இளைஞர் மாநாட்டிற்கான முன்கூடல் மாநாடுகளுக் காக 18 நாடுகளுக்குச் சென்றிருந்தேன். அங்கெல்லாம் சுவாமியின் தெய்வீக வெளிப்பாடுகளைப் பற்றிச் சொன்னார்கள். அவர்கள் தெய்வீக வெளிப்பாட்டை அனுபவித்துக் கொண்டேயிருக்கிறார்கள்.

NATIONAL SAI YOUTH CONFERENCE
DIVINE LOVE
April 2016 Sri Lanka


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதர்கள் தங்களின் அறியாமையால் எனது மனித தோற்றத்தையே மனிதக் கண் மூலமாகப் பார்க்கிறார்கள். நானோ வியாபித்துள்ளேன் என்பதை அறியாதுள் ளார்கள்.

எவ்வாறு தெய்வீக அன்பை நாம் அனுபவிக்கலாம்? தெய்வீக அன்பைத் தெய்வீக அன்பின் மூலமே அனுபவிக் கலாம். இதை எப்படி நாம் விருத்தி செய்யலாம்? மனித மேம்பாடுகளை வாழ்வில் பின்பற்றுவதன் மூலமே அனுபவிக்கலாம். மனித மேம்பாடுக் கல்வியை சுவாமி சுருக்கமாக 3H என்று சொல்லியுள்ளார். அதாவது தலை, கை, இதயம் மூன்றும் இசைவுடனும், தூய்மையுடனும் இயங்குவதையே கூறியுள் ளார். இதற்காகத்தான் சத்திய சாயி நிறுவனத்தில் பக்தி, சேவை, கல்வி என்று மூன்று பிரிவுகளைத் தந்துள்ளார்.

சேவை தன்னலமற்ற எதிர்பார்ப் பற்ற நோக்குடன், ஆண்டவன் ஆண்ட வனுக்கே சேவை செய்கிறான் என்ற உள் நோக்குடன் செய்ய வேண்டும். இதனால் தான் சேவையை நாராயண சேவை என்று குறிப்பிட்டுள்ளார். எமது உன்னத மாற்றத் திற்காகவே சேவை செய்ய வேண்டும். எங்களிலுள்ள ஆறு எதிரிகளையும் களைய வேண்டும். எமது இதயத்தில் அன்பு ஊற்றெடுத்துப் பரவ வேண்டும். நாம் மற்றையவர்களில் குற்றம் காண்பதைத் தவிர்க்க வேண்டும். புறங்கூறலைவிட வேண்டும். நாமஸ்மரணை, ஜெபம், தியானம் ஆகியவற்றால் அன்பை விரிவாக்க வேண்டும். சில சாதனை யாளர்கள் எதனால் அழிந்தார்களெனத் தெரிய வேண்டும்.

சிவ பக்தனான இராவணன் காம ஆசையினால் அழிந்தான். கௌரவர்கள் பொறாமையினாலும் பேராசையாலும் அழிந்தார்கள். புத்திக் கூர்மையான ஹிரண்யகசிபு கோபத்தினால் அழிந்தான். பொறாமை மிகவும் சக்தி வாய்ந்தது. பரந்து இருக்கின்றது. பரந்த அழிவை ஏற்படுத்தும்.




நாம் சுவாமியின் போதனைகளைக் கிரமமாகப் படிக்க வேண்டும். உள்வாங்க வேண்டும். பின்பற்ற வேண்டும். சுவாமியின்
ஒவ்வொரு சொல்லும் மந்திரமாகும்.
ஒவ்வொரு வசனமும் நல்வாக்கியமாகும்
ஒவ்வொரு சம்பாஷணையும் கீதையாகும்
ஒவ்வொரு அருளுரையும் வேதமாகும்.
இக்காலத்தில் நாம் பாக்கியசாலிகள். சுவாமியின் போதனைகள் அனைத்தும் அச்சிலும், மின்ஊடகத்திலும் பதியப்பட்டுள்ளன. திரிவுபடாமல் நெடுங்காலம் இருக்கும்.

எமது சாதனைகளில் நான் யார்? என்ற விசாரணையே மிகவும் முக்கியமானது. இதன் மூலமே எல்லாம் ஒன்று என்று உணரலாம். நாம் தனிமனிதனில் மனம், வாக்கு, காயம் ஆகியவற்றில் ஒற்றுமையை ஏற்படுத்தி, பின்பு குடும்பத்தில், பின்பு சமூகத்தில், நிறுவனத்தில், படைப்பில் ஒற்றுமையை உணர வேண்டும். இதைத்தான் சுவாமி


**இனங்கள் பலவானாலும் பூமி ஒன்றே**
**நட்சத்திரங்கள் பலவானாலும் ஆகாயம் ஒன்றே**
**பாத்திரங்கள் பலவானாலும் களிமண் ஒன்றே**
**நகைகள் பலவானாலும் தங்கம் ஒன்றே**
**உயிரினம் பலவானாலும் மூச்சு ஒன்றே**
**மலர்கள் பலவானாலும் பிரார்த்தனை ஒன்றே**

என்று கூறியுள்ளார்.
சாராம்சமாக் கூறினால் இருப்பது ஒன்றே. அதுதான் ஆத்மா. நாம் ஆதிசங்கரரின் தலையைப் போலவும், ஜனகமகராஜனின் கைகளைப் போலவும், புத்த பகவானின் இருதயத்தைப் போலவும் விருத்தியடைய வேண்டும்.

ஆன்மீக முன்னேற்றத்தின் வெளிப்பாடு பயமின்மை யாகும். மரணத்தையிட்டுப் பயமிருக்கக்கூடாது. கடவுள் எம்முடன் இருக்கும் போது பயமேன்? அவதார் ஒரு கையினால் அபயமளிக்கிறார். மற்றக் கையினால் வரங்களை அளிக்கிறார். எமது பகவான் இரு கரங்களையும் உயர்த்தி அபயம் கொடுக்கிறார். நாம் பயமின்றி வாழ வேண்டும். சுவாமி எங்களுக்குத் தந்துள்ள அடுத்த வரம் அமைதி அல்லது சாந்தி. சுவாமி தனது ஆச்சிரத்திற்கு பிரசாந்தி என்ற பெயரை வைத்துள்ளார். இது அதி உயர் சாந்தி. இது எப்போதும் உள்ளது. ஒன்றாலும் குழப்பப் படமாட்டாது. நாம் சாந்தியை அனுபவித்து எல்லோரிடமும் பரப்ப வேண்டும்.

நாம் பகவானில் இதயத்தில், மனதாலும் ஆத்மாவாலும் அன்பு கொள்ள வேண்டும் எம்மில் பிரசாந்தி நிலைக்க வேண்டு மென்று பிரார்த்திப்போமாக.

ஜெய்சாயிராம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறுவனச் செய்திகள்



### பிராந்தியச் செய்திகள்

*கிழக்குப் பிராந்தியம்*

தூரப் பிரதேசங்களிலுள்ள மிகவும் பின் தங்கிய கிராமங்களில் ஸ்ரீ சத்தியசாயி நூல் நிலையங்கள் திறந்துவைப்பு.




"சாயிகமலம்"தாமரைக்கேணி பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தினால் நடைமுறைப் படுத்தப்படும் ஸ்ரீ சத்திய சாயி கிராமிய ஒன்றிணைக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ்வரும் மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைப் பகுதியில் மிகவும் தொலைவில் அடர்ந்த காட்டுப் பிரதேசத்தில் அமைந்துள்ள மிகவும் பின்தங்கிய கிராமங்களான வடமுனை மற்றும் ஊத்துச்சேனை ஆகிய கிராமங்களில் அம்மக்களின் வேண்டுகோளுக்கமைய ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு ஸ்ரீ சத்திய சாயி நூல் நிலையங்களைத் திறந்து வைக்கச் சுவாமி அருள் பாலித்தருளியுள்ளார். 14.01.2016ல் திறந்து வைக்கப்பட்ட இந்நூல் நிலையத்தை அமைக்கக் கொழும்பிலுள்ள ஒரு சாயி பக்தை அனுசரணை வழங்கியிருந்தார். தேவையான தளபாடங்கள், உபகரணங்கள், ஆவணங்கள் வழங்கப்பட்டதுடன், சாயி இலக்கியங்கள், சனாதன சாரதிகள், சாயிமார்க்கங்கள் மற்றும் ஏனைய சாயி வெளியீடுகள் என்பனவும் வழங்கி வைக்கப்பட்டன. இரண்டு நூல் நிலையங்களுக்கும் இரண்டு நூலகர்கள் கிராம மக்களின் ஒத்துழைப்புடன் நியமிக்கப்பட்டதுடன், அவர்களுக்குத் தேவையான பயிற்சிகளும் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் சாயி கமலம் தாமரைக்கேணி சாயி நிலையத்தலைவர் திரு.சி. சாமித்தம்பி, உபதலைவர் திரு. வி. ரமேஸ்குமார் மற்றும் திரு. முருகதாஸ், திரு.எஸ்.பிரதீபன், திருமதி. பிரதீபன் ஆகியோர் கலந்து கொண்டு பொருட்களை வழங்கி வைத்தனர். இந் நிகழ்வில் அக் கிராமங்களின் கிராமசேவர்கள் மற்றும் ஊர்ப்பிரமுகர்கள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.



*வட பிராந்தியம்*

**1) குடிநீர் வழங்கல்**

குடிநீர் வழங்கல் சேவை - ஜனவரி 4 ஆம் திகதி யாழ்ப்பாணம் நாவற்குழி பகுதியில் அண்மையில் மீளக் குடியமர்த்தப்பட்ட 51 குடும்பங்களுக்குமான குடிநீர் வசதிக்காக தண்ணீர் தாங்கிகள் இரண்டு அமைத்து வழங்கி தினசரி குடிநீர் வழங்குவதற்கு ஏற்பாடும் செய்யப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2) வீடமைப்பு சேவை**

அளவெட்டி பகுதியில் மனநிலை குன்றிய 18 வயதிற்கு குறைந்த 5 பிள்ளைகளைக் கொண்ட குடும்பம் ஒன்றிற்கு ரூபா 350000.00 பெறுமதியில் சிறு வீடு அமைத்து வழங்கப்பட்டது.

**3) குடிநீர் பவுசர் வழங்கல்**

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் அமைந்துள்ள தட்டுவன் கொட்டி கிராமத்தில் வசிக்கும் 102 குடும்பங்களுக்கு குடிநீர் தேவைக்கு என தண்ணீர் பவுசர் ஒன்று வழங்கப்பட்டது.



**4) மருத்துவ முகாமும் சேவையும்**

கிளிநொச்சி மாவட்டத்தின் சாந்தபுர கிராமத்தில் மேற் கொள்ளப்பட்ட மருத்துவ முகாம், அன்பு பொதி வழங்கல், பிரார்த்தனை ஊக்குவிப்பு, வீடியோ படக்காட்சி என்பன மேற கொள்ளப்பட்டது. கிளிநொச்சி சாயி நிலையத்தினரும் இணைந்து சேவைப் பணிகளில் செயற்பட்டனர். 350 மக்கள் இச் சேவையில் பயனடைந்தனர்.



5) 20.3.2016 திகதியன்று அன்புவார இறுதி நிகழ்வுகள் யாழ்ப்பாண நிலையத்தில் நடைபெற்றது. அன்புவார நிகழ்வு போட்டிகளில் 250 பாடசாலைகளைச் சேர்ந்த 900 மாணவர்கள் பங்கு பற்றினர். இறுதி நிகழ்வில் 69 பாடசாலை மாணவர்கள் ஆசிரியர்கள் உட்பட 450 பேர் கலந்து கொண்டனர். நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் திரு.இரவீந்திரன் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினராக யாழ் கல்வி வலய பணிப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.


**6) ஆராதனா மஹோற்சவத்தையொட்டி தாக சாந்தி**

யாழ்ப்பாணம் சாயி நிறுவனத்தின் ஏற்பாட்டில் யாழ் இராமநாதன் வீதியில் சத்திய சாயி ஆராதனா மஹோற்சவத்திற்கு முதல் 7 நாட்களும் நடமாடும் தாகசாந்தி நிகழ்வு மேற்கொள்ளப்பட்டது. நாட்டில் ஏற்பட்ட வெப்ப சூழலைக் கருத்தில்க் கொண்டு மேற்படி நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டது. தினசரி 30 லீட்டர் பாலில் தயாரிக்கப்பட்ட மோர் வழங்கப்பட்டது.



**6) ஸ்ரீ சத்திய சாயி ஆராதனா மஹோற்சவம்**

பகவான் பாபாவின் சமாதி தின நிகழ்வுகள் ஸ்ரீ சத்திய சாயி ஆராதனா மஹோற்சவம் எனும் நாமத்தில் அனைத்து சாயி நிலையங்களிலும் வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது. பல நிலையங்கள் முழுநாள் நிகழ்வாகவும் சில நிலையங்கள் மாலை நேர நிகழ்வாகவும் ஆராதனா மஹோற்சவத்தை கொண்டாடினர்.



யாழ்ப்பாணம் சத்திய சாயி சேவா நிலையம் 1967 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு எதிர்வரும் 2017 ஆம் ஆண்டு குருபூர்ணிமா தினத்துடன் 50 ஆண்டுகள் நிறைவடை வதையொட்டி இவ்வாண்டு குருபூர்ணிமா தினத்திலிருந்து அடுத்த ஆண்டு குரு பூர்ணிமா தினம் வரை பொன் விழா ஆண்டாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. பொன்விழா ஆண்டில் பல சேவைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆனைக்கோட்டை பகுதியில் அமைத்துக் கொடுக்கப்பட்ட சிறு வீடு- வடபிராந்தியம்



டாக்டர்.தீபக் ஆனந் அவர்கள் இலங்கையின் பல இடங்களுக்கு விஜயம் - வடபிராந்தியம்



அன்பு வார இறுதி நிகழ்வுகள் நடைபெற்றது. நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளத் திரு.ரவீந்திரா அவர்கள் கலந்து கொண்டார். - வடபிராந்தியம்



நாவற்குழியில் அமைத்து வழங்கப்பட்ட இலவச குடிநீர் விநியோகம் - வட பிராந்தியம்




கிளிநொச்சி - தட்டுவன் கொட்டி கிராமத்திற்கு வழங்கப்பட்ட குடிநீர் பவுசர் - வட பிராந்தியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹற்றன் சாயி நிலையம் - மத்திய பிராந்தியம்






முகப்புப் பகுதி



பிரார்த்தனை மண்டபம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org